DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1430
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 1, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை எதிர்த்து இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம்



யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனத்தினர் மற்றும் மீனவ சமூகங்களினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் "அழிக்காதே அழிக்காதே எமது வளங்களை அழிக்காதே, கடற்றொழில் அமைச்சரே இந்திய இழுவை படகுகளின் வருகையை நிறுத்துங்கள், கைதுசெய் கைதுசெய் இந்திய இழுவைப் படகுகளை கைது செய் என கோ'மிட்டு, பாதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கனடா வாழ் சமய சமூகத் தொண்டர்கள் இருவருக்கு தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீன குருமஹா சன்னிதானத்தினால் மயிலாடுதுறை அபயாம்பிகை திருக்கோவில் வழங்கப்பெற்ற உயர் கௌரவ விருதுகள்

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களுக்கு "சிவாகமக்கலாநிதி" எனும் விருது கனடாவில் தமிழ், சமய, சமூக நற்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் தொழிலதிபர், , திரு. கணேசன் சுகுமார் அவர்களுக்கு "சிவநெறிக்காவலர்" எனும் விருது**

(மயிலாடுதுறையிலிருந்து கனடா உதயன் சென்னைச் செய்தியாளர் பிரகாஷ்)



கடந்த 30-08-2023 புதன்கிழமையன்று தமிழ்நாட்டில் கனடா வாழ் சமய சமூகத் தொண்டர்கள் இருவருக்கு உயர் விருதுகள் வழங்கப்பெற்றன. தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீன குருமஹா சன்னிதானத்தினால் மயிலாடுதுறை அபயாம்பிகை திருக்கோவில் உயர் கௌரவ விருதுகள் வழங்கப்பெற்றன. மேற்படி விருதுகள் வழங்கும் வைபவத்தில் ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களுக்கு "சிவாகமக்கலாநிதி" எனும் விருதும், கனடாவில் தமிழ், சமய, சமூக நற்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் தொழிலதிபர், , திரு. கணேசன் சுகுமார் அவர்களுக்கு "சிவநெறிக்காவலர்" எனும் விருதும் வழங்கப்பெற்றன. (தொடர்ச்சி 12ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com


YOU ARE INVITED TO
Grand
OPENING
Ceremony of
Latika Gold House
20TH OCTOBER - 2023
Unit 37-35 Karachi Drive, (New Delhi Plaza) Markham, ON
(Markham Costco விற்கு அருகாமையில்)
Majestic City யில் அமைந்துள்ள Latika Gold House இன் Anniversary ஐ முன்னிட்டு $5000 க்கு மேல் தங்கநகை வாங்குபவர்கள் 21 & 22 ம் திகதி நடக்கவிருக்கும் இசை வெள்ளம் நிகழ்ச்சிக்கான VIP Ticket ஒன்றினை பெற்றுக் கொள்ளலாம்.
www.latikagoldhouse.ca Tel:- 416 423 7555 Cell:- 647 996 5922


Latika Gold House
Latika Production
பெருமையுடன் வழங்கும்
பிரமாண்டமான உள்ளரங்க இசை நிகழ்ச்சி
பொங்கிவரும்
இசை வெள்ளம்
தென் இந்திய கனடிய
கலைஞர்களின் சங்கமம்
CANADA
Tickets
$40
$60
Canada
Event Centre
Venue :
300 Water St, Whitby, ON L1N 9B6, Canada
21
October
Saturday 6pm
Tickets
VIP $100
VVIP $200
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.
416 423 7555 - 416 625 5010

# உதயன் கதிரோட்டம்

## இலங்கையில் இனவாதப் பேய்கள் வீதிகளில்: இனிமேல் வீடுகள் தான் பாக்கி!

உலகெங்கும் இனங்களுக்கிடையில் அல்லது மதங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி அவற்றால் நலன்கள் பல பெறலாம் என்றும் கனவு காண்பவர்களில் பலர் அரசியல்வாதிகளாகவே உள்ளார்கள். ஆனால் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கியவண்ணம் வீதிகளில் இறங்கி ஆவேசமாகத் திரிபவர்கள் யார் என்று நோக்கினால் அவர்களில் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் காடையர்களாகவும் இன்னொரு அணியினர் பௌத்த பிக்குகளாகவும் இருப்பார்கள்.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிராக தாண்டி விடப்பட்ட கலவரங்களின் பின்னணியில் சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளுமே அதிகளவில் காணப்பட்டார்கள்.

இனக்கலவரங்கள் இலங்கையில் கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக அரங்கேறி வருகின்றன. அவற்றை நினைத்தாலே அதிர்ச்சியும் அச்சமும் தோன்றி எமது தமிழ் மக்களை உள ரீதியாக பாதிக்கும் அளவிற்கு கலவரங்களின் தாக்கம் மிக மோசமானதாகவும் பாதிப்புக்கள் பலவற்றை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துவிடுகின்றன.

கடந்த சில வருடங்களாக இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மனங்களில் பீதியை ஏற்படுத்தும் வகையில பௌத்த பிக்குகளும் இனவாத நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளும் கருத்துக்களை வெளியிட்ட வண்ணம் செயற்பட்டு வருவதைக் கண்டு தமிழ் பேசும் அரசியல் விமர்சகர்கள் பலர இனவாதம் என்னும் அடித்தளத்திலிருந்து எழுந்து வரும் இனக்கலவரங்கள் பற்றிய அச்சத்தை சுட்டிக்காட்டி எச்சரித்து வந்துள்ளனர்.

ஏனெனில் தற்போது நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கு 'இலகுவான தீர்வாக' விளங்குவது இனக்கலவரங்களே என்பதை பெரும்பான்மை இன அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்.

இந்த வகையில் எமது பத்திரிகையின் பக்கங்கள் பலவற்றில் காணப்படும் செய்திகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றில் இனவாதம் மற்றும் இனக்கலவரம் பற்றிய எச்சரிக்கைகள் பதிவுகளாக காணப்படுகின்றன.

இலங்கையில் வாழும் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான வீ. தேவராஜ் அவர்களின் பதிவுகள் கொடிதான அந்த இனவாதம் பற்றிய எழுத்துக்களைக் கொண்டவையாக காணப்படுகின்றன.

அவர்கள் தனது பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டு எச்சரிக்கை செய்கின்றார். ''அதேவேளயில் நாட்டில் இன்னொரு இனக் கலவரத்தை உருவாக்குவதற்கான காய்கள் வேகமாக நகர்த்தப்படுகின்றன. பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினரும் பேரினவாதச் சக்திகளும் நடந்து கொள்ளும்விதம் அவர்களது அடாவடித்தனங்கள் வரம்பு மீறிய செயற்பாடுகள் மாத்திரமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல என களத்தில் சண்டித்தனம் காட்டுகின்றனர்.

இவைகளை "இலங்கை அரசாங்கம்" கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

"2022 ஆம் ஆண்டில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் அரசாங்கத்தை நடத்துகிறார்கள் என்று அன்று பிபிசி அறிக்கை ஒன்று இன்றைய அரசாங்கம் குறித்து 2022 ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி பிபிசி இவ்வாறு தெரிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு அரசாங்கத்திற்கு நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் யோசிப்பதற்கு நேரம் இருக்காது.தமது "அரசியல் இருப்பு" குறித்த கவலையே ரணில் - ராஜபக்ச' அணியினருக்கு உள்ளதெனலாம்.

• ரணில் விகரமசிங்க அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவானவர் அல்ல'' என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

.இவ்வாறான நிலையில். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி அவர்களது கொழும்பு இராணி வீதியிலுள்ள வீட்டிற்கு முன்பாக இனவாதிகள் சிலர் இன்றையதினம் குழப்பத்தில் ஈடுபட்டனர் என்ற செய்தி தற்போது எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைத்துள்ளது இதன்போது அவர்கள் இனவெறிக்கூச்சலிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பதற்றம் நிலவுகிறது. பிக்குவுடன் வந்த சிலரே இவ்வாறு குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என அச்செய்தி எழுதப்பட்டுள்ளது.

எனவே இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் பௌத்த பிக்குகளின் அடாவடித்தனங்கள் நேரடியாகவே அரங்கேறுகின்ற சம்பவங்கள் பல இடம்பெற்று வருகையில் கொழும்பில் காடையர்களும் பிக்குகளும் இனவாத அரசியல்வாதிகளும் ஒன்றாக இணைந்து இனக்கலவரம் ஒன்றுக்கான ஆரம்பப்புள்ளியை இடுகின்றபோது. அப்புள்ளியான அழிவிற்கு ஆரம்பமாக ஆபத்துக்களை கொண்டுவரலாம் என்ற எச்சரிக்கையை அனைத்து தரப்பினரும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதையும் நாம் இவ்வாரக் கதிரோட்டத்தின் முக்கிய கருப்பொருளாக எடுத்துச் சொல்ல முனைகின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road. Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## அராலி காச்சார ஒன்றியம் – கனடா

அராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் September 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு வழமைபோல் Sunnybrook Park இல் உட்புறம் Serina Gundy Park, Area 3 இல் (Leslie & Eglinton) நடைபெற உள்ளதால் சகல அங்கத்தினரையும், அராலி ஊர் மக்களையும், தலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**வெல்வரட்ண்: (647) 828-4614 | இரவிநேசன்: (647) 464-9508**
**உருத்திரன்: (647)294-6863**
**தனராஜா (ஐயா): (416)726-8569**

## கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்

**இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா அழைப்பு**

---------------------------------------

காலம்: 03-09-2023 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: மில்லீக்கன் பூங்கா - பிரிவு B
நேரம்: காலை 10.00 மணி

கனடா வாழ் இணுவில் மக்கள் அனைவரையும் இவ்வொன்று கூடல் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்போடு அழைக்கிறோம். சகல வயதினர்க்குமான விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல களிப்பூட்டும் வகையிலே இடம்பெறவுள்ளது.

**தொடர்புகளுக்கு:** **சாந்தி சர்வானந்தா: (647) 200-2177**
**மு. கிருபாகரன்: (416) 430-0422**
**ப. கஜஜெயன்: (416) 732-5898**

## For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

**416-706-8160**

## HELP WANTED

**Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.**

- Dishwasher
- Kitchen help
- Food delivery driver

**Contact: 416-624-2224**

## Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி

**Canadian Citizenship Exam** க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி **Canadian Citizenship Exam** எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

**Ramneet** *437-771-5294*

## BASEMENT FOR RENT

**Scarborough** நகரில் **Neilson & Mclevin** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் ஒரு அறைகொண்ட **Basement** உடனடியாக வாடகைக்கு உண்டு.
செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
விபரங்களுக்கு 416-299-4904




# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டார், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் நலன்களுக்காக செயற்பட்டுவருகின்ற குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன், அண்மைக்காலமாக இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் அழைக்கப்பட்டு விசாரணை என்கின்ற போர்வையில் அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளார்.

இறுதியாக, ஏப்ரல் 30-2022 அன்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு சுமார் ஒன்றரை மணிநேரம் விசாரிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர், 05-05-2022 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்.

அதற்கமைய, HRC/JA/086/2022 என்ற இலக்கத்தின் கீழ் முறைப்பாட்டினை பெற்றுக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவானது சுமார் 15 மாதங்கள் கடந்த நிலையில் 25-08-2023 அன்று கோமகன் அவர்களை மீண்டும் ஆணைக்குழு அழைத்துள்ளது.

அதனை ஏற்று ஆணைக்குழுவிற்கு சென்றபோது, அங்கு, பயங்கரவாத விசாரணைப்பிரிவினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிங்கள மொழிமூல பதில் தகவலை அவர்கள் வாசித்துக்காட்டியுள்ளனர்.

அதாவது, "தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் கோமகனது செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் கேட்டறிந்துகொண்டனர் என்றும், எவ்வேளையிலும் அவரை தமது அலுவலகத்திற்கு அழைத்திருக்கவில்லை" என்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரியப்படுத்தியுள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உண்மைக்குப் புறம்பான இத்தகைய செயற்பாடுகள், குடிமக்கள் சார்ந்து செயற்படுகின்ற சிவில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் கவலை வெளியிட்டுள்ளார்.

# இந்தியா சென்ற ஜனாதிபதி ரணில் ஆல் எமக்கு பயனில்லை — சம்மேளனத் தலைவர் புனிதப் பிரகாஷ் தெரிவிப்பு

அண்மையில் இந்தியா சென்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மீனவர்களின் பிரச்சனையை தீர்க்க முடியவில்லை என யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.

சனிக்கிழமை (26) யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் அத்துமீறலகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது.

இந்திய அத்துமீறிய மீன்பிடியினால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் நாமும் பல தடவைகள் இலங்கை ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டோம்.

இந்நிலையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க சென்றார்.

அவர் செல்வதற்கு முன்னர் அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு கோரிக்கை விடுத்தோம். ஆனால் ஜனாதிபதி இது குறித்து இந்திய பிரதமரிடம் பேசியதாக தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் பருத்தித்துறை தொடக்கம் மன்னர் வரையான நமது கடற்பரப்புக்குள் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



ஆகவே எமது மீனவர்களை தொடர்ச்சியாக இந்திய அத்துமீறிய மீன்பிடி படகுகளின் வருகையால் பாதிக்கப்பட்டு வர நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

தற்போது அமைச்சர டக்ளஸ் தேவானந்தா சீன சென்றுள்ள விடயம் தொடர்பில் ஊடகங்களில் பல்வேறு விதமாக பேசப்பட்டு வருகிறது.

அமைச்சர் கடந்த மாதம் இந்தியா சென்றார் இந்த மாதம் சீனா செல்கிறார் எதிர்வரும் மாதம் அமெரிக்கா செல்லவுள்ளதாக அறிகிறோம்.

அமைச்சர் ஒருவர் வெளிநாடுகளுக்கு செல்வது வழமையான விடயமாக பார்க்கப்படுகின்ற நிலையில் எமது கடற்தொழில் அமைச்சர் எமது மீனவ மக்களின் பொருளாதார ரீதியான அபிவிருத்திக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆசியா அவிருத்தி வாங்கியும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்துக்காக உதவி செய்ய உள்ள நிலையில் ஜப்பான் நாடும் மீனவ மக்களின் தொழிலுக்கு தேவையான உபகரணங்களை வழங்க உள்ளதாக அறிகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# முல்லைத்தீவு — பாலிநகர் பகுதியில் வர்த்தக நிலையத்திற்கு தீ வைப்பு!

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பாலிநகர் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.



26-08-2023 அதிகாலை 4.00 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாற்றுவலுவுள்ள ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வந்த வர்த்தக நிலையமே இவ்வாறு இனம் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் குறித்த வர்த்தக நிலையத்தில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிசார் முன்னெடுத்து இருந்த வேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் மல்லாவி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் முக்கிய அறிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை 28-08-2023 முதல் ஒரு வாரத்திற்கு சிரமதானம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பு மேற்பார்வையில் அந்த நீர் நிலைகளுக்கு பொறுப்பான பிரதேச சபைகள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் போன்றன நடவடிக்கை வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள இயற்கையான குளங்கள் மற்றும் கேணிகளை தனியார் ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க அந்த நீர் நிலைகளுக்கு பொறுப்பான திணைக்களங்களால் உரிய நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டது.

அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக இடம்பெற்ற வரட்சி தொடர்பான கலந்துரையாடலில் குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட தூர்வாரப்படாத குளங்கள் மற்றும் கேணிகளை மாநகர சபை பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் பொது அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாக தூர்வாரி சுத்தப்படுத்த முடியுமெனவும் அதற்கு சில நிறுவனங்கள் தாமாகவே முன்வருவார்களென யாழ்ப்பாண பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டது.

மேலும் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள இவ்வாறான கேணிகளையும் நீர் நிலைகளையும் துப்பரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தின் பல்வேறு பொதுக்கிணறுகள், விவசாய கிணறுகள் பல பாழடைந்து பயன்பாடற்று காணப்படுவதாலும் அவற்றை சுத்தப்படுத்தினால் குடிநீர்த் தேவைக்கு அவற்றைப் பயன்படுத்த முடியுமெனவும் எதிர்காலத்தில் நன்னீரை சேமித்து வைக்க அவற்றை பயன்படுத்த முடியுமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய இவ்வாறான கிணறுகள் பற்றிய விபரங்களை ஒரு வார காலத்தினுள் சமர்ப்பித்து வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கும் அவ்வப் பிரதேச மக்களுக்கு வேலைக்காக உணவு பெறும் திட்டத்தினூடாக அக்கிணறுகளை துப்புரவு செய்வதற்கான சாத்தியம் பற்றி ஆராயுமாறு உலக உணவுத் திட்ட அலுவலரிடம் அரசாங்க அதிபரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



# மீசாலைப் பகுதியில் தேக்கமரக் குற்றிகளுடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம் - சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் மூலமாக, சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலைப் பகுதியில் வைத்து திங்கட்கிழமை காலை 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான தேக்க மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

கனகராயன்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி டிப்பர் வாகனத்தில் கருங்கல் கிரவலுக்குள் மறைத்து எடுத்து வரப்பட்ட 22 தேக்க மரக் குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வாகன சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை பகுதியில் கடமையில் நின்றிருந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சந்தேக நபர் பொலிஸாருக்கு 5 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்க முற்பட்ட போதிலும் கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

கைதான சந்தேகநபர் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நேர்மையான அரசியல் தலைவர் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும் — சரவணபவன் தெரிவிப்பு

பு. கஜிந்தன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நேர்மையான அரசியல் தலைவர் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும்.

சிங்கள ஆட்சியாளர்கள் யாரும் எங்கள் குரல்களைச் செவிமடுக்கத் தயாரில்லை. என்றாலும் அவர்களில் நேர்மையான ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவரை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். போதாததற்கு தமிழ் வாக்குகள் இல்லாமலேயே வெல்லலாம் என்ற வெறி அவர்களுக்கு ஊட்டப்பட்டால் தமிழர்கள் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நேர்மையான ஒருவரை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்.

இவ்வாறு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன் கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது ஜனனதினம் கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டையில் இடம்பெற்றது. இதன் நினைவுப்பேருரையை நிகழ்த்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது,

கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது

13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையானதும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சூட்டோடு சூட்டாக இந்தியப் பிரதமருக்குச் சொன்னவர் தளபதி அமிர்தலிங்கம். இலங்கை விவகாரத்தில் இந்தியாவைத் தாண்டி எந்தவொரு சக்தியும் தலையீடு செய்ய முடியாது என்ற எண்ணவோட்டம் அன்று இருந்தபோதும், இந்தியப் பிரதமருக்கு அவ்வாறு துணிந்து கடிதம் எழுதினர்.

எமது மக்களுக்கு எது தேவையோ அதனையே நாம் கோரவேண்டும். இன்னொரு தரப்பின் தேவைக்காக எமது நிலைப்பாட்டை கொள்கையை நாம் விட்டுக்கொடுக்கக்கூடாது. இப்போதும் அந்தக் காலச் சூழல் பொருத்தமானது.

13ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்குத் தீர்வுக்காகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது அவர்களுக்கு தீர்வாகவில்லை என்பதால்தான் இந்த நாட்டில் போர் மூண்டது என்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியிர் ஹரிணி அமரசூரிய உரையாற்றியிருந்தார்.

13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு தீர்வாகவில்லை என்பதை தமிழர்கள் மாத்திரமல்ல இந்த நாட்டின் ஆட்சியாளர்களும் கடந்த காலத்தில் ஏற்றிருந்தார்கள். அதனால்தான் 1987ஆம் ஆண்டின் பின்னர் மங்கள முனசிங்க அறிக்கை, சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதி, தற்போதைய ஜனாதிபதி அன்று பிரதமராக இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய 6 சுற்றுப் பேச்சுக்கள் அதன் ஊடாக சம்'டி அதிகாரப் பகிர்வுக்கான இணக்கம், மஹிந்த ராஜபக்ச காலத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சிக்குழுவின் தீர்வுப் பொதி, சில ஆண்டுகளுக்கு முன்னர் நல்லாட்சி காலத்தில் புதிய அரசமைப்பு என்று அனைத்து முயற்சிகளும் ஏன் எடுக்கப்பட்டன? 13ஆம் திருத்தம் தீர்வு என்றாலோ அல்லது அதனை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு முன்னேற முடியும் என்றாலோ இவ்வளவும் ஏன் நடந்தது?

உங்கள் எல்லோருக்கும் குதிரையும் கரட்டும் கதை தெரியும். ஒரு குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டி விட்டால் அதை நோக்கி குதிரை ஓடிக்கொண்டேயிருக்குமாம். அதற்கு ஒருபோதும் தெரியாது அந்தக் கரட் கிடைக்காது என்று. அதைப்போலத்தான், எங்களுக்கு முன்னாலும் 13ஆம் திருத்தம் என்ற கரட்டை கட்டி விட்டிருக்கின்றார்கள். அதன் பின்னால் நாங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றோம். அது தவறானது. அன்று எங்கள் தளபதி நிராகரித்தமை, 13ஆம் திருத்தத்தில் எதுவுமில்லை என்பதால்தான். அது உண்மை. இவ்வளவு காலத்தில் நாம் அதைப் பட்டறிவாகவும் பெற்றிருக்கின்றோம்.

ஒரு பேச்சுக்கு சொல்கின்றேன். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திவிட்டால் எங்கள் பிரச்சினை தீர்ந்துவிடுமா? இல்லை. ஆனால், 13ஆவது திருத்தத்தை சிங்கள அரசாங்கம் தந்துவிட்டால் அதன் பின்னர் அவர்கள் என்ன சொல்வார்கள். சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம். அவர்களுக்கு 13ஆவது திருத்தத்தை வழங்கிவிட்டோம். அதிகாரங்களை வழங்கிவிட்டோம். இதையெல்லாம் சொல்வார்களா? இல்லையா? அதனால்தான் சொல்கின்றோம், ஒன்றுமில்லாத 13ஐ பற்றி பேசி பேசி காலத்தை இழுத்தடிப்பதை விட சம்'டியைக் கோருவோம்.

எல்லோரும் சொல்கின்றார்கள். 13ஆவது திருத்தத்தைப் பெற்று படிப்படியாக முன்னேறலாம் என்று. இந்த 35ஆண்டுகளில் எவ்வளவு படிகள் ஏறியிருக்கின்றீர்கள்? 1987ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 13ஆவது திருத்தத்தின் ஊடாக எவ்வளவு முன்னேறியிருக்கின்றீர்கள்? சரி புலிகள் இருந்தமையால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றால் போர் முடிந்த 14 ஆண்டுகளில் எவ்வளவு முன்னேறியிருக்கின்றீர்கள்? மாறாக பின்னோக்கித்தான் போயிருக்கின்றோம். திவிநெகும சட்டத்தைக் கொண்டு வந்து மாகாண அதிகாரங்களைத் திருடினார்கள். மத்தி தனக்குத் தேவையான ஒவ்வொன்றையும் மாகாணத்திலிருந்து பிடுங்கியிருக்கின்றது. தேசியப் பாடசாலைகள் என்ற பெயரில் மாகாணப் பாடசாலைகள் மத்தி வசமாகியிருக்கின்றது. அப்படியிருக்கையில் ஏன் 13 இன் பின்னால் இன்னமும் அலைந்து கொண்டிருக்கின்றீர்கள்? அதைவிடுங்கள்.

தேர்தலுக்கு அவர்கள் தயார்

தென்னிலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஐ ஏன் பேசுபொருளாகியிருக்கின்றார்? ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தின் ஒன்றாகவே அவர் இதனை முன்னிறுத்தியிருக்கின்றார். மீள முடியாத சர்வதேசக் கடன்கள், பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களுக்காகக் கோத்தாபயவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து துரத்திய சிங்கள மக்களும் பிக்குகளும் 13ஐ பற்றியே இப்போது பேசிக்கொண்டிருக்கின்றன.

எதையும் திசைதிருப்பி மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கித் தமது காரியங்களைக் கன கச்சிதமாகச் செய்து முடிப்பதில் ரணில் மாத்திரமல்ல, சிங்கள ஆட்சியாளர்கள் எல்லோருக்கும் அது கைவந்த கலை.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக சிங்கள தேசம் தயாராகின்றது. எமது மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்யப்போகின்றார்கள்? எங்கள் அரசியல் தலைவர்களிடம் அது தொடர்பில் ஏதாவது உரையாடல் இருக்கின்றதா? இல்லை. எல்லோரும் சிங்களத்தின் தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தலுக்கு எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கின்றார்களே தவிர, நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்பது பற்றிச் சிந்திக்கவில்லை.

கோத்தாபய விரட்டப்பட்டதன் பின்னர் சிங்கள - பௌத்த பேரினவாதம் மீண்டும் எழுச்சியுறாது என்று பலரும் சொல்லியிருந்தார்கள். ஆனால் காலம் அது பொய் என்பதை கண்முன்னே காட்டுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்கள் யாரும் தமிழர்களின் வாக்குகள்தான் தீர்மானமிக்கது என்று நினைத்து அவர்களுடன் பேரம் பேசலுக்கு போகக்கூடாது என்பதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் தெளிவாக இருக்கின்றது. அதற்கான நகர்வுகளாகவே, இனவாதத் தீயை மூட்டியிருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் சிங்கள ஆட்சியாளர்கள் யாரும் எங்கள் குரல்களைச் செவிமடுக்கத் தயாரில்லை. போதாததற்கு தமிழ் வாக்குகள் இல்லாமலேயே வெல்லலாம் என்ற வெறி அவர்களுக்கு ஊட்டப்பட்டால் தமிழர்கள் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவரை தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும்?

அதேவேளை, ஆட்சியிலிருக்கும் எந்தவொரு ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்தின் உதவியின்றி எதுவும் செய்யமுடியாது என்றால், தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்யக் கூடிய நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தினால் போதுமே. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளாமல் முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் பார்வையாளர்களாவதே பொருத்தம் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாண ஆளுநரின் செயலாளரான வாகீசன் மற்றும் வாகீசன், குகநாதன் ஆகியோரது பதவிகளை மாற்ற திட்டம்

வட மாகாண ஆளுநரின் செயலாளரான வாகீசன் மற்றும் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) குகநாதன் ஆகியோரின் பதவிகளை மாற்றுவதற்கு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் திட்டமிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் எவ்வித ஊழல் மோசடிகளில் தொடர்புபடாத நேர்மையான அதிகாரிகளை அவர்கள் வகித்த பதவிகளில் இருந்து விலக்கி கீழ் நிலைப் பதவிகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரின் செயலாளராக இருந்த வாகீசனை மகளிர் விவகார அமைச்சுக்கும் மகளிர் விவகாரத்தில் அமைச்சின் செயலாளராக இருந்த ரூபினி வரதலிங்கத்தை பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகத்திற்கும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பிரதிப் பிரத செயலாளராக இருந்த குக நாதனை உள்ளூராட்சி அமைச்சுகும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த தடவை வடமாகாண ஆளுநராக பி.எஸ்.எம். சாள்ஸ் பதவி வகித்தபோது மன்னாரில் அரச காணிகள் பகிர்ந்தாளிப்பதில் தனக்கு சார்பாக நடந்து கொள்ளவில்லை என்பதற்காக மாகாண ஆணையாளர் பதவியில் இருந்து குகநாதனை மாற்றினார்.

# மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் பிறந்ததினம்



முன்னாள் எதிர்கட்சி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைந்துள்ள அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலை வளாகத்தில் பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரால் விசேட நிகழ்வுகள் 26-08-2023 காலை 7 மணியளவில் முன்னெடுக்கபட்டது.

இதன்பொழுது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக் கட்சி தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனால், 96ஆவது அகவையை நினைவுறுத்தும் முகமாக கேக்வெட்டி, அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலைக்கு மலர்மாலையும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.



இந்நிகழ்வில் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணிசெயற்பாட்டாளர் பரமானந்தவள்ளி, பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் மரணம்!

குளவி கொட்டுக்கு இலக்காகி 26-08-2023 அதிகாலை 1 மணியளவில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் தேவாலயத்திற்கு சென்றுகொண்டிருந்தார். இதன்போது பனையில் இருந்து கீழே விழுந்த குளவி கூட்டில் இருந்த குளவிகள் அவரை கொட்டின.

இந்நிலையில் அவர் மிருசுவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 11 மணியளவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தவசிகுளம் - மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இமானுவேல் ஜேசுரட்ணம் (வயது 79) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தமிழர்களின் பூர்வீகத் தண்ணிமுறிப்பு கிராமம் மீள் குடியேற்றப்படும்வரை தொடர்ந்து போராடுவோம் – ரவிகரன்



தமிழர்களின் பூர்வீகக் கிராமமான தண்ணிமுறிப்பில், எமது தமிழ் மக்கள் மீளக் குடியமர்த்தும்வரை நாம் தொடர்ந்து மக்களோடு இணைந்து போராடுவோமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்புப்பகுதியில், தொல்லியல் மற்றும், வனவளத் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்கு அரசு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் இணைந்து குறித்த பகுதிக்கு கள விஜயம் ஒன்றை இன்று மேற்கொண்டனர்.

குறித்த கள விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு, தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது 2023ஆம் ஆண்டு ஆகிவிட்டபோதும் அந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.



இந்நிலையில் தமது காணிகளைத் தாமே துப்பரவு செய்து, விவசாய நடடிக்கைகளையும் மேற்கொள்ளும் முயற்சியை மேற்கொண்டபோது, தொல்லியல் திணைக்களத்தாலும், வனவளத்திணைக்களத்தாலும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறிருக்க தமது பூர்வீக விவசாயமற்றும், குடியிருப்புக் காணிகளை மீட்க இந்தமக்களும், இந்த மக்களோடு, மக்கள் பிரதிநிதிகளான நாமும் தொடர்ந்து போராடிவருகிறோம்.

அந்தவகையில் இம்மாதம் 16ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் இந்த காணி விடுவிப்பு தொடர்பாகவே பேசப்பட்டது. அதற்கமைய நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு இங்குள்ள நிலவரங்களைப் பார்வையிடுவதென முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய தண்ணிமுறிப்பு பகுதிக்கு வருகைதந்து இந்த ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் காணிவிடயம் தொடர்பான நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டு சிலமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படயில் சில பகுதிகள் விடுவிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளை தற்போது விடுவிப்பதற்கு முடியாத சூழல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே விடுவிக்கப்பட முடியாத காணிகள் தொடர்பில் மாவட்டசெயலர் உரிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிக்கை சமர்ப்பித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தவகையில் இந்த காணிவிடுவிப்புத் தொடர்பிலான எமதுமக்களதும், மக்கள் பிரதிநிதிகளான எமது தொடர் வலியுறுத்தலுக்கு கிடைத்த ஒரு முன்னேற்றமாகப் பார்க்கின்றோம்.

இந்த மக்களின் காணிகள் அவர்களுக்குக் கிடைக்கும்வரை நாம் தொடர்ச்சியாக மக்களோடு துணை நிற்போம் - என்றார்.

# மன்னாரில் பயறு அமோக விளைச்சல் அறுவடையை பார்வையிட்டார் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

- மன்னார் நிருபர் (29-08-2023)

விவசாய செய்கை மூலம் சிறந்த ஒரு பொருளாதாரக் கொள்கை ஒன்றை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் விவசாய அமைச்சினாலும், மாகாண குறித் தொதுக்கப்பட்ட நிதியத்தின் மூலமும் மற்றும் காம காரர்கள் சொந்த பணத்திலும் விவசாயிகளுக்கு பயறு நடுகைக்கான பொருட்கள் வழங்கப்பட்டு மன்னார் மாவட்டத்தில் சிறுபோக செய்கையில் சுமார் 1600 ஹெக்டயர் நிலப்பரப்பில் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள நெல் வாயில்களில் மாற்றுப்பயிராக பயறு பயிரிடப் பட்டிருந்தது.



குறித்த பயிர் செய்கையின் அறுவடையை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் அவர்கள் வட்டுப்பித்தான் மடு பகுதியில் பயிரிடப்பட்ட அறுவடை செய்யப்பட்டு வரும் குறித்து பயிர் செய்கையை பார்வையிட்டார்.



இதன் அடிப்படையில் குறித்த அறுவடை மூலம் மன்னர் மாவட்டத்தில் 900 மெட்ரிக் டன் பயறு விற்பனைக்காக உள்ள நிலையில் ஒரு கிலோ கிராம் பயிறு 825 ரூபாய் தொடக்கம் 850 வரை விற்கப்பட உள்ளது.

குறித்த பயிர் செய்கை மூலம் பெண்கள் நாளாந்தம் சுமார் 5000 ரூபாய் வருமானத்தை தரும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# எங்கள் அன்புக்குரியவர்களின் அவல நிலையை அறிய ஒரு சர்வதேச குழுவை நியமிக்கவும்

## வடக்கு கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது சங்கத்தின் ஊடக அறிக்கை



வடக்கு கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது சங்கமானது ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எங்கள் அன்புக்குரியவர்களின் அவல நிலையை அறிய ஒரு சர்வதேச குழுவை நியமிக்கவும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் என்ற வகையில், எங்களின் அன்புக்குரியவர்களின் அவலநிலையை சுயாதீனமாக ஆராய்வதற்காக சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். இதன் மூலம் தான் அவர்கள் காணாமல் போன சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொண்டு வர முடியும்.

முயலும் நாடுகள் தமது நாட்டில் அல்லது தமது அன்பிற்குரியவர்கள் வாழும் நாட்டில் இப்படி நடந்துகொள்வார்களா? இலங்கையில் 1958ம் ஆண்டில் இருந்து தமிழர் மீதான இனவழிப்பும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலும் நடந்தேறியவண்ணம் உள்ளது. 2009ம் ஆண்டு இறுதிக்கட்ட போரின் போது மட்டும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோரை படுகொலை செய்தும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டோரை வலிந்து காணாமலாக்கியும், பல்லாயிரக்கணக்கானோரை ஊனமுற்றவர்கள் ஆக்கியும் தமிழினத்தை துவம்சம் செய்த சிறிலங்கா அரசுக்கு எவ்வித கண்டனத்தையும் தெரிவிக்காத சர்வதேசம், கொலையாளியையே நீதிபதியாக்க கடும் பிரயத்தனப்படுவது ஏன்? பாதிக்கப்பட்டவர்கள் கேட்பதற்கு நாதியற்ற தமிழர்கள் என்பதாலா? ஆனால் சிரியா, உக்ரைன் போன்ற நாடுகளில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே பல நாடுகள் கண்டனங்களை தெரிவிப்பதும் எவ்வித தாமதமின்றி உடனடி நடவடிக்கைகளை எடுப்பதும் எம்மை ஆச்சரியப்படவைக்கிறது. ஏன் இந்த பாரபட்சம்?

OMP தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பதில்

UN மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் திருமதி. மிசெல்லே பசேலெட் அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது அறிக்கையில், OMP மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றுக்கான சமீபத்திய நியமனங்கள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வலுவிலகச் செய்வதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்று கொடுக்க சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரப்படுத்தவும்.

நீதியை அடைவதற்கு, சுதந்திரமான சர்வதேச பொறுப்புக்கூறல் செயல்முறை மட்டுமே போதுமானது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரப்படுத்துவதன் மூலமே நீதியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையும், முந்தைய மனித உரிமைகள் ஆணையாளர்கள், சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு உட்பட பல ஐ.நா அதிகாரிகளால் வழிமொழியபட்டதையும் இதில் சுட்டி காட்ட விரும்புகின்றோம்.

ரோம் சாசனத்தில் கைச்சாத்திடாத வடகொரியா, சிரியா, ரஷ்யா, மியன்மார் போன்ற நாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதி தேட வழிமுறைகளை கண்டறிய முடிந்த சர்வதேச சமூகத்தினால் சிறிய நாடான சிறிலங்காவை நீதியின் முன் நிறுத்த பின்னாடிப்பதின் காரணத்தை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்துடன் சிறிலங்காவின் பொருளாதார நிலையை சீர்படுத்த முயலும் நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் மீண்டும் ஒரு மனித பேரழிவு, இனவழிப்பு இந்த மண்ணில் நிகழாமையை உறுதிசெய்ய வேண்டும். சிறிலங்கா அரசு ரோம் சாசனத்தில் கைச்சாத்திடுவதை முன் நிபந்தனையாக முன்வைக்க வேண்டும்.

சிறிலங்கா அரசுக்கு அவகாசம் கொடுத்து காலத்தை இழுத்தடித்ததன் மூலம் 180 இற்கும் மேற்பட்ட பெற்றோரை இழந்து “கண்கண்ட நேரடியான சாட்சிகள் 180 பேர்” அழிந்தது தான் மிச்சம். மீண்டும் TRC என்ற பெயரில் வேறோர் உள்ளக பொறிமுறையை எங்கள் மீது திணித்து கால இழுத்தடிப்புக்கு துணை போவதன் மூலம் மிகுதியுள்ள நேரடிசாட்சிகளான எங்களையும் இறக்க விட்டு சாட்சிகள் அழிவதற்கு துணை போகாமல் எங்களின் கோரிக்கையான சர்வதேச விசாரனை ஒன்றின் மூலம் ICC க்கு அல்லது விசேட தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் எங்களுக்கு விரைவான நீதியை பெற்றுத்தர சர்வதேசமும், ஐ.நா வும் முன்வரவேண்டும் என்று இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மீண்டும் ஒரு தடவை எமது கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

இனவழிப்பு மீள நிகழாமைக்கு நிரந்திர அரசியல் தீர்வு அவசியம்

அத்துடன் இன்று வரை தொடர்ந்து நிகழ்ந்து வரும் இனவழிப்பும் பௌத்த மயமாக்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்நிலை மாறி தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவும் இத்தீவில் அமைதி நிலை ஏற்படவும் ஓர் நிரந்திர அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். இத்தீர்வானது வடக்கு கிழக்கு மாகாணங்களை தாயகமாக கொண்ட மக்களிடையே சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் சர்வசன வாக்கெடுப்பினூடக தீர்மானிக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எமக்கு விமோசனம் இந்தியாதான் என நம்பியவர் அமிர்தலிங்கம் — 96வது பிறந்த தின நிகழ்வில் ஜெபநேசன் அடிகளார் தெரிவிப்பு

புு. கஜிந்தன்





தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு இந்தியாவே விமோசனம் வழங்கும் என அன்றே நம்பிய தலைவர் அமிர்தலிங்கம் என முன்னாள் பேராயர் ஜெபனேசன் அடிகளார் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை செல்வநாயகம் அறக்கட்டளை நிலையத்தில் இடம்பெற்ற அமிர்தலிங்கத்தின் 96 ஆவது பிறந்த தின நிகழ்வில் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1927 ஆம் ஆண்டு பிறந்த அமிர்தலிங்கம் 1987 ஆம் ஆண்டு இறக்கும் வரை தமிழ் மக்களின் வடிவுக்காக போராடிய தளபதி.

சிறந்த தமிழ் பேச்சாற்றலும் ஆங்கில மொழி புலமையும் உலக தலைவர்கள் மத்தியில் அவருக்கு என ஒரு தனி இடத்தை வழங்கியது.

1987 ஆம் ஆண்டு இறப்பதற்கு முன்னர் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

ஒருமுறை இந்தியாப் பிரதமர் ராஜீவ் காந்தி அப்போதைய ரஷ்யா ஜனாதிபதி இந்தியாவுக்கு வருகை தந்த போது தனது அருகில் அமர்தலிங்கத்தையும் சந்திப்பில் அமர்த்தினார்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை இந்தியாவால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் என்ற உறுதியுடன் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை எதிர்ப்புகளின் மத்தியிலும் ஏற்றார்.

தற்போது பதின்மூன்று தொடர்பில் எல்லோரும் பேசுகிறார்கள் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தத்தை தமிழ் மக்கள் சார்பில் அங்கீகரித்தவர் அமிர்தலிங்கம்.

பதின்மூன்று போதாது, பதின்மூன்று வேண்டாம் என்ப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் தமிழ் மக்களின் இருப்பை தக்க வைப்பதற்கு பதின்மூன்று உதவும் என கருதிய அமிர்தலிங்கம் வடக்கு கிழக்கு தமிழ்மொழி பேசும் மாகாணமாக அங்கீகரிப்பதற்கு முன்நின்று உழைத்தார்.

எங்களுடைய இளமை காலங்களில் அமிர்தலிங்கத்தினுடைய பேச்சை கண்டுகளிப்பதற்கு பல்லாயிரக்கணக்கானோர் அரசியல் கூட்டங்களுக்கு வருகை தருவார்கள்.

ஆனால் அரசியல் கூட்டங்களில் அமிர்தலிங்கத்தினுடைய பேச்சை இறுதியாகத்தான் வைப்பார்கள் அப்போதுதான் மக்கள் எழும்பாமல் கூட்டத்தை கண்டுகளிப்பார்கள் என்பதற்காக.

அவ்வாறு தமிழ் மக்களுக்கு சிறந்த ஒரு தலைவராக மிளிர்ந்த அமிர்தலிங்கம் தனது 1987 ஆம் ஆண்டு 62 ஆவது வயதில் மரணத்தை தழுவ வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இங்கிலாந்தின் இரும்பு மனிதர் என அழைக்கப்படும் வின்சென்ட் சேர்ச் வெல் தனது 60 ஆவது வயதிலேயே மக்கள் தலைவனாக தெரிவு செய்யப்பட்டார்.

அவ்வாறான நிலையில் பெருந்தலைவர் செல்வநாயகத்திற்கு பின்னர் தமிழ் மக்களின் தலைவனாக அமிர்தலிங்கம் விளங்கிய நிலையில் அவரது இறப்புக்கு பின்னர் இன்றுவரை தமிழ் மக்களுக்கான தலைமையை ஈடு செய்ய முடியாத ஒரு வெற்றிடமாக காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கச்சதீவை மீட்டால் மீனவர் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்குமா? — தமிழகத் தலைவர்கள் பதில் கூற வேண்டும்



கச்சதீவை மீட்போம் என தமிழக மீனவ மக்களிடம் கூறும் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் இந்திய மீனவர் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த முடியுமா என யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி மகேஷ் கேள்வி எழுப்பினார்.

27-08-2023 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய பிரச்சனை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்ற நிலையில் வடபகுதி மீனவர்கள் தினமும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை இந்தியா மீனவர்களின் அத்துமறிய இழுவைமடித் தொழிலை நிறுத்துமாறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு கலைத்து விட்டோம்.

இந்நிலையில் கடந்த வாரம் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் மீனவர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு கச்சதீவை மீட்பது தான் வழியென கூறியுள்ளார்.

அதேபோல் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் குப்புசாமி அண்ணாமலையும் இந்தியா மீனவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு கச்சதீவை மீட்பதற்கு மோடி அரசு தலையீடு செய்யும் என கூறியிருந்தார்.

நான் இவர்களிடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன் கச்ச தீவை இந்தியாக்கு வழங்கி விட்டால் வடபகுதி கடலில் இந்தியா மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியுமா?

கச்சதீவு எங்களிடம் இருக்கின்ற போது காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் குதிரை முனை மற்றும் திருகோணமலை வரை இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கச்சதீவில் நிரந்தரமாக இந்திய மீனவர்களை தங்க விட்டால் இலங்கையின் முழுக் கடலையும் நாசப்படுத்தி மீனவ மக்களின் வாழ்க்கையை சீரழித்து விடுவார்கள்.

உலக மீன் ஏற்றுமதியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கின்ற நிலையில் எமது இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிய மீன்பிடியினால் 30 வீதமான மீன்களை அள்ளிச்செல்கிறார்கள்.

ஆகவே சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பிய இந்தியா இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் இருப்பது கவலை அளிப்பதாக தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்த இரண்டு பிள்ளைகளின் தாயான பெண் புதுக்குடியிருப்பில் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிளின் பின்னே அமர்ந்திருந்து பயணித்த குடும்பப் பெண்ணொருவர் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 25ஆம் திகதி குறித்த பெண், புதுக்குடியிருப்பில் இருந்து தேவிபுரத்தில் உள்ள வீட்டிற்கு, தனது மச்சானுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார்.

இதன்போது வீதியில் சென்ற முச்சக்கர வண்டியை முந்துவதற்கு முயற்சித்தவேளை, மோட்டார் சைக்கிளின் கைபிடி முச்சக்கர வண்டியில் தட்டுப்பட்டது. இதன்போது அவர்கள் இருவரும் கீழே விழுந்தபோது குறித்த பெண் சம்பவ இடத்தில் மயக்கமுற்றார்.

அதன்பின்னர் அந்த பெண் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, இறுதியாக 25ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி 28-08-2023 அதிகாலை 1.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். சுஜீவன் வசந்தமலர் (வயது 28) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே குறித்த விபத்தில் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சாவகச்சேரி கோவிலாக்கண்டி பிரதேசத்தில் கடற்கரையை சுத்தப்படுத்தலும் மரம் நடுதல் நிகழ்வும்



யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பிரதேச செயலகமும், யாழ்ப்பாணம் கரிதாஸ் கியூடெக் நிறுவனமும் இணைந்து முன்னெடுத்த கடற்கரை சுத்தப்படுத்தலும், மரம் நடுகையும் சாவகச்சேரி கோவிலாக்கண்டி பிரதேசத்தில் 29-08-2023 அன்று இடம்பெற்றது.





இந்த நிகழ்வில் கரிதாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் அருட் தந்தை இயூஜின் பிரான்சிஸ், சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சர்வேஸ்வரன், சாவகச்சேரி பங்குத் தந்தை ஞானரூபன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இந்த கடற்கரை சுத்தப்படுத்தும் பணியில் கோவிலாகண்டி மீனவர் சங்கம், கோவிலாக்காண்டி மாதர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள் கலந்து கொண்டதோடு பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஜனாதிபதியின் பிரதிநிதியின் தீர்மானத்திற்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்பு

29-08-3023

திருகோணமலையில் விகாரை ஒன்றின் அபிவிருத்திப் பணிகளை பொதுமக்களின் எதிர்ப்பினால் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுத்த கிழக்கு மாகாண ஜனாதிபதியின் பிரதிநிதிக்கு எதிராக பௌத்த பிக்குகள் குழுவொன்று போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

திருகோணமலை கோகன்னபுரவை பாதுகாக்கும் அமைப்பு உள்ளிட்ட பிரதேச மக்கள் இணைந்து திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக திங்கட்கிழமை (28) காலை கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்ததாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"செந்தில் தொண்டமானினால் நடைமுறைப்படுத்தப்படும் சிங்கள, பௌத்த அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். திருகோணமலை பௌத்த விவகாரங்கள் தொடர்பில் ஏன் நாடாளுமன்ற விவாதங்கள் நடைபெறவில்லை?" போன்ற கோசங்களை எழுப்பியவாறு, திருகோணமலை பொரலுகந்த ரஜமகா விகாரையின் அபிவிருத்தியை நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்த உத்தரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கும் இடையூறு ஏற்பட்டதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிகின்றனர்.

திருகோணமலை, இலுப்பைக்குளம் பெரியகுளத்தில் அமைந்துள்ள பொரலுகந்த ரஜமகா விகாரையின் விகாராதிபதிக்கு கடந்த 9ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பிய பிரதேச செயலாளர் பி. தனேஸ்வரன், விகாரையின் அபிவிருத்திப் பணிகளுக்கு காணியின் சுற்றுவட்டார மக்களின் கடும் எதிர்ப்பு காணப்படுவதால், குறித்த பணிகளை தற்காலிகமாக நிறுத்துமாறு, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சம்பந்தன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் தொலைபேசி அழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற வாய்மொழி அறிவுறுத்தலின் பிரகாரம், துப்புரவு மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.





பொரலுகந்த ரஜமகா விகாரையின் அபிவிருத்தியை நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரின் "சட்டவிரோத உத்தரவை" அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஓகஸ்ட் 24 ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினர்.

"விகாரைகள், பௌத்த தேரர்கள் மீது கைவைப்பவர்களின் தலைகளை களனிக்குக் கொண்டு வருவேன்" என, விகாரையின் அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்பட்டமை தொடர்பில், முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் ஆவேசத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

"இந்தச் சந்திப்புகளுக்குப் பிறகு நான் வடக்கு கிழக்கிற்கு வருவேன். நீ விகாரைகள் மீது கைவைத்தால், தேரர்களைத் தொட்டால், நான் மீண்டும் களனிக்குத் சும்மா திரும்பி வரமாட்டேன். உன் தலையை என் கையில் ஏந்திக்கொண்டுதான் களனிக்கு வருவேன். இதை நான் மாற்ற மாட்டேன்."

முன்னாள் அமைச்சரினால் பகிரங்கமாக விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தலுக்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

# கிளிநொச்சியில் உலக உணவுத் திட்டத்தின் உலருணவு விநியோக நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைப்பு!

உலக உணவுத் திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் போஷாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதனடிப்படையில், குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு 29-08-2023 அன்று கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்க அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி பணிப்பாளர் ஜெராட் ரொபெல்லோ, உலக உணவுத் திட்ட அரச இணைப்பாளர் முஸ்தபா நியமத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு குறித்த திட்டத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

திட்டத்திற்காக கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 7,022 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இரண்டு மாத காலப்பகுதிக்கான 24 கிலோகிராம் அரிசி, 20 கிலோகிராம் கடலைப் பருப்பு, 5 லீட்டர் தேங்காய் எண்ணெய் ஆகியன வழங்கப்படவுள்ளன.

குறித்த உலருணவு விநியோகம் அக்கராயன், கரைச்சி கிழக்கு, கரைச்சி தெற்கு ஆகிய பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக இடம்பெறவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகைகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி. ஸ்ரீபாஸ்கரன், கரைச்சி பிரதேச செயலாளர் பா. ஜெயகரன், உலக உணவுத் திட்டத்தின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் கஜாணன், வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் யூட் நிசாந்தன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ராஜ்விேனாத், உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர்கள், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்க முகாமையாளர், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்க உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உலக உணவுத் திட்டம் (World Food Programme) WFP என்பது ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு பிரிவு ஆகும். இது பட்டினியைப் போக்கவும், உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கவும் பாடுபடும் உலக அளவில் மிகப்பெரும் மனிதநேய அமைப்பாகும்.

# பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே அதி வண பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெணாண்டோ ஆகியோருக்கிடையில் சந்திப்பு



- மன்னார் நிருபர் (29-08-2023)

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே அவர்களை மரியாதையின் நிமித்தம் சர்வதேச இசை கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவர் அதி வண பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெணாண்டோ 29-08-2023 கொழும்பில் சந்தித்து உரையாடினார்.

இதன் போது பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன் போது இலங்கையில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் சில முன்னேற்றங்களை காண்பதாகவும், நீங்களும் நானும் நாம் எல்லோரும் ஒரு கிறிஸ்தவ சமூகமாய் தொடர்ந்து இந்த நாட்டுக்காக பிரார்த்திக்க வேண்டும் என பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே தெரிவித்துள்ளார்.

கடந்த மாதங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சென்றிருந்தேன். அங்கு மக்கள் அலை அலையாய் வந்து என்னிடம் கூறியது ஒன்றே ஒன்று.

கடந்த 30 வருட யுத்தத்தில் என் மகனை இழந்தேன், என் குடும்பத்தை இழந்தேன், அவர்களை மீண்டும் பெற்றுத் தாருங்கள் என்று அவர்கள் கதறினார்கள்.

நீங்கள் கடவுளை நோக்கி பாருங்கள். கடவுள் உங்களுக்கு வெற்றியை தருவார். நானும் உங்களுக்காக பிரார்த்தனை செய்கின்றேன் என்று அவர்களிடம் கூறினேன்.

கிறிஸ்தவ சமூகமாய் நீங்களும் நானும் தொடர்ந்து இந்த நாட்டுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும்.

கிறிஸ்தவ மதம் மிகவும் தெளிவாக கூறுகிறது நாட்டை ஆட்சி செய்கின்ற தலைவர்களுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என.

கடவுள் அவர்களுக்கு நல்ல ஞானத்தை கொடுக்க வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தனை செய்வோம்.

நீங்கள் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் உடன் நல்ல உறவைப் பேணி வருகின்றீர்கள். அதை நான் காண்கிறேன். இலங்கையை முன்னேற்ற அவர்களின் ஆலோசனையை பெற்றுக்கொண்டு நாம் எல்லோரும் சேர்ந்து இலங்கை நாட்டை கட்டி எழுப்புவோம் என்று அவர் மேலும் கூறியதாக இசை கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவர் அதி வண பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெணாண்டோ மேலும் தெரிவித்தார்.


# கூரிய ஆயுதங்கள் சகிதம் கணவனால் கடத்தப்பட்ட மனைவி – குடத்தனையில் சம்பவம்!

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் பகுதியில் கணவனால் மனைவி கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று செவ்வாய் (29) காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கணவனும் மனைவியும் சில மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிசாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் கணவன் மற்றும் மனைவி ஆகியோர் அவர்களது தாயார் வீடுகளில் வசித்துவந்துள்ளனர்.

இந் நிலையில் கடந்த செவ்வாயன்று திடீரென கணவரும் அவரது சகாக்கள் சகிதம் வாள் கொண்டு சென்று வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி தனது மனைவியை அவளது விருப்பமின்றி கார் ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அப்பகுதியல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# முன்னணி தமிழரசியலை நொதிக்கச் செய்கிறது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

உதய கமன்பில கொழும்பில் உள்ள கஜேந்திரக்குமாரின் வீட்டை முற்றுகையிடுமாறு அழைப்பு விடுத்ததையடுத்து இன முரண்பாடுகள் மேலும் கூர்மையடைவது போல ஒரு தோற்றம் உருவாகியுள்ளது. இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிர எதிர்ப்பு அரசியலின் விளைவு என்று அக்கட்சியை விமர்சிப்பவர்கள் கூறத் தொடங்கி விட்டார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அண்மை மாதங்களாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் நிலப்பறிப்புக்கு எதிரா-கவும் தீவிரமாக எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து வருகிறது. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது போலீஸ், பிக்குகள் போன்றவர்களோடு மோதும் ஒரு போக்கையும் கடைப்பிடித்து வருகிறது. குறிப்பாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக அந்த மோதல் கள ங்களில் காணப்படுகிறார்கள். இதன் விளைவாக உதய கமன்பில, சரத் வீரசேகர, மேர்வீன் டி சில்வா போன்றவர்கள் கடுமையான தமிழ் எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுத்து வருகிறார்கள். இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாகத்தான் கஜேந்திர குமாரின் கொழும்பு இல்லத்தை ஒரு பிக்குவின் தலைமையிலான குழுவினர் முற்றுகையிட முயற்சித்தார்கள்.

இச்சம்பவத்தை முன்வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எதிரிகள் அக்கட்சியை குற்றச்சாட்டி வருகிறார்கள். அக்கட்சியானது இன முரண்பாடுகளை, இனவாதிகளைத் தூண்டுகிறது என்றும் அவர்கள் விமர்சித்து வருகிறார்கள். அக்கட்சியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாகத்தான் சிங்கள பௌத்த தீவிரவாதிகள் சீண்டப்பட்டு விட்டார்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இது போன்ற குற்றச்சாட்டுக்கள் தமிழரசியலில் புதியவை அல்ல. சில தசாப்தங்களுக்கு முன்பு தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலகட்டத்திலும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுந்தன. அக்காலகட்டங்களில் கொரில்லாத் தாக்குதல்களின் மூலம் அரச படைகள் கொல்லப்படும் பொழுது அதன் விளைவாக, பழிவாங்கலாக அரச படைகள் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தினார்கள். பொதுமக்களின் பாதுகாப்பைப்பற்றிச் சிந்திக்காமல் மேற்கொள்ளப்படும் கொரில்லா தாக்குதலால் பொதுமக்கள் பகடைக்காய்களாக மாற்றப்படுகிறார்கள் என்று அப்பொழுது அத்தாக்குதல்களை விமர்சித்தவர்கள் கூறினார்கள். குளவிக் கூட்டுக்கு கல்லெறியும் அரசியல் அதுவென்று அவர்கள் வர்ணித்தார்கள். கூடு கலைந்து வெளியே வரும் குளவிகள் அயலில் இருப்பவர்களைக் கொட்டும். அப்படித்தான் கொரில்லா தாக்குதல்களின் விளைவுகளும் அப்பகுதியில் உள்ள மக்களை பாதிக்கின்றன என்று அவர்கள் வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் அவ்வாறான தாக்குதல்களின் மூலம்தான் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டம் வேகமாக வளர்ச்சி பெற்றது.குளவி கொட்டும் என்பதனை ஒவ்வொரு கொரில்லா தாக்குதலும் நிரூபித்தது. எனவே குளவிக்கு எதிராக மேலும் அதிக தொகை இளையோர் இயக்கங்களில் இணைந்தார்கள். இப்படித்தான் கொரில்லா போராட்டம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போனது. அது ஆயுதப் போராட்டம். ரத்தம் சிந்தும் அரசியல்.

ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் நடவடிக்கைகள் அவ்வாறானவை அல்ல. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆயுதப் போராட்டத்தின் வாரிசாக தன்னை காட்டிக் கொள்கிறது. ஆயுதப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் தகமை தனக்கு மட்டுமே உண்டு என்று உரிமை கொண்டாடுகிறது. நினைவு நாட்களை தத்தெடுக்கப் பார்க்கின்றது. ஆனால் அதன் அரசியல் ஆயுத அரசியல் அல்ல. அது மிதவாத அரசியல்தான். அது ஒரு கட்சிதான். மக்கள் இயக்கம் அல்ல. ஏனென்றால் மக்கள் இயக்கம் என்றால் அந்தக் கட்சியின் போராட்டங்கள் மக்கள் மயப்பட்டதாக இருந்திருக்கும்.

அண்மை மாதங்களாக அக்கட்சியானது நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக கடுமையான எதிர்ப்பைக்காட்டி வருகிறது. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக தமிழ் அரசியலில் குறிப்பாக தமிழ் எதிர்ப்பு அரசியலின் கூர்முனையாக அக் கட்சி காணப்படுகிறது. தமிழரசியலை அண்மை மாதங்களாக நொதிக்க செய்வது அக்கட்சியின் நடவடிக்கைகள்தான். அவற்றின் விளைவாகவே உதய கமன்பில, சரத் வீரசேகர, மேர்வீன் டி சில்வா, விமல் வீரவன்ச போன்றவர்கள் சீண்டப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் சீண்டப்படுவார்கள் என்பதற்காக தமிழ் மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிடலாமா? தமிழ் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இல்லை என்றால் சிங்கள பௌத்த மயமாக்கலும் நிலப்பறிப்பும் இப்பொழுது நடப்பதை விடவும் அதிகரித்த வேதத்திலும், பரந்தளவிலும் முன்னெடுக்கப்படும். எனவே அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு.

2009க்கு பின்னரும் சிங்கள பௌத்த மயமாக்கலை தீவிரமாக முன்னெடுப்பது என்பது எதனை காட்டுகின்றது? அவர்கள் தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்கப் பார்க்கிறார்கள். இத்தனைக்கும் 2009க்குப் பின் தமிழ் மக்களின் எதிர்ப்பு என்பது தாக்கமானது அல்ல. அரசாங்கத்துக்கு சேதத்தை ஏற்படுத்துவதும் அல்ல. தொடர்ச்சியானதும் அல்ல. சில அரிதான புறநடைகள் தவிர, கடந்த 14 ஆண்டு கால தமிழ் எதிர்ப்பு என்பது வீரியமானதும் அல்ல; அரசியல் வலுச் சமநிலையை மாற்றப் போதுமானதும் அல்ல. நெருப்பை அணைய விடாமல் பேணி வைத்திருந்தது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஆனால் அந்த எதிர்ப்புக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டமாக ஆக்ரோஷமாக உதய கமன்பில, சரத் வீரசேகர, மேர்வீன் டி சில்வா, விமல் வீரவன்ச போன்றவர்கள் பதில் வினையாற்றுகிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன? தமிழ் மக்கள் எதிர்ப்பையே காட்டக் கூடாது என்று அவர்கள் கருதுகிறார்களா? தமிழ் மக்கள் தங்கள் தேசிய தனித்துவங்களை இழந்து இலங்கை தீவின் ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் கரைந்து விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா?

எனவே தமிழ் மக்கள் தமது தேசிய இருப்பை காப்பாற்ற வேண்டும். அதற்கு ஒரே வழி சிங்கள பௌத்த மயமாக்கலையும் நிலப்பறிப்பையும் எதிர்ப்பதுதான். அதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனநாயக வழிகளில்தான் வெளிப்படுத்துகின்றது. சிலசமயம் அங்கே உணர்ச்சிகரமான மோதல்கள் இடம்பெறுகின்றன என்பது உண்மைதான். ஆனால் அவை ஆயுத மோதல்கள் அல்ல. அவற்றால் சீன்டப்பட்ட சிங்கள பௌத்த தீவிரவாதிகள் கஜேந்திரகுமாரின் கொழும்பு வீட்டை முற்றுகையிட்டிருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பு அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எதிர்ப்பு நடவடிக்கைகளை விமர்சிப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக சிங்கள பௌத்த மயமாக்கலை நியாயப்படுத்துவதாகவே முடியும்.

இக்கட்டுரையானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தூய்மைவாதத்தையோ அல்லது தனியோட்டத்தையோ ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கட்சியானது பெருந்திரள் வடிவிலான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான ஒரு வழிவரைபடத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இக்கட்டுரையின் விமர்சனம் ஆகும். தேசியம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். தேசியவாத அரசியல் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தை ஆகக்கூடிய பட்சம் பெருந்திரளாகக் கூட்டிக்கட்டுவதுதான். ஆனால் முன்னணியிடம் அதற்கு வேண்டிய அரசியல் தரிசனங்களோ அரசியல் ஒழுக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. அதைத்தான் இக்கட்டுரை விமர்சிக்கின்றது.

அதற்காக முன்னணியும் உட்பட எந்தவோர் அரசியல் கட்சியோ அல்லது செயற்பாட்டாளரோ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுவதை இக்கட்டுரை வரவேற்கின்றது. நியாயப்படுத்துகின்றது. சிறு திரள் போராட்டங்களின் விளைவாக இனவாதத்துக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. ஆனால், அதனால் சீண்டப்பட்ட இனவாத வாக்குகளை யாரோ ஒரு அரசியல்வாதி தன் சட்டைப்பைக்குள் தூக்கிப் போட்டுக் கொள்வார். எனவே எந்த ஒரு போராட்டமும் அரசாங்கத்துக்கு பொருளாதார ரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். அதே சமயம் வெளிநாட்டு தூதரகங்களின் கவனத்தை தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருப்பதாகவும் அமைய வேண்டும்.

அண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் குருந்தூர் மலை தொடர்பாக கருத்து தெரிவித்திருந்தார். அது தமிழ் மக்களுக்கு சாதகமானது. அதுபோல ஏனைய தூதரகங்களையும் உலக நிறுவனங்களையும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் நிலப்பறிப்புக்கும் எதிராகக் கருத்துகக்கூற வைக்க வேண்டும். அதேசமயம் பரந்துபட்ட பெருந்திரள் போராட்டங்களை ஒழுங்கமைக்க வேண்டும்.

பௌத்த பிக்குகளும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாட்டின் சட்ட திட்டங்களை துணிந்து மீறுகிறார்கள். அவை நாட்டின் உள்நாட்டு நீதிபதிபாலன கட்டமைப்பை ஏன் தமிழ் மக்கள் நம்பவில்லை என்பதனை நிரூபிக்க போதுமானவை. சரத் வீரசேகர மீண்டும் ஒரு தடவை முல்லைத்தீவு நீதிபதியை நாடாளுமன்றத்தில் வைத்து அவமதித்திருக்கிறார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குள்ள சிறப்புரிமை எனப்படுவது ஒரு நீதிபதியை, நீதிமன்றத்தை அவமதிப்பிற்கான ஒரு கவசமா? கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் தலைமையில் நடந்த திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குள் பிக்குகள் அடாத்தாக நுழைகிறார்கள். அதை தடுத்து நிறுத்த அங்கு யாரும் இல்லை.

2009க்கு பின்னரும் உதய கமன்பில, சரத் வீரசேகர, மேர்வீன் டி சில்வா, விமல் வீரவன்ச போன்றவர்கள் இனங்களுக்கிடையே வெறுப்பை விதைக்கும் பேச்சுக்களை துணிந்து பேசுகிறார்கள். வெறுப்பூட்டும் பேச்சுக்கள்தான் இனப்படுகொலையின் தொடக்கம். “ஜெமனியில் யூத இனப்படுகொலை எனப்படுவது நாசிகளின் நச்சு வாயுக் கிடங்குகளில் இருந்து தொடங்கவில்லை. அது வெறுப்பு பேச்சுக்களில் இருந்துதான் தொடங்கியது” என்று ஐநா கூறுகிறது. எனவே 2009க்கு பின்னரும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் சிங்கள அரசியல்வாதிகள் வெறுப்பு பேச்சுக்களை கக்குகிறார்கள் என்றால், நாட்டின் பல்லினச் சூழல் எவ்வளவு பலவீனமாக உள்ளது என்பதை அது காட்டுகின்றது.

தமிழ் மக்கள்,கட்டப்படும் விகாரைகளுக்கு எதிராக அல்லது தங்களுக்கு எதிராக வெறுப்பை உமிழும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு எதிராக ஒரு கல்லைகூட எடுத்து எறியவில்லை. அவர்கள் ஜனநாயக வழியில்தான் எதிர்ப்பைக் காட்டுகிறார்கள். 2009க்கு பின்னரான தமிழ் மிதவாத அரசியலைக் குறித்து தமிழ் கட்சிகளிடம் பொருத்தமான வழிவரை படங்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் அந்த எதிர்ப்பு பொருத்தமான, தாக்கமாக பெரிய விளைவுகளை ஏற்படுத்த தவறுகின்றது.

## தனிமை
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

*தனிமையின் தவிப்பு தள்ளாடும் வயதில்*
*இனியவள் இழப்பு இயலாக் காலத்தில்*
*கனிவான அழைப்புக் கனவாய்ப் போனபின்*
*இனியெது பிழைப்பு .இரவாய் ஆனபின்*
*ஆறுசுவை உணவு அவளுடன் போச்சு*
*ஆறுதல் வார்த்தை அறுதி ஆச்சு*
*தேறுதல் இன்றி திகைத்து நிற்கிறேன்*
*மாறுமா் வாழ்க்கை மரணம் வருமுன்?*
*வறுமைக் காலம் வலமாய் இருந்தாய்*
*சிறுமை வந்திடத் திடமாய் நின்றாய்*
*இறுதிவரை என்னுடன் இருப்பேன் என்றாய்*
*அறுதியாய் அமலனிடம் அவசரமாய்ச் சென்றதேன்?*
*பெற்ற பிள்ளை் பிரியம் காட்டலை*
*உற்ற துணையின்றி உறக்கம் வரவில்லை*
*சுற்றம் என்போர் சொத்தைக் கேட்டனர்*
*அற்ற குளத்து அறுநீர்ப் புள்ளானேன்*
*இல்லாள் அகத்திருக்க இல்லா தொன்றில்லை*
*எல்லாம் போனது எழிலரசி போனபின்*
*சல்லியன் இல்லாச் சகடம் போலானேன்*
*சல்லிபோல் நொருங்கி தனித்து நின்றேனே!.*

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**

*(416) 844-7453*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மக்களுக்கு பெற்றுக்கொடுத்த காணிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன – ரிஷாட் எம்.பி குற்றச்சாட்டு!

பு. கஜிந்தன்

அதிகாரத்தில் இருக்கும் போது நாம் மக்களுக்கு வழங்கிய ஆயிரக்கணக்கான காணிகள் இன்று வனஜீவராசிகள் மற்றும் வன பரிபாலனத் திணைக்களங்கள் ஆகியவற்றினால் கையகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் முசலிப் பிரதேசத்தில் தற்போது 15 சதவீதமான காணிகளே தற்போது மக்களின் பாவனைக்காக எஞ்சி இருப்பதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரி'ாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், முசலி Y.M.M.A கிளையின் ஏற்பாட்டில், சனிக்கிழமை (26) முசலி தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய ரிஷாட் எம்.பி மேலும் கூறியதாவது,

"YMMA என்பது ஒரு பலம்வாய்ந்த நிறுவனமாகும். தேசிய ரீதியில் நல்ல பணிகளை செய்து வருகின்றது. சகோதரர் றிஸ்மி அவர்கள் அதன் தலைவராக இருந்தகாலம் YMMA வுக்கு பொற்காலமாக அமைந்திருந்தது. ஆன்மீகம், அரசியல், கல்வி மற்றும் சமூக ரீதியிலும் லுஆஆயு பல பணிகளையும் வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, வரலாறு படைத்தது என்பதை நன்றியுணர்வுடன் கூற விரும்புகின்றேன். அதேபோன்று, முசலி பிரதேசத்திலும் நல்ல பல வேலைத்திட்டங்களை லுஆஆயு முன்னெடுத்திருந்தது.

முசலி பிரதேசத்தில் குறுகிய காலத்துக்குள் நாம் பல பணிகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தமை வெளிப்படையானது. இந்த வைபவத்தில் பங்கேற்றிருக்கும் ஊர் கனவான்களுக்கு இந்த உண்மை தெரியும். அவர்களின் பலர் இதற்கு சாட்சிகளாகவும் உள்ளனர். முசலியில் வானளாவிய ரீதியில் உயர்ந்திருக்கும் மாடிக்கட்டிடங்கள், பாடசாலைகள், மக்கள் குடியிருக்கும் வீடுகள் மற்றும் இன்னோரன்ன பணிகள் வானத்திலிருந்து திடீரென குதித்தவை அல்ல.

பண்டாரவெளி, கொண்டச்சி, பொற்கேணி ஆகிய பாடசாலைகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட சாஹிரா, அல்ஜாசிம் ஆகியவை மிகவும் குறுகிய காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டவையே. அப்போது, இப் பாடசாலைகளை தடைகள், சவால்கள் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியில் நாங்கள் ஆரம்பித்த போது மாணவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். முசலிப் பாடசாலையை தேசிய பாடசாலையாக ஆக்க வேண்டுமென நாங்கள் பகீரத முயற்சிகள் எடுத்தபோது, மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது. எனினும், அமைச்சரவைக்கு விஷேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்தே அதில் நாம் வெற்றிபெற்றோம். அப்போது தேசியரீதியில் மூன்று பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன. அதில் முசலியும் ஒன்று.

நான் அமைச்சராக இருந்த போது, முசலிப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்களுக்கு வழங்கியதால், வில்பத்துவை அழிப்பதாக என்மீது போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றம் வரை சென்றது. வேறு மாவட்டத்தில் மரம் நட வேண்டும் என எனக்கெதிராக தீர்ப்பும் வந்தது. 1100 மில்லியன் ரூபாய்க்கு மரம் நட்டு, பத்து வருடங்களுக்கு அதை பராமரிக்கும் செலவுடன், மொத்தமாக 116 கோடி ரூபா செலுத்த வேண்டுமென தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக நான் மேன்முறையீடு செய்துள்ளேன். அது குறித்த வழக்கு தொடர்ந்துகொண்டிருக்கிறது.

நான் அமைச்சராக இருந்த காலத்தில், முசலிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கட்டிடங்களைப் பார்க்கும்போது, உண்மையில் எனக்கு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கின்றது. எனக்கு அந்த சக்தியை தந்த இறைவனுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்துகின்றேன்.

நாங்கள் இந்தப் பிரதேசத்துக்குள் நுழையும் போது, நான்காம் கட்டையிலிருந்து சிலாவத்துறை வரை எங்குமே காடாகவே இருந்தது. மொத்தத்தில் முசலிப் பிரதேசம் முழுவதுமே வனாந்திரமாக காணப்பட்டது. நாங்கள் கால் வைக்கும்போது "கண்ணிவெடி அபாயம் இருக்கின்றது. கால்வைக்க வேண்டாம்" என பொலிஸார் எச்சரித்தனர். "பாலைக்குளிக்கு செல்ல வேண்டாம்" என பொலிஸார் அறிவுறுத்தினர். இந்தப் பிரதேசத்தில் அநேகமான இடங்களில் குடியேற்றம் நடந்த பின்னர் இறுதியாகவே கொண்டச்சியில் மக்களை குடியேற்றினோம். கொண்டச்சி கிராமத்தில் உள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்ற விஷேட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி, எமது சொந்த நிதியில் கண்ணிவெடிகளை அகற்றி, மக்களை மீள்குடியேற்றினோம்.



சர்வதேச நிருவனங்கள் பல இருந்த போதும், அவர்கள் கண்ணிவெடிகளை அகற்ற உதவி செய்யவில்லை. காணிகளை அபகரிக்கும் எண்ணமே அவர்களிடம் இருந்தது.

புதிய பாடசாலைகளை உருவாக்கினோம், ஆசிரிய நியமனங்களை வழங்கினோம், சதிகளுக்கும் தடைகளுக்கும் பின்னாலேயே இந்தப் பணிகளில் வெற்றிபெற்றோம்.

கடந்த 3,4 வருடங்களாக நாம் மிகவும் அமைதியாக இருக்கின்றோம். எவராவது இந்தப் பணிகளை தொடரவேண்டுமெனவே விரும்புகின்றோம். எனினும், நாம் வழங்கிய காணிகளில் பல ஏக்கர்கள் இன்று வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை. பார்ப்பாரும் கேட்பாரும் அற்ற சமூகமாகவே இந்தப் பிரதேச மக்கள் வாழ்கின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற மன்னார் கூட்டத்தில், முசலிப் பிரதேசத்தில் ஒரு துண்டுக் காணியையேனும் விடுவிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படவில்லை. இந்த நியாயத்தை நாம் தெரிவித்த போது, கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் 27ஆம் திகதி இதற்கென ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதைப்பற்றி பேசுவோம் என உறுதியளித்தனர். ஆனால், அவ்வாறு முடிவு எடுக்கப்பட்ட போதும் இங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் அதற்கான ஏற்பாடுகளை செய்யாமல் தலைமறைவாகிவிட்டனர். இதுதான் இன்றைய நிலை.

முசலியில் உள்ள கல்விமான்களும் ஊர்மக்களும் இது தொடர்பில் பேச வேண்டும். இவற்றைத் தட்டிக் கேட்க வேண்டும். நிலத்துக்காகவே வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடைபெற்றன.

1990 ஆம் ஆண்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபோது, 15 சதவீதக் காணிகளே வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமாக இருந்தது, இன்று நாங்கள் மக்களுக்குக் கொடுத்த காணிகளைக் கூட மீண்டும் வர்த்தமானியின் மூலம் கையகப்படுத்தியுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் 15 சதவீதமான காணிகளே மக்களுக்கு இருக்கின்றது. எஞ்சிய எல்லாவற்றையும் வனஜீவராசிகள் திணைக்களம் அபகரித்து வைத்திருக்கின்றது. ஆனால், சிலர் இவற்றை எல்லாம் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

பிரதேச செயலாளர் இந்த அநியாயங்களை தொடர்ந்தும் செய்துகொண்டிருக்காமல், உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் அமைதியான முறையில், ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாவோம் என்பதை ஆணித்தரமா தெரிவித்துக்கொள்கின்றேன். உள்ளூர் அதிகாரிகளின் நிர்வாகக்கெடுபிடிகளால்தான் நமக்கு கஷ்டங்கள் தொடர்கின்றது என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

# கனடா வாழ் ஊடகவியலாளர் பி. விக்னேஸ்வரனின் "நினைவு நல்லது" நூலின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், பி.விக்னேஸ்வரனின் "நினைவு நல்லது" நூலின் வெளியீட்டு விழாவானது 29-08-2023 அன்று இடம்பெற்றது.

ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வினை உள்ளடக்கி பி. விக்னேஸ்வரன் இந்நூலினை உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள், தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக பல்வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புக்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்நூலினை பி. விக்னேஸ்வரன் தந்துள்ளார்.

ரொரன்ரோ "தாய்வீடு" மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமாக இப்படைப்பாக்கம் விளங்குகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுக்கான தலைமையுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராமும், வரவேற்புரையினை ஊடகக்கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனும், நூலிற்கான வாழ்த்துரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனமும், அறிமுகவுரையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும் நிகழ்த்தினர்.











அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றதுடன் முதற்பிரதியை பி. விக்னேஸ்வரன் வழங்க ஐ.பி.சி. தமிழ் நிறுவன உரிமையாளர் க.பாஸ்கரன் பெற்றுக்கொண்டார். முதற்பிரதியை தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கலும் நடைபெற்றது. சில பாடசாலைகளுக்கு நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நூலிற்கான ஆய்வுரையினை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், நயப்புரையினை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவின் முன்னைநாள் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாதனும் வழங்கினர். ஏற்புரையினை நூலாசிரியர் பி. விக்னேஸ்வரன் ஆற்றினார். நன்றியுரையினை ஊடகக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஸ் கொடுதோர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கனடிய செய்திகள் Canadian News

# இலங்கையில் வடக்கு கிழக்குத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் கரங்கள் கோர்த்து நின்றால் அவர்களின் பலம் இன்னும் ஓங்கி நிற்கும் என்று நான் நம்புகின்றேன்



## கனடாவில் கனடியத் தமிழர்கள் நடத்திய "தெருவிழாவில்" சிறப்புரையாற்றிய இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவிப்பு

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் கொழும்புத் தலைநகரிலும் வாழும் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் தமிழர்களாக கரங்கள் கோர்த்து நின்றால் அவர்களின் பலம் இன்னும் ஓங்கி நிற்கும் என்று நான் நம்புகின்றேன். அப்போது தான் அங்கு தமிழ் மக்களை அடக்கியும் ஒடுக்கியும் அடிமைப்படுத்தியும் நடத்திவரும் பெரும்பான்மையினர் எம்மை நடுக்கத்தோடு திரும்பிப்பார்ப்பார்கள். அதற்கு மேலாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக அதிகளவில் கனடாவில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் இலங்கை வாழ் தமிழர்களை நோக்கி "நாங்கள் உங்களுக்காக இங்கே இருக்கின்றோம். நீங்கள் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை" என்று குரல் கொடுத்தால்தான் எம்மை அடக்கி ஒடுக்க நினைக்கும் எதிரிகள் அஞ்சுவார்கள். எனவே கனடா வாழ் பலமிக்க தமிழ் மக்கள் தாயகத்தில் உள்ள மக்களுக்காக தங்கள் குரலை உயர்த்தி ஒலித்திடச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கனடாவில் கனடியத் தமிழர் பேரவை நடத்திய "தெருவிழாவில்" சிறப்புரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்த இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்ர் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கனடாவின் ஸ்காபுறோ நகரில் இரண்டாவது நாளாக நடைபெற்ற தமிழர் தெருவிழாவில் சிறப்புரையாற்றியபோதே மக்களின் கரகோசத்தின் மத்தியில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளை மேற்கொண்டு வரும் அந்த அடக்குமுறையாளர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் கனடா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நீங்கள் உங்களுக்காக நாங்கள் இங்கு இருக்கின்றோம். நீங்கள் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை" என்று குரல் கொடுக்க வேண்டும்.







மேலும் இலங்கையில் மலையக மக்களின் நலன்களை கவனிக்கும் முயற்சியில் கனடிய தமிழர் பேரவை எடுத்து வரும் நடவடிக்கைகளை நான் பாராட்டுகின்றேன். மலையகத்தில் உள்ள கல்லூரி ஒன்றுக்கு விஞ்ஞானக் கூடம் அமைத்துத் தர தாங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறவும் நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்".

இவ்வாறு மனோ கணேசன் அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

# கனடா வாழ் சமய சமூகத் தொண்டர்கள் இருவருக்கு தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீன குருமஹா சன்னிதானத்தினால் மயிலாடுதுறை அபயாம்பிகை திருக்கோவில் வழங்கப்பெற்ற உயர் கௌரவ விருதுகள்



### ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களுக்கு "சிவாகமக்கலாநிதி" எனும் விருது.

### கனடாவில் தமிழ், சமய, சமூக நற்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் தொழிலதிபர், திரு. கணேசன் சுகுமார் அவர்களுக்கு "சிவநெறிக்காவலர்" எனும் விருது.

**(மயிலாடுதுறையிலிருந்து கனடா உதயன் சென்னைச் செய்தியாளர் பிரகாஷ்)**

கடந்த 30-08-2023 புதன்கிழமையன்று தமிழ்நாட்டில் கனடா வாழ் சமய சமூகத் தொண்டர்கள் இருவருக்கு உயர் விருதுகள் வழங்கப்பெற்றன.தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீன குருமஹா சன்னிதானத்தினால் மயிலாடுதுறை அபயாம்பிகை திருக்கோவில் உயர் கௌரவ விருதுகள் வழங்கப்பெற்றன.

மேற்படி விருதுகள் வழங்கும் வைபவத்தில் ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களுக்கு "சிவாகமக்கலாநிதி" எனும் விருதும், கனடாவில் தமிழ், சமய, சமூக நற்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் தொழிலதிபர், திரு. கணேசன் சுகுமார் அவர்களுக்கு "சிவநெறிக்காவலர்" எனும் விருதும் வழங்கப்பெற்றன. மேற்படி விருதுகள் வழங்கப்பெற்றபோது ஆலய வளாகத்தில் சுமார் 5000 பக்தர்கள் கலந்து கொண்டார்கள் என்பது ஐம்பதுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியப்பெருமக்கள் அங்கு கூடி நின்று விருது பெற்ற இருவரையும் வாழ்த்தும் வகையில் வழிபாடுகளையும் வேதங்களை ஓதி நின்று விசேட பூசைகளையும் ஆற்றினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் வழங்கப்பெற்றதன் சிறப்புக்களை பின்வருமாறு குறிப்பிடலாம்:

தமிழகம்-திருவாவடுதுறை ஆதீனத்தின் உயர் கௌரவ விருது

தமிழகம் திருவாவடுதுறை ஆதீன குருமஹா சன்னிதானத்தினால் மயிலாடுதுறை அபயாம்பிகை சமேத ஸ்ரீ மயூரநாத சுவாமி திருக்கோவில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் 30.08.2023 புதன்கிழமை மயிலாடுதுறை சிவபுரம் கல்வி அறக்கட்டளை அதிபர். சிவஸ்ரீ. ரவி சுவாமிநாத சிவாச்சார்யார் அவர்களின் நல் ஆசியுடன் இலங்கை, புங்குடுதீவு, கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தையும், கனடா ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தையும் வேத ஆகம முறைப்படி நேரகால நியமம் தவறாது நிர்வகித்துவரும் ஆலய ஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு "சிவாச்சார்யகுலபூஷணம்" சிவஸ்ரீ. பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களின் தமிழ், சமய, சமூக, கலைப்பணிகளையும், வேத, சிவாகம, குருத்துவப்பணிகளையும் பாராட்டி "சிவாகமக்கலாநிதி" எனும் கௌரவ விருதினையும்,

இலங்கையிலும், கனடாவிலும் வர்த்தகத் துறையில் மேலோங்கியிருந்தாலும் தனது சமூகத்தையும் சமயத்தையும் கைவிடாமல் தமிழ், சமய, சமூக நற்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் தொழிலதிபர், வர்த்தகப் பிரமுகர், கணேசன் சுகுமார் அவர்களுக்கு "சிவநெறிக்காவலர்" எனும் கௌரவ விருதினையும் பல்லாயிரக்கணக்கான சைவத்தமிழ் மக்கள் மத்தியில் சிவாச்சார்யார்கள் சூழ்ந்திருக்க இந்த விருதுகள் வழங்கப்பெற்றன.

இன்னும் மேன்மையுடன் சொல்லுவதானால் இந்த ஆலயத்தில் தான் "பாரதப் பிரதமருக்கு செங்கோல் வழங்கிய" திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குருமஹாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தனது திருக்கரங்களால் வழங்கிக் கௌரவித்தமை பெருமையோடு போற்றுதற்குரியதாகும்.

"சிவாகமக்கலாநிதி" சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள், "சிவநெறிக்காவலர்" திரு. கணேசன் சுகுமார் அவர்களின் தமிழ், சமய, சமூக நற்பணிகள் மேலும் மேலோங்கவேண்டும் என்றும் அங்கு கூடியிருந்த சிவாச்சாரியப் பெருமக்கள் அனைவரும் பக்தியுடன் கூடிய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

விருதுகள் பெற்ற இருவரும் தற்போது கனடாவிற்கு பயணமாகியுள்ளார்கள் எனவும் அறியப்படுகின்றது.

ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ. பஞ்சாட்சர. விஜயகுமாரக்குருக்கள் அவர்களுக்கு "சிவாகமக்கலாநிதி எனும் விருது வழங்கப்பெற்றது தொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள பல சிவாச்சாரியப் பெருமக்கள் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஈழத்து சிவாச்சார்யர்கள் உலகெங்கும் பரவி புகழோடும் சிறப்போடும் திகழ்வதற்கு முக்கியமான சில குருமார்களின் பங்களிப்பு முக்கியமானது.

அவர்களில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கனடா "ஐயா மணி சிவம்" என்ற சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் முக்கியமானவர்.







அற்புதமான ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தை கனடாவில் ஸ்தாபித்து இலங்கை யாழ்ப்பாண பாரம்பரியத்தில் வழிநடத்தும் பெருமை அவருக்குரியது.

தவிர, தம் சொந்த ஊரான யாழ்ப்பாணத்துப் புங்குடுதீவிலும் பிள்ளையார் கோயிலை அழகாக பரிபாலனம் செய்கிறார். குறித்த கோயில் மஹோத்ஸவத்தை நெறிப்படுத்த தாயகம் வந்து செல்லும் வழக்கமுடையவர்.

பலப்பல சமூக நலப்பணிகளிலும் ஈடுபடும் குருக்கள் அவர்கள் பலரையும் பாராட்டுவதிலும் ஊக்குவிப்பதிலும் முன்னிற்பது உலகறிந்த உண்மை.





இத்தகு ஆளுமை நிறைந்த குருக்கள் தம்பதியர் சென்ற ஆண்டு சஷ்டியப்த பூர்த்தி - மணி விழா காண்கிறார்கள். அதை தம் புங்குடுதீவூரிலே கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

அவர்கள் ஸ்ரீலஸ்ரீ துறைசை குரு மகா சந்நிதானத்தால் சிவாகம கலாநிதி விருது பெற்றமை பெருமையோடு போற்றுதற்குரியதாகும். இவற்றை ஆற்றுப்படுத்தும் சிவஸ்ரீ. ரவி. சுவாமிநாத சிவாச்சார்ய ஸ்வாமிகளுக்கும் எமது நமஸ்காரங்கள்.

இவ்வாறு மேற்படி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் 'உண்மைகளைச் சாகடிக்கும்' வரலாறு எதுவரை தொடரும்?



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• "இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?"
• "சர்வதேச நீதிப் பொறிமுறையே வேண்டும்".

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான புதன்கிழமை (30 ஒகஸ்ட் 2023) வடக்குக் கிழக்கில் பேரெழுச்சியுடன் திரண்ட மக்கள் சர்வதேசத்திற்கு உறுதியான செய்தியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30 ஆம் திகதி பிரகடனப்படுத்தியது. என்பது குறிப்பிடத்தக்கது.

• "எமது பிள்ளைகள் எங்கே?"
• "எமது உறவுகள் எங்கே?"
• "வட்டுவாகலில் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே?"
• "கொலையாளி ஜனாதிபதியாய் உள்ள நாட்டில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும்".
• "ஐ.நா.வே! கைகளில் ஒப்படைத்தவர்களை தேட OMP அலுவலகம் தேவையா"?
• "இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்"?
• "சர்வதேச நீதி கோரியே போராட்டம்."
• "சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்".

இவ்வாறான குரல்களினால் வடக்குக் கிழக்கு அதிர்ந்தது.

ஐ.நா பிரகடனப்படுத்தியுள்ள தினங்களில் மாத்திரமே அந்தந்தத் தினங்களுக்குரிய கோரிக்கைகள் ஒலிப்பது வழமையாக இருந்தபோதும் இலங்கையைப் பொருத்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஐ.நா பிரகடனப்படுத்தியுள்ள தினத்துக்கும் அப்பால் நாளாந்தம் வடக்குக் கிழக்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

2009 யுத்தத்தின் போது சர்வதேசத்தையும் அதன் சட்டவிதிகளையும் நம்பி கையளித்த உறவுகள் "தம்மால் கையளித்த உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன ஆனது?" என்ற பொறுப்புக்கூறலினை சர்வதேசத்திடம் கோரி இரவு, பகலாக வீதியோரத்தில் முன்னெடுத்து வரும் அறவழி சாத்வீகப் போராட்டமானது 12.08.2022 ஆம் நாள் 2018 நாட்களைத் தொட்டுள்ள நிலையில் நீதிகோரி தொடர்ச்சியாக தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்குமுகமாக நீதிக்கான கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மொத்தத்தில் 2378 நாட்களுக்கு மேல் உறவுகளைத் தேடும் உறவினர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் இந்தப் போராட்டத்தில் இதுவரை 140 உறவுகள் தமது உறவுகளைக் காணாமலே உயிரிழந்துள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1996 ஐநா அறிக்கை ஒன்றின் படி 1980-96 காலப்பகுதியில் இலங்கையில் 11,513 பேர் காணமல் போய் உள்ளனர். இது உலகில் ஈராக்குக்கு அடுத்தபடியான இரண்டாம் நிலை ஆகும்.

1999 ஆசிய மனிதவுரிமை ஆணையத்தின் அறிக்கை ஒன்றின் படிஇ அப்போது 16,742 எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத வழக்குகள் இருந்தன. அதன் பிறகு நடத்தப்பட்ட ஆள்கடத்தல்களும் காணாமல் போதல்களும் இந்த எண்ணிக்கையை ஆயிரக்கணக்கில் அதிகரித்திருக்கும் இவ்வாறு கடத்தப்படுவர்களின் பெரும்பான்மையானோர் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

போர்க் காலத்தில் மாத்திரமல்ல இதற்கும் அப்பால் போர் மௌனமாக்கப்பட்ட வேளை தமது உறவுகளை படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கும் இதுவரை என்ன நடந்தது என்பதுகுறித்து உறவுகளினால் தகவல்களைப் பெற முடியாதிருக்கின்றது.

இலங்கை வடக்கு கிழக்கு தமிழர் வாழ் பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் பொது மக்களிற்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் அடிக்கடி கடத்தப்பட்டு காணாமல் போவதும் கொலைச்செய்யப்படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் மற்றும் மனிதவுரிமை பணியாளர்கள் 57 பேர் கடத்தப் பட்டு கொலைச்செய்யப்பட்டுள்ளோர் விபரத்தையும் ஆசிய மனிதவுரிமை ஆணையம் வெளியிட்டுள்ளது. ஜ16ஸ இவர்கள் அணைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

• ஆணைக் குழுக்கள்

முதலாவது ஆணைக்குழு 1992 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் நியமிக்கப்பட்டது, அவரின் ஆட்சியில் ஆயிரக்கணக்கான காணாமல் போனவர்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய அளவிலான ஆணைக்குழுவையும் அதே நோக்கத்திற்காக மூன்று வலய ஆணைக்குழுக்களையும் நியமித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) மற்றும் 2013 இல் காணாமல் போனோர் ஆணைக்குழு என அழைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவை நியமித்தார். பரணகம ஆணைக்குழுவிற்கு 19,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.



தற்போது இயங்குகின்ற OMP வரை எந்த ஒரு ஆணைக்குழுவும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலையும் உறவுகளுக்கு பதில் கூறியதாக இல்லை. உண்மையில் இந்த ஆணைக்குழுக்கள் அனைத்துமே சர்வதேசத்தையும் ஐ.நாவையும் சமாளிப்பதற்கான நகர்வுகளாகவே அமைந்துள்ளன. எனவேதான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச நீதிப்பொறிமுறையைக் கோரி நிற்கின்றனர்.

இலங்கையில் எந்த அரசாங்கமும் அல்லது எந்தவொரு சிங்கள அரசியல் தலைவரும் காணாமல்போனோர் விவகாரத்துக்குப் பதில் கூற முன் வரும் நிலையில் இல்லை.

1980 களில் இருந்து நாட்டின் அனைத்து தலைவர்களிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே 2020 ஜனவரி 17 அன்று ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கருடனான ஒரு சந்திப்பின் போது காணாமல் போன அனைவரும் "உண்மையில் இறந்துவிட்டார்கள்" என்று கூறினார் என்பதை டெய்லிமிரர் பத்தி எழுத்தாளரான M.S.M.Ayub குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங் 2020 ஆண்டு இலங்கை வந்தபோது அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவால் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவ்வேளையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்படவில்லை. காலம் பிந்தியே தெரிவித்தார் என்பதே உண்மையாகும்.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய எந்த ஒரு தலைவரோ அல்லது அரசாங்கமோ உண்மையான முயற்சியை மேற்கொள்வது அரசியல் ரீதியாக தற்கொலை செய்து கொள்ளும் செயலாகும். மறுபுறம் தமிழ்த் தலைவர்கள் இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தமது கோரிக்கைகளை மாற்றிக் கொள்வதும் தற்கொலைச் செயலாகும். எனவேதான் இந்த விடயம் முடிவின்றி தொடர்கிறது என்றும் M.S.M.Ayub குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் சிங்கள ஆளும் வர்க்கம் தத்தமது அரசியல் இருப்புக்காக எவ்வளவு காலத்திற்கு உண்மைகளை சாகடிக்க முடியும் என்பதே கேள்வியாகும்.

Email : vathevaraj@gmail.com
31st August 2023



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடாத்தப்படும் "யாழ் முயற்சியாளர் – 2023" விற்பனைக் கண்காட்சி





யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடாத்தப்படும் "யாழ் முயற்சியாளர் - 2023" விற்பனைக் கண்காட்சி இன்றையதினம் ஆரம்பமானது.

சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும். அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் குறித்த கண்காட்சி 29-08-2023, 30-08-2023 யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதோடு, மேலதிக அரசாங்க அதிபர் (காணி), நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் கமலகுமாரி கருணாநிதி, தொழிற்துறை திணைக்களத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



நூறு வரையான முயற்சியாளர்கள் பங்கேற்றுள்ளதுடன் கண்காட்சியினை பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு தரமான உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ் மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு வார இறுதியிலும் மாவட்ட செயலகத்தினால் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமாக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சி இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

# தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம்



தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டமானது மீண்டும் ஆரம்பமாகி இருந்தது. அந்தவகையில் போராட்டமானது இன்றும் தொடர்ந்தது.

இன்று போயா தினம். ஆகையால் திஸ்ஸ விகாரையில் வழிபாடுகள் நடாத்துவதற்கு சிங்கள பௌத்தர்கள் விகாரைக்கு வந்தபடியால் இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இராணுவ வாகனத்தில் சிவில் உடைகளில் வந்தவர்கள் குறித்த விகாரைக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "மக்களின் வரிப் பணத்தில் சம்பளம் சட்டவிரோத விகாரைக்கு காவல், தையிட்டி மண் தமிழர் சொத்து, சட்டவிரோத விகாரையை உடனே அகற்று, இந்த மண் எங்களின் சொந்த மண், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், ஆயுதங்களுக்கு அடிபணிய மாட்டோம் என்றும், அடாவடிகளுக்கு அடிபணிய மாட்டோம், இனப்படுகொலை இராணுவமே வெளியேறு, சட்டவிரோத திஸ்ஸ விகாரையை உடனே அகற்று" என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அறகலய போராட்டக் காரர்களை ஏமாற்றவே இனவாத மதவாத சக்திகள் முனைகின்றன – சுரேந்திரன் குருசாமி

அறகலய போராட்டக் காரர்களை ஏமாற்றவே இனவாத மதவாத சக்திகள் முனைகின்றன. இனவாத மதவாத சக்திகள் போராட்டக்காரர்களுக்கு வழங்கிய உறுதிமொழியிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார்களா? இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அறகலய போராட்டக்காரர்களுக்கு முறைமை மாற்றம் ஒன்றை செய்வோம் என்று உறுதிமொழி வழங்கியவர்கள் இன்று இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டுவதன் மூலம் தங்கள் உறுதிமொழிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்களா?

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி ஆட்சி பீடம் ஏறியவர்களை நாட்டு மக்களே தவறை உணர்ந்து கொண்டு அறகலயப் போராட்டத்தை முன்னெடுத்து துரத்தினார்கள்.

போராட்டக்காரர்கள் முன்வைத்த முறைமை மாற்றம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஆறு மாத காலத்திற்குள் அதை செய்து முடிப்பதாக உறுதிமொழி வழங்கிவிட்டு இன்னும் அது பற்றி எதுவுமே செய்யாது உள்ளனர்.

மாறாக மீண்டும் இனவாத மதவாத கோ'ங்களை எழுப்பிக் கொண்டு தாங்கள் போராட்டக்காரருக்கு வழங்கிய உறுதிமொழிகளை மடைமாற்றம் செய்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ள புத்த பிக்குகள் உட்பட பலர் அறகலய போராட்ட காலத்திலும் பின்னரும் தலைமறைவாக அஞ்சி வாழ்ந்தனர்.

போராட்டக் காரர்களிடம் இருந்து தப்பிக்க அவர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டனர். இன, மத பேதங்களை கட்டவிழ்த்து ஆட்சியாளர்கள் சிங்கள மக்களை ஏமாற்றி நாட்டைக் கொள்ளையடித்தனர் என்பதே போராட்டக் கார்கள் முன்வைத்த வாதம். அதற்கு பரிகாரமாக முறைமை மாற்றத்தை கோரினர்.

புதிய அரசியல் யாப்பினை உருவாக்கி அக்கோரிக்கையை நிறைவேற்ற உறுதிமொழி வழங்கி மூச்சு விட்டவர்கள் அதை நிறைவேற்றாமல் இனவாத மதவாத கருத்துக்களை எழுச்சி பெற வைத்து நாட்டு மக்களை மீண்டும் ஏமாற்ற முயலுகிறார்கள்.

பொருளாதார சிக்கல்களில் இருந்து நாடு சுமுகநிலையை அடைந்து மீள முயற்சித்துக் கொண்டிருந்தாலும் முறைமை மாற்றம் சம்பந்தமாக எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை கைக் கொள்ளவில்லை. இந்த காலக்கெடு முடிந்து போராட்டக்காரர்கள் மீண்டும் தலையெடுத்து விடக் கூடாது என்பதற்காக தமிழ் மக்கள் மீது இனவாதத்தையும் மதவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு தங்கள் உறுதி மொழிகளில் இருந்து தப்பிப்பதற்கும் போராட்டக்காரர்களை ஏமாற்றுவதற்கும் முயற்சி செய்கிறார்களா என்ற சந்தேகம் உறுதியாகி வருகிறது.

சிங்கள மக்கள் குறிப்பாக போராட்டக் காரர்களை இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இனவாத மதவாத சக்திகள் மீண்டும் ஆட்சி பீடம் ஏற இடமளிக்கக் கூடாது. இது ஒட்டு மொத்த நாட்டிற்கும் கேடு விளைவிக்கும் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் குழந்தையின்மை பிரச்சினைக்கான இலவச மருத்துவ முகாம்

குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் வீதியில் உள்ள லொயலாஸ் மண்டபத்தில் 26-08-2023 மற்றும் 27-08-2023 என இரண்டு தினங்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை முகாம் இடம்பெறவுள்ளது.

முகாமில் இந்திய வைத்திய நிபுணர் தாட்'ாயினி கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.




இசைச் செல்விகள் அமிர்தா முரளிதரன், ஆரதி முரளிதரன்
வாய்ப்பாட்டு அரங்கேற்றம்
திரு. திருமதி முரளிதரன் தம்பதியின் அன்புச் செல்விகளும்
'கானாமிர்தம்' இசைக் கல்வி கூடத்தின் அதிபரும் குருவுமாகிய
ஸ்ரீமதி ஆதிரை சிவபாலன்-றொஷான்
அவர்களின் மாணவிகளுமான இசைச் செல்விகள்
அமிர்தா முரளிதரன், ஆரதி முரளிதரன்
ஆகியோரின் இசையரங்கேற்றம்.
இடம்:
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge Street, Richmond Hill. Ont. L4C 3B7
காலம்:
09-09-2023 சனிக்கிழமை
மாலை 4.00 மணிக்கு
அன்பர்கள், நண்பர்கள், இசை ரசிகர்கள், ஆசிரியப் பெருந்தகைகள்
மற்றும் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
Refreshments from 4:00 PM to 5:00 PM.
Program commences at 5:00 PM.


www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
UTHAYAN CULTURAL SHOW - 2023
and 27th Year Celebration
tasty தமிழா
Presents
உதயன் பல்சுவைக் கலைவிழாவும்
விருது வழங்கலும்-௨௦௨௩
DATE: 15-10-2023 Sunday
TIME: 6:00 PM
VENUE:
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8
கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை
இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக
"பொன்னியின் செல்வன்" புகழ்
வி. எம். மகாலிங்கம் அவர்களும்
கனடியப் பாடக பாடகிகளும் மேடையை அலங்கரிப்பார்கள்
TICKETS
VIP $15
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512

# 29th Anniversary Grand Sale

SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!

S&S Since 1994



## SAMY & SONS
Wholesalers & Retailers

# GRAND SALE

## AUG. 28th TO SEP. 30th

- Reliable
- Trustworthy
- Friendly

**Textiles, Jewellery, Gift Items & Fancy Goods**
**Express Money Transfer,**
**Pawn Broker, Etc.**

- Quality
- Quantity
- Discounts

## BLOWOUT SALE EVERYTHING MUST GO



$33

Premier



$48

Preethi Eco Plus 3pcs



$149



9pcs $125

### EACH $7.00
Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
And Many More!

### NEW ARRIVALS
Pattus, Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
**All At Unbelievable Blowout Prices.**

### EACH $12.00
Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes),
**Milk Cooker,**
**Appa Chatti,**
**Puttu Kudam,**
**Archunai Basket,**
**Kundu Dosa Chatti,**
**Coconut Scrapper.**

**Steamer $29.00**
**Banana Leaf Plate $3.50**
**3 Set Satti $18.00**
**Silver or Brass Thattus, and more!**



**Many More Items on Sale:**

**OPEN 7 Days**
10:00am
9:00 pm
DOOR BUSTER
First 25 Customers Get A Free Rice Cooker If Purchase Is Over $300 (Clothing Items)

**Fancy Items From 50¢**
**Tel: 416-298-1598**
**Cell: 647-239-SAMY (7269)**
1884 B Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com Email: samyandsons@gmail.com

DOOR BUSTER
First 25 Customers Get Free HOT BOX If Purchase Is Over $150 (Clothing Items)

அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்


விலா கருணா பெரியோர் இல்லம் வழங்கும்
சந்தியாராகம் - 2023
HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA
GOLDEN
Super Singer
SEASON 5 GRAND FINALE
சந்தியாராகம்
Santhiyaragam
Music by
The WIND
Nothing but music !
16
SEP 2023
AT 4.30PM
Live Coverage
ஈழத்தாய் eet TV 24 HOURS TAMIL TELEVISION
Krishna LIVE TELECAST
TICKETS $50
Dinner provided
@
THAMIL ISAI KALAAMANRAM
1120 Tapscott Rd., Unit#3 Scarborough, ON, M1X 1E8
FOR TICKET MORE INFORMATION:
KIRUBA : 416 564 4366 / INDU/PARA: 416 282 4535 / INDRANI : 416 200 6971
COMPUTEK COLLEGE
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Chapel Ridge
CHRISTEEN SEEVARATNAM
SERVING THE TAMIL COMMUNITY OF GREATER TORONTO
RAMACHANDRAN LAW
Professional Corporation
Lucaaa KITCHENS
MEDIA SPONSORS
cmr
தமிழ் Mirror
www.tamilmirror.lk
timeFM
east FM 102.7
உதயன்
செந்தாமரை
Senthamarai

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
15
08
1923



ஆண்டவன் அடியில்
02
08
2023

## அமரர் செல்லையா இராசம்மா

யாழ். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து அமரத்துவமடைந்த அமரர் செல்லையா இராசம்மா அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

எமை ஈன்றெடுத்த எம் அன்புத் தாயே
உங்கள் இன்முகம் தான் எங்கேயம்மா
இவ்வுலகில் எமைவிட்டுப் பிரிந்து
மாதம் ஒன்று ஆனதுவே அம்மா

பாசத்தை நமக்கு ஊட்டி வளர்த்த
பண்பான எம் அன்னையே
கண்ணின் இமையானீர் அன்று
எம் கண்ணிரின் கதையானீர் இன்று

எங்கள் பாச ஒளிவிளக்கே
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் திருமுகம் எங்கள் நெஞ்சை
விட்டு என்றும் அகலாது அம்மா

ஏங்கித் தவிக்கின்றோம் ஏமாந்து போகின்றோம்
மீண்டும் ஓர் பிறப்புண்டேல்
உமக்கே பிள்ளைகளாய் பிறப்போம் அம்மா
வாரும் அம்மா ஒரு முறையேனும் எங்களிடம்....

அன்னையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு இலங்கையிலும் கனடாவிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கட்கும் இறுதிக்கிரியை, இறுதியாத்திரை முதலியவற்றில் கலந்து கொண்டவர்களிற்கும் மலர்வளையம் வைத்தவர்க்கும் கண்ணீர் அஞ்சலிப் பத்திரிகை வைத்தவர்க்கும் தொலைபேசியில் ஆறுதல் வார்த்தைகள் சொன்னவர்கட்கும் சமுக வலைத்தளங்களில் இரங்கல் வார்த்தைகளைப் பதிவேற்றியவர்களிற்கும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கு கொண்டவர்களிற்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் சனிக்கிழமை 02.08.2023 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஐயனார் கோவில் வீதியில் அமைந்திருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள் மற்றும் கொப்பாட்டப்பிள்ளைகள்.
ஐயனார் கோவில் வீதி, சுன்னாகம்

தகவல்
நந்தகுமார் - கனடா
416-473-8520

## அமெரிக்காவிலிருந்து இசைக் கவி எழுதுகின்றார்...

# “நான் அமெரிக்கா பார்க்க வேண்டாமா?

**தமிழ்நாட்டிலிருந்து தற்போது அமெரிக்காவிற்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள “இசைக் கவி” ரமணன் அவர்கள் கனடாவில் எதிர்வரும் 09-09-2023 அன்று ஒரு சொற்பொழியை ஆற்ற வருகின்றார். அன்றைய தினம் கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் “பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி” என்னும் தலைப்பில் பாடல்களைப் பாடியும் உரையாற்றியும் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவுள்ளார்.**

*29.08.23*

**நே**ரம் காலம் தெரியாமல்
நினைவும் கனவும் புரியாமல்
பாரம் சிறிதும் குறையாமல்
பரவும் ஒருவகை நிம்மதி
ஆரம் விட்டம் என்றெல்லாம்
அளவை எதுவும் இல்லாமல்
ஓரம் நின்று பார்க்குங்கால்
ஒவ்வொரு காட்சியும் சந்நிதி

லூவலாகா..

என்னையா இது? பாஸ்டன் பார்ட்டியா?

சொல்கிறேன், சொல்கிறேன்.. என்ன அவசரம்?

நான் உணவை ரசித்து உண்பேன். ஆஹா ஓஹோ என்று பாராட்டுவேன். எனக்குச் சோறு போட்டவர் எல்லோரும் என் தாய்மார்களே, அவர்கள் என்னைவிட வயதில் இளையவர்களாக இருந்தாலும் அப்படித்தான். கொஞ்சம் அளவுக்கு மீறிப் புகழ்வதாக என் குடும்பத்தார் கருதுவதுண்டு சில நண்பர்களும், “என்னடா அந்தச் சாப்பாட்டைப் போய் ஆஹா ஓஹோ என்றாய்?” என்று அங்கலாய்ப்பார்கள். என் மனப்பான்மை என்ன தெரியுமா? நான் ஒரு பிச்சைக்காரனாகத்தான் உணர்கிறேன். ஆனால் பராசக்தி என்னைச் செல்லப் பிள்ளையாகத்தான் நடத்தி வருகிறாள்.

ஏன் பிச்சைக்காரன் என்று கருதிக் கொள்கிறேன்? ஒன்று இறையடியார்களின் பணிவு. திருவாசகமோ, திருவருட்பாவோ படித்துவிட்டு, நம்மைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொள்ள வாய்ப்பே இல்லையல்லவா? இரண்டாவது, உலகத்தில் நாம் காணும் வறுமை. ஒவ்வொரு முறை நான் உண்ணும்போதும், அட்டகாசமாகப் பாராட்டுவதை மட்டும்தான் பார்க்கிறார்கள். உள்ளுக்குள் நான் கூசிப் போகிறேன். அதற்குக் காரணம், வெளியே என்னால் ஒன்றும் செய்ய முடியாத வறுமை. அறிவியலும், தொழில்நுட்பமும் வளர வளர, வறுமையும் வளர்ந்துகொண்டே வருகிறதே, இது எத்தனை பெரிய அநியாயம்! அவமானம்!

எனக்குக் கர்ம வினை, விதி எல்லாவற்றிலும் நம்பிக்கை உண்டு. ஆனால், அவற்றை என்மீதுதான் பொருத்திக் கொள்வேனே தவிர, மற்றவர்கள் அல்லல் படும்போது அவர்களை அந்த சித்தாந்தத்தின் கண்ணோட்டத்தில் பார்க்க மாட்டேன். இப்படித்தான் என் குருநாதர் என்னைப் பழக்கினார். தட்டில் உணவை வைத்து உண்ணும்போது, சுற்றிலும் சூம்பிப் போன குழந்தைகள் கையை நீட்டிப் பரிதாபமாகக் கேட்பது போலிருக்கும். “உண்ணுங்கால் உள்ளத்தே ஊர்ப்பசியின் ஓலமெழும்”. எனவே, வெளியே தெரிவதில்லை என்றாலும், ஒவ்வொரு முறை உண்ணும்போதும், உள்ளுக்குள் குற்ற உணர்வால் ஓர் உளைச்சல் என்னைத் துளைக்கத்தான் செய்கிறது. “ஞான வைராக்ய சித்யர்த்தம், பிக்ஷாம் தேஹி ச பார்வதி”, ஞானமும், வைராக்யமும் எய்தவே உணவு தா தாயே! என்னும் பிரார்த்தனையைச் செய்யத் தவறுவதில்லை. அதேபோல, குருநாதர் சொல்லித் தந்தபடி, உண்டபின் கையைக் கழுவும்போது, “பசி, தாகம் என்னும் நரகங்களில் பரிதவிப்பவர்களுக்கு, நான் உண்ட நிறைவு போய்ச் சேரட்டும்”, என்று மனத்தில் நெகிழ்ந்துதான் கழுவுவேன். சோறு போடும் எல்லோரையும் - மனைவியிலிருந்து தொடங்கி - மனமாரப் பாராட்டுவேன். நன்றி சொல்வேன். என் வாழ்க்கையே பராசக்தி போட்ட பிச்சை என்னும்போது உணவு எம்மாத்திரம்! அது கிடைக்கும் என்று நான் எப்படி அனுமானித்துக் கொள்ள முடியும்?



அப்பாதான் முதன்முதலில் உணவுக்குக் காட்ட வேண்டிய மரியாதையைக் கற்றுத் தந்தார். நான் தட்டில் மீதி வைத்ததால், என்னடா இது என்று கேட்டார். ஒண்ணுமில்லப்பா, காக்காய்க்கும், நாய்க்கும் என்றேன். “அடேய்! அதற்கு வைத்துவிட்டு அப்புறம் நீ தின்ன வேண்டும், உன் எச்சிலையா போடுவது?” என்று ஒரே போடாய்ப் போட்டார். அசௌகரியமான அசடு வழிதலுக்குப் பின்னர், “கேளுடா! அன்னம் ந நிந்த்யாத்! தத் வ்ரதம்” என்றார்.

உணவை வீணாக்காதே! அதுதான் ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டிய விரதம். ஒன்பது வயதிலிருந்து உணவு விஷயத்தில் அப்பா சொன்னபடிதான் நடந்து வருகிறேன்.



சாப்பிடும்போது நான் செய்யும் ஆனந்த ஆர்ப்பாட்டம் நண்பர்கள் நடுவே பிரபலமாகி விட்டது. எங்கள் “பாரதி யார்?” குழுவிலும் அப்படித்தான். ஒத்திகை முடிந்து உண்ணும்போது, முதல்வாய்க்கே “ஆஹா!” என்பேன். உடனே ரங்காவும், தர்மாவும், “சாப்புட்றா ரமணா1 அப்றம் பாத்துக்கலாம்!” என்று கூவுவார்கள். அது என்னுடைய வசனம்தான். என்னைச் சொல்ல விடாமல் அவர்களே நான் சொல்வது போலச் சொல்லிக் காட்டுவார்கள்!

என் மகள், அதாவது மருமகள், அதாம்ப்பா ப்ரியா, வெந்தயக் கீரைப் பருப்பும், காலிப்ளவர், உருளைக்கிழங்கு, வெங்காய வதக்கலும் போட்டு, முதல் பந்திக்கு முந்தின பந்தியிலேயே உட்கார்த்திவைத்து அன்போடு பரிமாறிய போது இவை அத்தனையும் நினைவுக்கு வந்தன.

வீட்டைச் சுத்தம் செய்யப் பணியாளர்கள் வருகிறார்கள், நாம் வெளியே போய்விட்டு வருவோம் என்றாள் ப்ரியா. எல்லோரும் மிருகக் காட்சி சாலைக்குக் கிளம்பினோம் - கொஞ்சம் பந்துக்களைப் பார்த்துவிட்டு வரலாமென்று.

ஊபர் ஓட்டுனர் ரோனி, “பின்” நம்பர் கேட்டார். பின்சீட்டிலிருந்த ப்ரியாவுக்கு அப்படி ஒரு நம்பர் வந்து சேரவே இல்லை. இருவரும் முயன்று இருவரும் தோற்று, இறுதியில் ரோனி வண்டியைக் கிளப்பினார். அவருடன் பேச்சுக் கொடுத்தேன். நான் பேசப் பேச அவர் தன் மனத்தைத் திறந்தார்.

“நான் கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் உகாண்டாவைச் சேர்ந்தவன். இடி அமீன் காலத்தில் இந்தியர்களை அவன் வெளியேறச் சொன்னது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். எங்களில் பலரும் பிழைப்பு தேடி வெளி நாடுகளுக்குச் சென்றோம். அப்படித்தான் நான் அமெரிக்காவுக்கு வந்தேன்.

அப்பா கண்டிப்பாக வளர்த்தார். ஒவ்வொரு முறை விடுமுறைக்கும் வெவ்வேறு அத்தைகள் வீட்டுக்குச் செல்வோம். அவர்களும் நாங்கள் தவறு செய்தால் எங்களைத் திருத்துவார்கள். பெரியவர்களிடம் பெற்ற ஞானம் இப்போது பயன்படுகிறது. அன்றைக்கு அவர்கள் சொல்லும்போது சிரமமாகத்தான் இருந்தது, எரிச்சல் வந்தது. இன்றைக்கு அவர்களுடைய அருமையும், அவர்கள் புகட்டிய பண்புகளின் பெருமையும் புரிகிறது.

என் அப்பா சொல்வார், “Life is lived by looking forward but understood only by looking backward.” முன்னே நோக்கித்தான் வாழ்க்கை வாழப்படுகிறது. பின்னே திரும்பித்தான் வாழ்க்கை புரிந்துகொள்ளப் படுகிறது.

(டாக்சி ஓட்டுனர் சொன்ன இந்த வாக்கியம் எனக்கு மிகவும் பிடித்தது. உங்களையும் கவர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன்.)

“இன்றைக்கு நாம் சந்தித்தோம் என்றால் அது இறைவனின் ஏற்பாடு. ஏனென்றால், யாரிடமும் நான் இத்தனை பேசுவதில்லை. யாரும் என்னிடம் பேச்சுக் கொடுப்பதுமில்லை. நீங்கள் என்னைப் பேசத் தூண்டினீர்கள். நீங்கள் இந்தியர் என்றதும் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இறைவன் அருளிருந்தால், நாம் மறுபடி சந்திப்போம்” என்று விடைபெற்றுக் கொண்டார் ரோனி.

ஆப்பிரிக்கா என்பது இயற்கைச் செல்வங்கள் மட்டுமல்ல, செழுமையான கலாசாரத்திலும் மேன்மையானது. முன்னது சுரண்டப்பட்டது. பின்னது அழிக்கப்பட்டது. வெள்ளையர்கள் கால்வைத்த எந்த மண்ணின் கதையும் இப்படித்தான் ஆனது.

“இன்றைக்குள்ள தலைமுறையினருக்கு நம்முடைய பழம்பெருமையை எடுத்துச் சொல்வோர் குறைவு. சொன்னால் கேட்கின்ற மனநிலையில் அவர்கள் இல்லை. அதனால்தான் பெரும்பாலானோர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிப்போய், வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்கிறார்கள். என் இளைய மகனுக்குப் பத்து வயதாகிறது. அவனுக்கு இரண்டு வயதாகும்போது பார்த்தேன். அப்புறம் தொடர்ந்து பார்க்க முடியவில்லை. அவனுக்குப் பெல்ட் அணிவதோ, ஷூ லேஸ் அணிவதோ நானல்லவா சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்? அவன் பாட்டிக்குத்தான் பாவம் கூடுதல் வேலை”.

“அன்றைக்குப் பெரியவர்கள் கண்டிக்கும்போது புரியவில்லை. இப்போது அவர்கள் அருமை புரிகிறது. நாம் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று தெரிகிறது,” என்று நெகிழ்ச்சியுடன் சொன்னார்.

உங்களுக்கு ரோனிதான் பெயரா? என்று அனு கேட்டாள். அந்தக் கேள்வி அவரைச் சிந்திக்கத் தூண்டியது. “காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் உகாண்டாவும் ஒன்று. அதன் விளைவாக நாங்கள் வழக்கத்திலிருந்த எங்கள் பெயர்களையும் இழந்தோம்”.

அனுவா விடுவாள்? அடடா! உங்கள் பெயர்களுக்கெல்லாம் ஒரு பின்னணி, அடையாளம், ஓர் அர்த்தம் இருக்குமே!

“ரோனி என்பது இங்கு வந்த பெயர். அதற்குப் பொருளொன்றும் கிடையாது. லூவலாகாவுக்கு என்ன பொருள் என்பதோ எனக்குத் தெரியாமல் போனதற்கு வருந்துகிறேன். ஆம், அதுதான் என் பகாண்டா மொழிப் பெயர்,” என்றார் அந்த டாக்சி ஓட்டுனர்.

அம்மாடி! கட்டுரையின் முதல் வார்த்தைக்கு விளக்கம் சொல்லி முடித்து விட்டேனா!

மிருகக் காட்சி சாலையில் இரண்டுமணி நேரம்தான் இருந்தோம். மாலை ஐந்து மணிக்கு, விலங்குகளுக்கான உணவு இடைவேளை! அப்போது ஒருமணி நேரம் மூடி விடுகிறார்கள். அதன் பிறகு ஆறு மணிக்கு மறுபடித் திறக்கிறார்கள். நாங்கள் ஐந்து மணிக்கெல்லாம் வெளியேறி விட்டோம். மீண்டும் ஊபர். இந்த டிரைவர் அதிகம் பேசவில்லை. வரும் வழியில் எங்கள் “பாரதி யார்?” நாடகத் தயாரிப்பாளர்/இயக்குனர் திரு எஸ்பிஎஸ் ராமனை நினைத்துக் கொண்டேன். ஏன்? இங்கே அருமையான கால்.ஃ.ப் கோர்ஸ் இருக்கிறது. இறைவன் அருளால் நாடகம் போட இங்கே வந்தால், அவருக்கு இங்கே விளையாட வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்.

ப்ரியாவின் காபி, புத்துணர்ச்சியைத் தந்தது. வீட்டுச் சொந்தக்காரரின் மனைவி திருமதி கிரண் வந்தார். அனுவைப்போல் அவரும் பம்பாயில் இருந்தவர். பேச்சுக்குக் கேட்பானேன்? தடிதடியாய் அருமையாக இரண்டு ஊத்தப்பம் வார்த்துப் போட்டாள் ப்ரியா. கிரண் வீட்டில் செய்து வந்திருந்த “பனானா ப்ரெட்” அருமையாக இருந்தது. பெருங்காயம் போட்ட மோரைக் குடித்து நிமிர்ந்து கொண்டேன்.

பேத்தி, சுற்றிச் சுற்றி வந்து பல காரியங்கள் செய்தாள். பாத்திரங்களை எடுத்து வைத்தாள். எது கேட்டாலும் கேட்டு முடிக்குமுன்னே ஓடிவந்து அன்புடன் பரிமாறினாள். ப்ரியா பாஷையில் “ஒரே துடிக்குது புஜ”மாய் இருந்தாள்.

எனக்கென்னமோ, மிருகக் காட்சி சாலையில் அந்த தாய் கொரில்லா என்னைப் பார்த்த பார்வை சரியில்லை என்றே தோன்றியது. “எலேய்! உள்ள இருக்க வேண்டியவன் நீ! வெளிய நின்னுகிட்டு போட்டாவாலே புடிக்க?” என்று கேட்பது போலவே இருந்தது. கூடவே, ஜெயகாந்தனின், அவர்கள் வெளியே இருக்கிறார்கள் என்ற கதையும் ஞாபகம் வந்தது.

சீக்கிரமாய்த் தூங்கிவிட்டால் கொஞ்சம் உண்மைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் தீப்பற்றி எரிந்த வாகனம்!





யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப்பகுதியில், பட்டா வாகனம் தீப்பிடித்ததில் எரிந்து நாசமாகியுள்ளது.

மின் கசிவினால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பொருட்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹோட்சவ தேர் திருவிழா



- மன்னார் நிருபர் (29-08-2023)



மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹோட்சவ தேர் திருவிழா செவ்வாய்க்கிழமை (29) காலை 10 மணியளவில் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீச்சரத்திற்கு அடுத்து பெரிய ஆலயமாக காணப்படும் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவத் திருவிழாவின் 14 நாள் தேர் திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது.

இதன் போது ஆலயத்தைச் சுற்றி பக்தர்களால் காவடி எடுக்கப்பட்டு அங்கபிரதிஸ்ரை, செதில் காவடி, பறவை காவடி, கற்பூர சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்கள் செலுத்தப்பட்டது.

பின்னர் அம்பிகையின் சிலை தேரில் ஏற்றப்பட்டு நானாட்டான் வீதி சுற்றுவட்ட பகுதியூடாக பக்தர்களால் பக்தி பூர்வமாக ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது.

# முறிகண்டிக்கும், இரணைமடு சந்திக்கும் இடையில் ஏ – 9 வீதியில் விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் உயிரிழந்தார்

விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ம் திகதி முறிகண்டிக்கும், இரணைமடு சந்திக்கும் இடையில் ஏ-9 வீதியில் இரவு 10.30 மணியலவில் இடம்பெற்ற வீதி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பார ஊர்தியுடன் எதிராக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க முற்பட்ட மாட்டுக்கு இடம் கொடுத்து செல்ல முற்பட்ட வேளையில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் கிளிநெச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்களுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 29.08.2023 அன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செனவரட்ன எனவும் அவரது திருமணம் நடந்து ஒரு வருடகாலம் ஆகியுள்ளது எனவும் அறிய முடிகிறது.

இறந்த பொலிஸ் உத்தியோகஸ்த்தர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் கீழ் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# யாழ்ப்பாணம் தீவகப் பாடசாலை மாணவன் மாவா போதைப் பொருளுடன் கைது!

யாழ்ப்பாணம் தீவகப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் மாவா போதை பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, தீவக குடியிருப்பு பகுதி ஒன்றில் வசிக்கும் குறித்த மாணவன் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றிய நிலையில் மாவா போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில் குறித்த மாணவனை கைது செய்த ஊர்காவற்துறைப் பொலிசார் நீதிமன்றத்தில் முற்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் நீதி கோரி மன்னாரில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

## வடக்கு கிழக்கை சேர்ந்த 8 மாவட்டங்களில் இருந்தும் பங்கேற்பு




- மன்னார் நிருபர் (30.08.2023)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான புதன்கிழமை (30) வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (30) காலை 10.30 மணியளவில் மன்னார் நகரில் உள்ள சதொச மனித புதைகுழி பகுதியில் ஆரம்பமானது.

குறித்த போராட்டத்தில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய 8 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க பிரதி நிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை அரசாங்கத்தின் முப்படைகளினால் யுத்தத்திற்கு முன்பும் யுத்தத்திற்கு பின்பும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி மன்னார் "சதோச" மனித புதைகுழிக்கு அருகாமையில் இருந்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகியது.





காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், உட்பட அரசியல் பிரதி நிதிகளும் இணைந்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்னார் "சதோச" மனித புதைகுழிக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான குறித்த போராட்டம் மன்னார் சுற்று வட்ட பாதை ஊடாக ஓ.எம்.பி அலுவலக வீதியை சென்றடைந்தனர்.

பின்னர் அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தி காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் புகைப்படங்களை சுமந்து பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் கருத்துக்கள் வெளியிடப் பட்டதோடு, மகஜர் பொது வெளியில் வாசிக்கப்பட்டு மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையிலான அருட்தந்தையர்கள் இடம் கையளித்தனர்.

குறித்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு குடிநீர் மற்றும் ஏனைய உதவிகளுக்கு ரோரண்ரோ மனிதநேய அமைப்பு (Toronto Humanitarian Organization ) ஊடாக உதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# நல்லை கந்தனின் திருமஞ்சத்திருவிழா 30-08-2023 புதன்கிழமை மாலை வெகுசிறப்பாக இடம்பெற்றது



யாழ்ப்பாணம் - நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் 10 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா புதன்கிழமை (30) மாலை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

சிற்ப சாஸ்திர ஆகம விதிமுறைப்படி கலையம்சமும் சிற்பங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அழகிய மஞ்சத்தில் முத்துக் குமாரசுவாமியாக முருகப் பெருமான் எழுந்தருளி அருள் பாலித்தார்.

இந்த அழகிய மஞ்சத்திலே முத்துக் குமாரசுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்த காட்சியினை காண ஆயிரக்கணக்கான பக்தர்கள், யாழ்ப்பாணம், வெளி மாவட்டங்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களில் இருந்து வருகை தந்து கூடியிருந்தனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் – மூளாய் பாடசாலை ஒன்றில் மாணவனை பழிவாங்க துடிக்கும் ஆசிரியர் கஜேந்திரன் – யாழ்ப்பாணத்தில் இப்படியும் ஒரு ஆசானா?

மாணவனை பழிவாங்க துடிக்கும் கஜேந்திரன் - யாழ்ப்பாணத்தில் இப்படியும் ஒரு ஆசிரியரா?

ஆசிரியர் பதவி என்பது மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவதற்கும் அப்பால் நல்ல பழக்கவழக்கங்களை மாணவர்களிடத்தே வளர்க்க கூடிய ஒரு புனிதமான பதவியாக காணப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் தற்போது சில ஆசிரியர்களின் அடாவடிகள் என்பது போர்ச் சூழலில் தமிழ் மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட அடாவடிகளுக்கு ஒப்பாக மாறியுள்ளது.

அப்படி தான் யாழ்ப்பாணம் - மூளாய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிலும் இடம்பெற்றுள்ளது.

மாணவன் ஒருவனை பழி வாங்குவதற்கு கஜேந்திரன் என்ற ஆசிரியர் முயற்சித்து வருவதாக அறிய முடிகிறது (இந்த பழிவாங்கலுக்கான காரணங்கள் தேவைப்பட்டால் அடுத்த செய்தியில் மிக தெளிவாக எமது செய்திச் சேவை வழங்கும். அந்த மாணவனும் சக நண்பனும் பாடசாலை விட்டு வெளியே செல்லும்போது, சக நண்பன் விசில் (பாடசாலைக்கு வெளியே) அடித்தான். இதன்போது அந்த மாணவன் "நீ என்னுடன் வரும்போது விசில் அடிக்காதே" என கூறியுள்ளான். இருந்தும் அந்த மாணவன் அதை பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் விசில் அடித்தான்.

இதன்போது கஜேந்திரன் என்ற ஆசிரியர் விசில் அடிக்காத மாணவனை அழைத்து "ஏன் விசில் அடித்தாய் என கேட்டார்" அதற்கு அந்த மாணவன் "நான் விசில் அடிக்கவில்லை" என கூறினான். மறுபடியும் ஆசிரியர், நீ தான் விசில் அடித்தாய் என கூறியவேளை, அந்த மாணவன் தன்னுடன் வந்த சக நண்பனிடம் இது குறித்து விசாரிக்குமாறு கூறினான்.

இதன்போது ஆசிரியர் அந்த மாணவனை அழைத்து யார் விசில் அடித்தது என கேட்டவேளை, அவன் தான் விசில் அடித்ததை ஒத்துக் கொண்டதுடன், நண்பன் விசில் அடிக்க வேண்டாம் என்று கூறியதாகவும் கூறினான்.

இதன்போது குறித்த ஆசிரியர் விசில் அடிக்காத மாணவனை அனுப்பி விட்டு, விசில் அடித்த மாணவனிடம் கடிதம் வழங்குமாறு கோரினார். இதன்போது அந்த மாணவன் "நான் விசில் அடித்தது தவறு. இனிமேல் அப்படி செய்ய மாட்டேன் என எழுதி கடிதத்தை வழங்கினான்.

அந்த கடிதத்தை பறித்து கிழித்து எறிந்த கஜேந்திரன் என்ன ஆசிரியர் கிழித்து எறிந்துவிட்டு, அவன் சொல்லி தான் விசில் அடித்தேன் என எழுதி கொடு என்று மிரட்டினார். அவன் விசில் அடிக்க சொல்லவில்லை பின்னர் ஏன் நான் அவனது பெயரை எழுத வேண்டும் என கூறி அந்த மாணவன் நண்பனது பெயரை எழுதவில்லை. தனக்கு ஏதாவது சிக்கல் வந்தாலும் என்று நினைத்த ஆசிரியர் அடுத்தநாள் அந்த ஆசிரியர் மாணவனை சமாதானப்படுத்தியுள்ளார்.





அந்த மாணவன் மீண்டும் பாடசாலையில் இணைந்த பின்னர், வகுப்பில் யார் கூடவும் பேசக்கூடாது, தனியாக தான் இருக்க வேண்டும் என் கஜேந்திரன் என்ற ஆசிரியர் கட்டுப்பாடு விதித்துள்ளார். அப்படி யாராவது மாணவர்கள் அந்த மாணவனுடன் பேசியதை கண்டால் அவர்களை தனியே அழைத்து மிரட்டுவாராம்.

வெள்ளிக்கிழமை காலை பிரார்த்தனைக்கு சென்றால் அந்த மாணவனை ஏனைய மாணவர்களுடன் அமர்ந்திருந்து பிரார்த்தனையில் ஈடுபட விடாமல் தனக்கு பக்கத்திலே அமர்த்தியிருப்பாராம். ஏனைய மாணவர்களுக்கு மத்தியில் அவனிடம்" என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது, நான் நினைத்தது தான் நடக்கும் என்று கூறியுள்ளாராம். ஏனைய மாணவர்களை அந்த மாணவனுடன் சேர விடாமல் தடை போடுவாராம். அப்படி யாராவது சேர்ந்து சென்றால் அவர்களை அழைத்து விசாரணை செய்வாராம். அத்துடன் அந்த மாணவனையும் மிரட்டுவாராம். இவ்வாறு அந்த மாணவனின் மனதை நோகடிப்பதாக கஜேந்திரன் என்ற ஆசிரியர் செயற்பட்டு வந்துள்ளார்.

பிழையே செய்யாத அந்த மாணவனை திருத்துவது போல பாசாங்கு செய்து அவனது மனதை புண்படுத்துவதுடன் அநாகரீகமான முறையில் தொடர்ந்தும் நடந்து கொள்கிறார். இவர் கல்வி கற்பிக்க தொடங்கிய காலப்பகுதியில் (2007) இவரிடம் கல்வி கற்ற மாணவியிடம் முறைகேடாக நடந்த காரணத்தால் வெளிமாவட்டத்திற்கு இடமாற்ற தண்டனையில் சென்றுள்ளார். (தேவை ஏற்பட்டால் அடுத்த செய்தியில் அந்த முறைகேடான விடயம் என்ன என்பதையும், இவரது ஏனைய செயற்பாடுகள் குறித்தும் தெளிவாக எமது செய்திச்சேவை வழங்கும்).



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்துத் திருக்கோயில்கள் 1063

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் கொக்குவில், யாழ்ப்பாணம்

சமயம் என்பது மக்களைப் பண்படுத்தி நேரியவாழ்வு வாழ வழிகாட்டும் தூய மார்க்கமாகக் கருதப்படுகின்றது. தன்னையும் வாழ்வித்து மற்றவனையும் வாழ வழிகாட்டும் அன்பு நெறியே சமயமென ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் ஒன்று கூடி வாழுகின்ற சமுதாயத்திற்கு உயிர்நாடியாக சமயமே விளங்குகின்றது. இது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது. சமயத்தின் அடிநாதமாக சமயத்தின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் கருவியாக ஆலயங்கள் விளங்கி, ஆன்மாக்கள் ஈடேற வழி வகுத்துள்ளன. இயற்கை சீற்றமின்றி இயங்கவும், நாட்டிலே வளம் சிறக்கவும், விளைவு பெருகவும், மக்கள் வாழ்வு சிறக்கவும் ஆலய வழிபாடு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. தன்னை நாடிவரும் அடியவர்களின் துயர்போக்கி, அவர்களது தீவினைகளை அகற்றி, நல்வினைப்பயனை அருள்மூலமாக மக்களுக்கு உணர்த்தும் அறநிலையங்களாகவும் இவ் ஆலயங்கள் விளங்குகின்றன.

"முன்னியது முடித்தலின் முருகொத்தீயே" என்பதற்கமைய, முருகப்பெருமான் தமிழர் வாழ்வில் கண்கண்ட தெய்வமாகக் காணப்படுகின்றார். இத்தகைய முருக வழிபாடு, ஈழத்தின் மிகத் தொன்மையான வழிபாடாகக் காணப்படுகின்றது. இலங்கைத்திருநாட்டின் மகுடமெனத்திகழும் யாழ்ப்பாணத்திலே, முருக வழிபாடு தமிழரசர் காலத்தில் இருந்தே சிறப்புற்றுக் காணப்பட்டுள்ளது. அக்கால அரசர்களும் அரண்மனைகளைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தாது, ஆலயங்களைக் கட்டியெழுப்புவதில் ஆர்வங்கொண்டு அதனை நிறைவேற்றியுள்ளார்கள். செந்தமிழ்ப் பிரியனான கந்தவேளை எந்தவேளையும் நினைக்க, ஈழமெங்கும் பல முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் கலியுகவரதனாம் கந்தப்பெருமான் அருள்பாலிக்கும் திருத்தலங்களுள், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. பழமையான கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் ஒருங்கே கொண்டதாக அமைந்துள்ளது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கொக்குவில் என்னும் இடத்தில், மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மிகப் புராதனமானது. இவ்வாலயம் சைவமணங்கமழும் யாழ்நகரின் வடபால் இரண்டு மைல் தூரத்திலும், கொக்குவில் புகையிரத நிலையத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலும், காங்கேசன்துறை வீதியின் தெற்குப்புறமாகவும் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலே வள்ளி அம்மையார் தெய்வயானை அம்மையார் சமேதரராக சுப்ரமணியப்பெருமான் வீற்றிருந்து அருளாட்சி புரிந்து வருகின்றார். மஞ்சலியாடு, மஞ்சமலியகாடு எனப் பல பெயர்களால் கூறப்பட்டுவந்த இவ்வாலயம், முருகபக்தர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால், மஞ்சவனப்பதி என்ற சிறப்புத்திருநாமம் இடப்பட்டு, அப்பெயரே தற்காலத்தில் நிலைத்துநின்று, அருளும் புகழும் பொலிவுற்றோங்கி வளர்ச்சிபெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது. கொக்குவில் கிராமத்திலே மஞ்சமருதிகாடு என்ற இடப்பெயருடைய குறிச்சி ஒன்று காணப்பட்டது. இவ்விடம் மேட்டுநிலமாகவும், மருதமரங்கள் வானளாவி நிறைந்த சோலையாகவும் விளங்கியது. இவ்வழகிய இடத்திலே அம்பலவாண விநாயகமூர்த்தி என்ற பெயரிலே ஆலயமொன்று இருந்துள்ளது. தற்காலத்திலே, பரிவார மூர்த்தியாகிய விநாயகர் ஆலயம் இருக்கும் இடத்திலே இருந்த விநாயகரை, இடப்பெயரைக் கருத்தில் கொண்டு மஞ்சமூர்த்தி என அழைத்துள்ளனர்.

தற்போது மஞ்சவனப்பதி முருகனாக கர்ப்பக்கிரகத்தில் வள்ளி தெய்வயானை சமேதரராக சுப்ரமணியப் பெருமான் வீற்றிருக்கின்றார் என்பது கர்ணபரம்பரைக் கதையாகக் காணப்படுகின்றது. முருக வழிபாடு புகழும், அருளும் பெற்ற வழிபாடாக மலர்ந்ததன் விளைவாக, ஈழத்தின் பல பாகத்திலே விநாயகர் ஆலயங்கள், மற்றும் சிவாலயங்கள் எனப் பல ஆலயங்கள் பிற்காலத்திலே, முருகன் ஆலயங்களாக மாற்றம் பெற்ற வரலாறு, ஆலய வரலாறுகளில் காணப்படுகின்றது. கி.பி 115 ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் தோற்றம்பெற்றதென கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது. சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தில் தனது ஆட்சியை நிலைநிறுத்திய காலத்திலே, கொக்குவில்பதிவாழ்மக்கள் மஞ்சமருதிகாடு என்ற இடத்திலே விநாயகப்பெருமானுக்குரிய கோயில் ஒன்றை அமைத்தனர்.

ஆரம்ப காலத்திலே இவ்விநாயகர் ஆலயம், சிறு கொட்டகையுடனான அமைப்பிலேயே மடாலயமாகக் காணப்பட்டுள்ளது. இக்கொட்டகை ஓலையால் வேயப்பட்டு, தரை சாணத்தால் மெழுகப்பட்ட நிலையிலேயே இருந்துள்ளது. ஆரம்பகாலத்திலே ஆகமநெறி சாராத ஆத்மார்த்த பூசையே இக்கோயில் நடைபெற்றுள்ளது. இதற்கமைய அந்தணர் மரபு சாராத சைவ மரபிலே வந்த ஒருவரே, இவ்வாலயத்திலே ஒருவேளை பூசையை நிகழ்த்தி வந்துள்ளார். மடாலயமாக இவ்வாலயம் இருந்த காலத்திலே பாதசி முதலிக்குட்டி சண்முகம் என்பவர், இவ்வாலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்துள்ளார். பாதசி முதலிக்குட்டி சண்முகம் அவர்கள் நம்பிக்கைப் பெறுப்பாளராக இருந்த காலத்தில், மடாலயமாக விளங்கிய கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், மிகவும் பிரபல்யம் பெற்ற ஆலயமாக விளங்கியுள்ளது. இக்காலத்தில் இப்பெரியார் பல்வேறு திருப்பணிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்தவராக விளங்கியுள்ளார். இக்காலத்திலிருந்தே சைவசித்தாந்த மரபைப் பேணிய பெருமையுடையதாக இவ்வாலயம் விளங்கியுள்ளது. கொக்குவில் த. குமாரசாமிப்புலவர் அவர்களுடைய முன்னோராகிய சட்டம்பி முருகேசு என்பவர், இவ்வாலயத்திலே புராணபடனம் நடைபெறுவதற்கு ஏடு எழுதிக்கொடுத்துள்ளார்.

தொன்மைச் சிறப்புடைய இவ்வாலயம் மடாலய நிலையிலிருந்து 1817 ஆம் ஆண்டு, ஆகம முறைப்படி கற்கோவிலாகக் கட்டப்பட்டு, கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்காலத்திலிருந்து ஆதிமூலத்திலே வள்ளி தேவசேனா சமேத சிவசுப்ரமணியப்பெருமானது கருங்கல் சிலா மூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. நீர்வேலி சிவஸ்ரீ நீலகண்டக் குருக்கள் தலைமையிலேயே கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1817 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வாலயம் குமார தந்திர முறைப்படி கட்டப்பட்ட சிறப்புடையது. அக்காலத்திலே கோயிலில் நித்திய நைமித்திய பூசைகளை பிரம்மஸ்ரீ சின்னப்பா ஐயர் என்பவர் செய்து வந்தார். கோயில் திருப்பணிவேலைகளை இருபத்திநான்குபேர் கொண்ட திருப்பணிச்சபை அமைத்து, நிதிசேகரித்து இவ்வாலய கும்பாபிஷேகத்தை சிறப்பாக நிறைவேற்றி வைத்தமை குறிப்பிடத்தக்கது. அலங்கார மூர்த்தியாக முத்துக்குமாரசுவாமி ஐம்பொன்னால் வார்க்கப்பெற்று அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மீண்டும் 1890 ஆம் ஆண்டு ஆலயத்தை திருத்தியும், புதுப்பித்தும் திருப்பணிவேலைகள் நடைபெற்று, சிவஸ்ரீ நீலகண்டக் குருக்களால் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

- வளரும்...

# வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள் பலர் நேற்றைய தினம் ஒரே நாளில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

## வடக்கு மாகாணத்தில் பல செயலர்கள் தீடீர் மாற்றம்

இலங்கையின் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் பலர் சனிக்கிழமை (26) அன்று திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் பதில் செயலாளராக தற்போதைய மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் திருவாகரன் நியமிக்கக்பட்டுள்ளார்.

இதேபோன்று தற்போதைய ஆளுநர் செயலக செயலாளர் பொ. வாகீசன் மகளிர விவகார அமைச்சின் செயலாளராகவும், தற்போதைய உள்ளூராடசி அமைச்சன. சிரேஸ்ட உதவிச் செயலாளர் நந்தகோபன் ஆளுநர் செயலக பதில் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்ற மாற்றங்களில் தற்போதைய மகளிர் அமைச்சின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளதோடு தற்போதைய பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாமாக - பணியாற்றும் குகநாதன் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளராகவும் பதில் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகமாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மக்கள் விரோத செயற்பாட்டிற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்கங்கள் போராட்டம்

**- நடராசா லோகதயாளன்**

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்காக EPF/ETF நிதியங்களை பயன்படுத்த முனைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொழிற்சங்கங்கள் இணைந்து போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையில் 2023 ஜுலை 01ஆம் திகதி நிறைவேற்றபட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி - EPF மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி - ETF நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் EPF/ETF நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் EPF/ETF கணக்குகளின் மீது சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினதும் (EPF/ETF அங்கத்தவர்களினதும்) சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை (50%) எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் EPF/ETF அங்கத்தவர்களுக்கு நிதிரீதியான உடனடிப்பாதிப்பும் நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 28.08.2023 திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் அடையாள போராட்டங்கள் பல இடங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் இங்குள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் மதியம் உணவு இடைவேளையின்போது - பகல் 12 மணி முதல் 1 மணி வரை அடையாள போராட்டம் ஒன்றினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன.

எனவே அதற்கு அனைவரது ஆதரவினையும் வேண்டி நிற்பதோடு, மேற்படி EPF/ETF மற்றும் ஓய்வூதிய நிதிக்கையாளல் மூலம் பாதிக்கப்படவிருக்கும் அரச, அரச மருவிய மற்றும் தனியார் துறை சார்ந்த அனைத்து தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், மக்களையும் இவ் அடையாளப் போராட்டத்தில் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை பின்வரும் தொழிற்சங்கள் இணைந்து விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. - பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ் பல்கலைக்கழகம்
2. - வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்
3. - அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்
4. - பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம்
5. - வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்
6. - வடமாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம்
7. - ஸ்ரீ லங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம்
8. - வடமாகாண அரச சாரதிகள் சங்கம்
9. - வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம்

# குறுந்தூரில் மேலும் காணிகள் விடுவிப்பு?

**- நடராசா லோகதயாளன்**

முல்லைத்தீவு குறுந்தூர், தண்ணிமுறிப்பு, நித்தகைகுளம் பகுதிக்கு நடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலக மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அவசர பயணம் ஒன்றை திங்கள்கிழமை (28) மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக சர்ச்சைக்குரிய இடமாகவுள்ள குறுந்தூர்மலை, தண்திமுறிப்பு, நித்தகைகுளம் பகுதிகளில் இருந்து விரட்டப்பட்ட மக்களின் நிலங்கள் விடுவிப்புத் தொடர்பில் சகல திணைக்கள அதிகாரிகளும் இணைந்து பார்வையிட்டனர்.

மாவட்டச் செயலகத்தில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற கூட்ட அறிவித்தலின் பெயரில் இந்த கூட்டுப் பயண முயற்சி இடம்பெற்றது.

இதன்போது பொலிசார், நாடாளுமன்ற உறுப்பினர்களான இ. சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான் ஆகியோருடன் மாவட்ட அரச அதிபரான மகேஸ்வரன், மேலதிக அரச அதிபர்களான கணகேஸ்வரன், குணபாலன், பிரதேச செயலாளர், தொல்லியல், வனவளம், வன ஜீவராசிகள் மற்றும் நில அளவை திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலரும் இணைந்து நிலைமையை நேரில் பார்வையிட்டனர்.

இவரகள் பார்வையிட்டதன் அடிப்படையில் உடனடியாக ஓர் விசேட அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில விடுவிக்ககூடிய நிலங்களை இனங்காணுவதே இந்த கூட்டு பயணத்தின் நோக்கமாகும்.

அதேவேளை, 1933ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியில் 78 ஏக்கர் மட்டுமே தொல்லியல்ப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் உள்ள நிலையில் தறபோது அதனை அண்டிய பகுதியில் மேலும் 300 ஏக்கரை தொல்லியல் திணைக்களம் அபகரிப்பதே சரச்சையின் அடிங்படையாக காணப்பட்ட சூழலில், இப்பயணம் இடம்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில இப்பகுதியில் உள்ள மக்களின் நிலத்தில எவ்வளவு நிலம் விடுவிக்க முடியும் என கண்டுகொள்ளப்படவுள்ளது.

நடைபெற்ற இந்த கள ஆய்வின் போது, பிரித்தானிய காலனித்துவ ஆட்சி காலத்திலேயே இந்தப்பகுதியில் குறிப்பிட்ட அளவு தொல்லியல் பிரதேசமாக குறிக்கப்பட்டுள்ளது அரச தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், 78 ஏக்கர் மட்டுமே குறிக்கப்பட்டது எப்படி 300 ஏக்கருக்கும் அதிகமாக விரிவடைந்தது என்று தமிழ் தரப்பில் வினவப்பட்டது.

இது தொடர்பிலான பதில் ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ள பதிலில் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த அறிக்கைக்கு பிறகு மேலும் சில ஏக்கர் காணி விடுவிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

# சர்வதேச காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலும் பேரணி, நீதி கோரி ஆர்ப்பாட்டம்

**- நடராசா லோகதயாளன்**



இலங்கையில் போர் முடிந்து 14 ஆண்டுகள் ஆனாலும், போரின் போது காணாமல் போனவர்கள் அல்லது படையினரிடம் சரணடைந்தவர்கள் அல்லது கையளிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன ஆனது என்பதற்கான பதில் இன்றுவரை இல்லை.

அவர்களுக்கான நீதி கோரியும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் தாய்மார் முன்னெடுத்துள்ள போரட்டாம் 2383 நாட்களாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் புதன்கிழமை (30) அன்று சர்வதேச காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்ட பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதி ஐ நாவால் சர்வதேச காணாமல் போனோர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதை முன்னிட்டு வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணியானது யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கியது. உறவுகளை தேடிய இந்த கவன ஈர்ப்பு போராட்டம் யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயம்வரை பேரணியாகச் சென்று நிறைவுபெற்றது.

இதே போன்ற பேரணிகள் தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களிப்பில் இடம்பெற்ற பேரணியில் பல சிங்கள மனித உரிமை செயற்பாட்டாளர்களும், காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்நலிகொடவின் பாரியார் சந்தியா எக்நலிகொடவும் தமிழ் மக்களுடன் இணைந்து பங்கேற்றனர்.



மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து பேரணியாக சென்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் காந்திபூங்காவில் உள்ள கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத்தூபிக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கில் நடைபெற்ற போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள் தமது காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் - ஓ எம் பி யும் வேண்டாம், உண்மையை கண்டறியும் குழுவும் வேண்டாம், சர்வதேச விசாரணை பொறிமுறையே வேண்டும் என்று கோ'மிட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பில் அடையாளம் தெரியாத நபர்களால் இந்த போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. காணாமல் போன உறவுகளை தேடுபவர்கள் வெளிநாடுகளிலிருந்து டொலர்களைப் பெற்றுக்கொண்டு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்ற வகையில் சித்தரிக்கும்

# Sri Lanka Unable to Answer a Simple Question by Crying Mothers for More Than Six Years

- by Siva Parameswaran



"Impunity compounds the suffering and anguish. Under international human rights law, families and societies have a right to know the truth about what happened. I call on Member States to fulfil this responsibility".
- Antonio Guterres, Secretary General UN

This culture of impunity has led to thousands of persons becoming victims of enforced disappearanc e in Sri Lanka. And, elderly Tamil mothers have been peacefully protesting for over 2380 days just seeking an answer to a simple question.

"Where are our relatives"?

Age has withered their physical strength but not their mental courage as the protest led by women- mostly elders continue seeking to know what happened to their loved ones who either went missing during the brutal civil war or handed over or surrendered to the armed forces during the final phase or immediately after the war was declared as over by the state security forces.

Thousands of Tamils went missing during and after the war and the Vadduvakal bridge stands a silent testimony to those who walked on it only not to be seen again for years now.

Many of the Ammas are frail and weak but continue to walk daily seeking that elusive answer.

By an act of Parliament, Sri Lanka created the Office on Missing Persons (OMP) in August 2016 when Maithripala Sirisena was the president. However, even after seven years, the OMP is yet to find even a single person, while more than 20,000 complaints have been filed with them.

The OMP boasts its establishment marks a significant milestone in the efforts of the Government of Sri Lanka to address the issues of the missing and disappeared. "Successive governments set out measures to investigate disappearances, including through appointing commissions of inquiry or ad-hoc mechanisms with limited mandates. While making critical contributions in the way of recommendations, these previous mechanisms were unable to provide answers to the many thousands of families searching for their loved ones", their introduction on the official website says.

As a permanent and independent state institution, the OMP is responsible for clarifying the fate and whereabouts of persons who went missing or disappeared in connection with the conflict, political unrest, or civil disturbances, or as a result of enforced disappearances as their official mandate.

This is exactly the same the Association for Relatives of Enforced Disappearances (AERD) is asking for relentlessly, with no honest and proper forthcoming. The AERD too has made it clear "they don't have faith in the OMP".

The mass rally organized by the AERD on the international day of the enforced disappearances (August 30) while rejecting the OMP has demanded an 'international justice mechanism' to find their missing and disappeared ones and has appealed to the UN Human Rights Commissioner Volker Turk in this regard.

More than 180 mothers and relatives who were part of the AERD over the past 7 years have lost their lives in August alone without knowing what happened to their children, a statement from them on Wednesday (30) said.

AERD says close to 100,000 are missing or disappeared in Sri Lanka. However, the details from the OMP put the total number of registrations done with it as 21,374 which according to them has duplicate entries too which amounts to 2,664. Details of 3,742 missing persons from the tri-services have also been recorded with the OMP according to them.

Breaking down the details, it could be seen if the duplicate entries and tri-service numbers are deducted the number of registrations about missing Tamils stands at 14,988.

The OMP has come under severe criticism that it is not even able to solve one case of missing tri-service personnel. If such is the case, how will they solve cases of missing Tamils which are over five times the number question elderly mothers.

Elderly mothers who brave the sun and rain in continuing their peaceful protest demanding an answer about their kith and kin have also come under intimidation from the state agencies a detailed statement from the AERD states. "Under the successive Sinhala majoritarian governments, the mental torture and intimidation of mothers and women activists have intensified. Military intelligence officials came to our house and severely warned us not to participate in the protests. This is a critical dilemma for many mothers- whether to continue searching for the missing son/ daughter or ensure the safety of the remaining children by not pushing them into danger or totally keeping away from all activities. We undergo an enormous amount of racial discrimination at the hands of the Sri Lankan officials. As they know we participate in the protests we are unable to get any benefit of the government schemes and loans from the banks."

The protesting mothers of the AERD also share the anguish even relatives have started shunning them and slowly they are losing their family ties.

"Due to constant nagging and inquiries by the intelligence and other state agencies even our relatives who used to comfort us earlier are keeping away from us now. They are afraid to get in touch with us".

However, persons like Sandhya Eknaligoda- wife of missing cartoonist and journalist cum political analyst Prageeth Eknaligoda- have expressed their solidarity with the Tamil mothers who seek justice for their missing family members. In an act of solidarity, Sandhya participated in the march organized by the AERD in Batticaloa.

Prageeth Eknaligoda went missing after the war on 24 January 2010 a couple of days before the Presidential election, when the country was governed by Mahinda Rajapaksa. He was said to be investigating the alleged use of chemical weapons by the Sri Lankan army against civilians while fighting the LTTE.

The UN says enforced disappearance has become a global problem and has been frequently used as a strategy to spread terror within the society.

"The feeling of insecurity generated by this practice is not limited to the close relatives of the disappeared but also affects their communities and society as a whole. Once largely the product of military dictatorships, enforced disappearances can nowadays be perpetrated in complex situations of internal conflict, especially as means of political repression of opponents".

UN in their latest report on the International Day of the Victims of Enforced Disappearance-30th August expressed concern about the safety and well-being of the families of those who have gone missing.

"The families and friends of the victims, experience slow mental anguish, not knowing whether the victim is still alive and, if so, where he or she is being held, under what conditions, and in what state of health. They alternate between hope and despair, wondering and waiting, sometimes for years, for news that may never come. In addition, they are well aware that they, too, are threatened, that they may suffer the same fate themselves, and that searching for the truth may expose them to even greater danger".

In most cases, the victim of enforced disappearance or gone missing happens to be the family's main breadwinner. Their emotional upheaval is thus exacerbated by material deprivation, made more acute by the costs incurred should they decide to undertake a search.

"The serious economic hardships which usually accompany a disappearance are most often borne by women, and it is women who are most often at the forefront of the struggle to resolve the disappearance of family members. In this capacity, they may suffer intimidation, persecution, and reprisals. When women are themselves direct victims of disappearance, they become particularly vulnerable to sexual and other forms of violence".

And, that is exactly what is happening in Sri Lanka, although the elderly mothers, wives, and sisters are in no mood to relent until their only question "Where are our relatives"? is being answered.

# CPJ Calls for Investigation into Harassment of Journalists in Sri Lanka

- by Siva Parameswaran

Sri Lanka has again come in for condemnation for its intimidation of the press and stifling free media.

New York-headquartered Committee to Project Journalists (CPJ) has expressed its deep anguish over the treatment meted out to three Tamil journalists recently in Batticaloa district where they have gone along with a group of inter-religious leaders and civil society members to study the issues faced by cattle farmers in the Mylathamadu area.

"Sri Lankan authorities must investigate the recent harassment of freelance Tamil journalists Selvakumar Nilanthan, Valasingham Krishnakumar, and Antony Christopher Christiraj and hold the perpetrators responsible" CPJ said in a statement released on 30th August.

The three journalists along with the inter - religiousteam were surrounded by a Sinhala mob led by a Buddhist monk. They were held for over three hours and their recordings were forcefully erased by the mob and made to sign a statement the details of their coverage will not be published.

The incident happened around 12:30 PM on the 22nd of August when the Buddhist monk-led mob surrounded vehicles holding the three journalists after they reported on alleged state-backed encroachments on Tamil farmers' land in the Mylathamadu area.

"The men—some armed with knives and swords—moved the three journalists and around 17 others, including farmers and members of an accompanying interfaith group, to an open area and held them in the presence of officers from a local government development authority".

CPJ statement also notes although the interfaith group leaders immediately called the police, officers arrived five hours later, and that too only after Tamil MPs raised the issue in Parliament. They have also slammed the police for not investigating the issue even after eight days.

"As of August 30, police have not opened an investigation into the incident, the three journalists told CPJ. CPJ's messages to the officer-in-charge of the Karadiyanaru Police Station, which oversees Mylathamadu, and Sri Lankan police spokesperson Nihal Thalduwa did not receive any replies".

Carlos Martinez de la Serna, CPJ's program director has called upon the Sri Lankan authorities to thoroughly and impartially investigate the harassment of the three Tamil journalists and work to end the pattern of impunity relating to the attack on Tamil reporters.

"Tamil journalists have a right to report on issues affecting their community without interference or fear of reprisal."

Nilanthan, Secretary of the Batticaloa District Tamil Journalists Association was wearing a press jacket at the time of the incident and reporting for a UK-based broadcaster-IBC Tamil.

While being held he was forced to delete photos and videos of farmers' testimony and the mob setting fire to the land CPJ said further. He was also forced to sign two letters in Sinhala and Tamil that he would not report on the incident.

The other two Krishnakumar and Christiraj both freelancers were not wearing press jackets and hid their cameras and did not let know the Buddhist monk-led mob they were reporters, they told CPJ.

Krishnakumar is also the head of the Batticaloa District Tamil Journalists Association. The mob turned hostile once they were aware that they too were reporters while the monk asked the police official to order all three journalists to delete all their recordings.

A Hindu priest was assaulted by the mob the journalists told CPJ though they were not physically harmed.

Selvakumar says media oppression is continuing unabated and he is so scared to venture out for coverage.

"I am terribly traumatized. I was told straight away if the videos or photos taken by me is released then I would be killed. I was shocked when the Sinhala thugs held the Hindu priest by his tuft. It was very humiliating and it was a direct assault on his culture and traditions. This has affected me mentally very much. When I was told the consequences would be serious, then it's clearly something is very seriously wrong there".

Locals say the Buddhist monk and the mob who attacked the team are from the nearby Amparai district and such threats are happening regularly.

Cattle farmers say the economy of Batticaloa district depends on the dairy industry. Seenitambi Thiyagaraja, President of the Mylathamadu-Mathavanai Cattle Farmers Association says close to 2000 cattle farmers live in the area and they are dependent on the 100-acre land granted by the government for grazing their cattle.

"The economy of the district depends on cattle farming. Sinhala people hold on to 10-15 acres of land, starve the cattle and threaten us. Mahaweli Development Authority remains silent as the grasslands and the forest areas where the cattle graze are set on fire. "The economy of the district depends on cattle farming. Sinhala people hold on to 10-15 acres of land and starve the cattle and threaten us. Mahaweli Development Authority remains silent as the grasslands and the forest areas where the cattle graze are set on fire. The Wildlife authorities say they won't permit us to have a piece of iron and threaten to arrest us if so. But the Sinhala people are allowed to come with weapons and attack us and none are arrested. Many courts including the Batticaloa and Valaichenai have permitted cattle rearing here. So where do we go and what do we do if we can't take our cattle for grazing in the lands allotted by the government?".

Tamil National People's Front and the Tamil National Alliance have vowed to take the issue of the multi-religious team held captive and intimidated including death threats would be raised at all platforms including the Parliament.

ARABI PRODUCTIONS
RAGEEF SUBRAMANIAM PRESENTS
FINDER

ஆரபி படைப்பகம் ஆதரவில்

Bhairavi MUSIC ACADEMY

தமிழ்நாடு "இசைக் கவி" ரமணன் வழங்கும்
இசையும் உரையும் கலந்த

# 'பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி'



சொற்பொழிவு

இடம்:

கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்
733 Birchmount Rd., Scarborough, ON M1K 1R5

காலம்:

09-09-2023 சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு



கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான பைரவி குழுவினர் வழங்கும்
பின்னணி இசையில் பாடக பாடகிகள் இனிதான்
பாரதியார் பாடல்களை மேடையில் வழங்குவார்கள்.
அதனைத் தொடர்ந்து இசைக்கவி ரமணன் அவர்களின் உரை இடம்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு:

**(647) 762-9512** அல்லது **(647) 891-7725**

ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

TICKETS
VIP
$15



ரொறன்ரோ

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி



4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான

# தமிழ், சமய, பண்ணிசை

## வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

**புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம்.**



வகுப்புக்கள் நடைபெறும் நேரம்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை



**Sri Varasiththti Vinaayagar Hindu College**
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டமும், புதிய நிருவாகத் தெரிவும் 30-08-2023 அன்று, கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் தலைமையில், கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசக் கிளைகளினதும் நிருவாகிகள், மாவட்ட மாதர் முன்னணி மற்றும் வாலிபர் முன்னணி நிருவாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தின் போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களும், செயலாளராக திரு. வீரவாகு விஜயகுமாரும், பொருளாளராக செல்வி அன்பழகி செல்வரட்ணம் அவர்களும், துணைத்தலைவராக வடக்கு மாகாண சபையின் மேனாள் கல்வி அமைச்சர் திரு. தம்பிராஜா குருகுலராஜா அவர்களும், துணைச் செயலாளராக கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் திரு. அருணாசலம் வேழமாலிகிதன் அவர்களும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி. கலைவாணி சிறீகாந்தன், திருமதி. குணலக்சுமி குலவீரசிங்கம், திருமதி. சிவயோகலட்சுமி சந்திரபோஸ், செல்வி. சுபிதா வேலாயுதபிள்ளை, திருமதி. உதயராணி சத்தியசீலன், திரு. பரமலிங்கம் பாஸ்கரன், திரு. சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், திரு. கறுப்பையா ஜெயக்குமார், திரு. சின்னையா தவபாலன், திரு. சுப்பிரமணியம் சுரேன் ஆகிய பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவுக் கூட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிருவாகச் செயலாளர் திரு. சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் நெறிப்படுத்தி நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மாதகல், உரும்பிராய் பகுதியில் போதைப் பொருட்கள் கடத்தல் தொடர்பாக ஐவர் கைது

- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்




இலங்கையின் வடக்கே மாதகல், உரும்பிராய் பகுதிகளில போதைப் பொருள் கடத்தலில ஈடுபட முயன்றதான சந்தேகத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட ஐவரில் மூவர் சிங்களவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் புலனாய்வுப் பிரிவினர் யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து யாழில் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடிய வாகனம் ஒன்றை சோதனை செய்தனர். அந்த வாகனம் போதைப்பொருள் கடத்தலுக்காக கவனமாக ஏற்பாடு செய்யப்பட்ட ரகசிய அறை இருந்ததால் வாகனத்தில் இருந்த மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், மூவரில் இருவர் தனமல்வில பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

அவர்கள் கேரள கஞ்சா வாங்குவதற்காக மாதகல் பகுதியில் வசிக்கும் ஒருவருக்கு இரண்டு கோடியே முப்பத்தொரு லட்சம் ரூபாயும், உரும்பிராயில் வசிப்பவருக்கு 55 லட்சம் ரூபாவும் வழங்கியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து 3 மணிநேர விசாரணை மூலம் கிடைத்த தகவலின்படி உரும்பிராய் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டில் இருந்து 55 லட்சம் ரூபா பணமும் மறைத்து வைக்கப்பட்டிருந்த 95 லட்சம் ரூபாவும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையை அடுத்து மாதகல் பகுதியில் நபர் ஒருவரின் வீட்டில் இந்த கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மேலும் இருவர் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்த விசாரணைகளின் அடிப்படையில் இதுவரை மொத்தம் ஐந்து பேர் கைது செய்யப்பட்டதுடன் கடத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனத்துடன் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பணம், மோட்டார் சைக்கிள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இப்படியாக போதைப் பொருட்களும், அது தொடர்பிலானவர்களும் கைது செய்யப்படுவது, யாழ்ப்பாண மக்களிடையே பெரும் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்திய இலங்கை கடற்பரப்பு போதைப் பொருட்கள் கடத்தலில் முக்கிய மையமாக மாறி வருகிறது என்பதை பன்னாட்டு அமைப்புகள் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

அந்தப் பகுதியில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்படுகிறது என்று கூறப்படும் போதைப் பொருட்கள் தொடர்ச்சியாக பிடிபடுகின்றன. இதேவேளை வடக்கு மாகாண இளைஞர்களும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவது அதிகரித்து வருவதையும் காண கூடியதாகவும் உள்ளது.






# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு செப்டம்பர் 5 ஆம் திகதி தொடங்கும் என்று நீதிமன்றம் கட்டளை

- நடராசா லோகதயாளன்



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின் போது மேலும் 4 சட்ட வைத்திய அதிகாரிகளை இணைத்துக்கொள்ள வேண்டும் என பொலிசார் அறிக்கை சமர்ப்பித்தபோதும் தேவை ஏற்பட்டால் இணைக்கலாம் என்ற இணக்கத்தின் அடப்படையில் செப்டம்பர் 5 ஆம் திகதி புதைகுழி அகழ்வு இடம்பெறும் என நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை புதன்கிழமை - ஆகஸ்ட் 31 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ். பிரணவன், சட்டத்தரணிகளான எம்.ஏ. சுமந்திரன், வி.கே. நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, வி.எஸ். தனஞ்சயன், காணாமல் போன அலுவலகத்தினுடைய சட்டத்தரணிகளான எஸ்.ஷயந்தினி, ஜெ.தர்பரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா. சண்முகதாசன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ் மா அதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் பலரும் முன்னிலையாகியிருந்தனர்.

கடந்த வழக்கு விசாரணையில் இந்த அகழ்வில் தொடர்புடையவர்கள் மற்றும் அனைத்து திணைக்களங்களும் புதன்கிழமை விசாரணையின் போது நீதிமன்றில் பிரசன்னமாக வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்புக்களுடன் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மேலும் நான்கு சட்ட வைத்திய அதகாரிகளை இனைக்குமாறு பொலிசார் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்ட சமயம் இது யாரின் கோரிக்கை என நீதவான் கோரிய சமயம் தமது அறிக்கை எனப் பொலிசார் தெரிவித்தனர். அதாவது கொழும்பு, குருநாகல் வைத்தியசாலைகளின் மூன்று சட்ட வைத்திய அதகாரிகளும் WFZ பல்கலைக்கழக பேராசிரியர் என நால்வரை இணைக்குமாறே பொலசார் நீண்ட நேரம் கோரிக்கை விடுத்தனர்.

இருந்தபோதும் மாவட்ட நீதிபதி ஏற்கனவே உத்தரவு வழங்கி விட்டார். மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி தலைமையில் மேலும் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர் இதனால் தற்போது மேலதிக அதிகாரிகள் தேவை கிடையாது. அதிக பணி அல்லது மேலதிக தேவை என வைத்திய அதிகாரிகள் கோரிக்கை விடுத்தால் இணைப்பது தொடர்பில் ஆராயலாம் என சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் செய்த சமர்ப்பணத்தை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏற்பதாக இணைக்கம் தெரிவித்தார்.

இதன்போது அகழ்வை ஆரம்பிக்கும் பணிக்காண பணத்தை விடுவிக்க அனைத்தும் தயாராகவுள்ளதாக மாவட்டச் செயலக கணக்காளர் தெரிவித்தார். அந்த இடத்தில் கொட்டகை அமைக்க ஒரு வாரம் தேவை என தொழில் நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தபோதும் சட்ட வைத்திய அதிகாரி 3 தினங்கள் போதும் எனக் கூறியதற்கு அமைய 5 ஆம் திகதி அகழப்படும் அரம்பிக்கப்படும் எனவும் ஊடகங்களிற்கு அனைவரும் கருத்து தெரிவிக்ககூடாது என சட்ட வைத்திய அதிகாரியால் கோரப்பட்டது. அதற்கு உத்தியோகபூர்வமாக கருத்து தெரிவிக்கும் உரிமை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு வழங்கும் அதேநேரம் வெளியில் கருத்துரைப்பதனை தடுக்க முடியாது எனவும் கூறப்பட்டு அகழ்வுப் பணிக்காக 5ஆம் திகதி நிர்ணயம் செய்யப்பட்டது.

கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு நீதிமன்ற உத்தரவையடுத்து செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி-செவ்வாய்க்கிழமை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டாலும், பருவ மழை அதற்கு ஒரு தடையாக இருக்குமோ என்கிற கவலைகளும் எழுந்துள்ளன.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 16)

*(Continued from last week)*

The appellant's action, if it lies at all, thus raises issues of the highest constitutional importance, all of which were argued before the District Judge. There is however a preliminary issue, viz. whether a civil servant has any right of action against the Crown for salary due in respect of services which he has rendered. If, as the Attorney-General contends, there is no such right of action, the broader constitutional issues as to the validity of the Official Language Act and as to the right of the Ceylon Government to impose a language test upon its civil servants as a condition of entitlement to higher pay, cannot be raised by the plaintiff in the present action. It fails in limine (at beginning or on the threshold).

This preliminary issue was decided in the plaintiff's favour by the District Judge. He accordingly went on to deal with the other issues which he also decided in favour of the plaintiff. On appeal to the Supreme Court (Fernando C. J. and Silva J.) the preliminary issue was argued first. On this issue that Court reversed the decision of the District Judge. This made it unnecessary for the two judges who constituted the Supreme Court to enter upon the consideration of the remaining issues which had been dealt with in the judgment of the District Judge. They accordingly heard no argument and expressed no views on them. The learned Chief Justice expressly stated that had it been necessary to decide these other issues he would have exercised his discretion to convene a full court of five judges to adjudicate upon them in view of their outstanding constitutional importance.

Upon this appeal, their Lordships have also confined their consideration to the preliminary issue whether or not a civil servant has any right of action in Ceylon against the Crown for salary due in respect of services which he has rendered. They too have heard no argument and express no view upon any of the other issues raised in the action and dealt with in the judgment of the District Judge. They would not think it proper to do so without the assistance of the considered judgment of the Supreme Court.

The preliminary issue is, however, one of importance in its own right. It falls to be decided by the law of Ceylon. English law is relevant only to the extent that it has been adopted as part of that law.

In the case of most former British colonies which were acquired by conquest or cession, the English common law is incorporated as part of the domestic law of the now independent State because it was imposed upon the colony by Order in Council, Proclamation, or otherwise under the prerogative powers of the Crown. But in the case of Ceylon, upon the acquisition of the maritime areas which had previously been settled by the Dutch, the Crown did not impose English law.

By Proclamation of 23rd September 1799, it was proclaimed-

" 1. WHEREAS it is His Majesty's gracious command that, for the present and during His Majesty's will and pleasure, the temporary administration of justice and police in the settlements of the island of Ceylon, now in His Majesty's dominion, and in the territories and dependencies thereof, should, as nearly as circumstances will permit, be exercised by us in conformity to the laws and institutions that subsisted under the ancient government of the United Provinces, subject to such deviations in consequence of sudden and unforeseen emergencies, or to such expedients and useful alterations, as may be rendered a departure there from either absolutely necessary and unavoidable or evidently beneficial and desirable.

2. We therefore, in obedience to His Majesty's commands, do hereby publish and declare, that the administration of justice and police in the said settlements and territories in the island of Ceylon, with their dependencies, shall be henceforth and during His Majesty's pleasure exercised by all courts of judicature, civil and criminal, magistrates and ministerial officers, according to the laws and institutions that subsisted under the ancient government of the United Provinces, subject to such deviations and alterations by any of the respective powers and authorities herein-before mentioned, and to such other deviations and alterations as we shall by these presents, or by any future Proclamation, and in pursuance of the authorities confided to us, deem it proper and beneficial for the purposes of justices to ordain and publish, or which shall or may hereafter be by lawful authority ordained and published. "

In 1835 this was extended to the whole of the island.

The first problem raised by this Proclamation is whether the Supreme Court were right in thinking that its subject matter is restricted to private law applicable to transactions between subject and subject so as to exclude the whole of the former Roman-Dutch public law applicable to transactions between subject and sovereign. The words of the Proclamation must be understood in the meaning attaching to them in the closing years of the eighteenth century and in the light of the historical circumstances in which the Proclamation was made. The East India Company which captured Trincomalee and Colombo from the Dutch in 1795 abolished the existing system of administration through local officials. This led to a revolt in 1797. Governor North was sent out from England and the Proclamation marks his restoration of the old system of civil administration. Furthermore, as the Proclamation itself indicates, the British occupation was expected to be temporary only. It was not until the Peace of Amiens in 1802 that Ceylon became a Crown Colony. Read in this historical context, the actual wording of the Proclamation with its references to " police " (which at that date was commonly used in the generalised sense of " civil administration ") to " institutions " and to " ministerial officers ", is in their Lordships' view more apt to indicate an intention to restore in the recently acquired territory the previously existing system of law as respects the civil administration of Ceylon, rather than to exclude this branch of public law from its ambit.

But even if the relationship between the Government of the United Provinces and its civil servants in Ceylon had formerly possessed the legal characteristics of a contract of service and they had been entitled to sue that government for arrears of salary, it does not follow that a corresponding contractual relationship and right of suit between the British Crown and its civil servants in Ceylon was created by the Proclamation. (To be continued)




125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N.Pராஜசேகர் தற்போது கனடா வில் வசிக்கிறார்.

மற்ற நாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



Contact - (416) 904-6278

21rajbhavan@gmail.com

16 Treeline Court Markham ONT

L3S 3T8 CANADA

1 வது காண்டம் : அண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய். தந்தை. மனைவி. சுமங்கைகள். சகோதர. சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்

2 வது காண்டம் : பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது

3 வது காண்டம் : சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது

4 வது காண்டம் : தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது

5 வது காண்டம் : சுமங்கைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது

6 வது காண்டம் : வாழ்க்கையில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது

7 வது காண்டம் : திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது

8 வது காண்டம் : ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது

9 வது காண்டம் : தகப்பனார். செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது

10 வது காண்டம் : தொழில். வியாபாரம். உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது

11 வது காண்டம் : லாபம் எங்கெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது

12 வது காண்டம் : செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது

பரிகார காண்டங்கள்

13 வது சாந்தி காண்டம் : முற்பிறவியில் பிறந்த இடம். செய்த நன்மை. தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது

14 வது தீட்சை காண்டம் : மந்திரம். எந்த மந்திரக் காயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது

15 வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்தியங்களையும் விபரமாகக் கூறுவது

இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்

# குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகள் உதாசீனம்– முல்லைநீதிமன்று கட்டளை

- நடராசா லோகதயாளன்




**நீ**திமன்றம் வழங்கிய கட்டளையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இருந்தும் குருந்தூர்மலை தொடர்பில் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரி-வரப் பின்பற்றாது உதாசீனம் செய்திருப்பதாக முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகளையை மீறி தொடர்ந்தும் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் கட்டளையே ஆகஸ்ட் (31) முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது:

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி குருந்தூர்மலையில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு கலசம் ஒன்றை நிறுவுவதற்கும், "கபோக்" கல்லினாலான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.





இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்ள குருந்தூர்மலைக்குச் சென்றபோது அங்கு பௌத்தக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தொடர்பில் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் குருந்தூர்மலை தொடர்பான வழக்கிலக்கம் AR/673/18 இல் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து, குருந்தூர்மலையில் எந்தத் தரப்புக்களும் கட்டுமானங்கள் எவற்றினையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளை பிறப்பித்த பிற்பாடும் அங்கு தொடர்ந்தும் பௌத்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

அத்தோடு அவ்வாறு குருந்தூர் மலையில் பௌத்தகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

அதற்கமைய இந்த வழக்கினை ஆராய்ந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி அன்று, குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்தக் கட்டுமானங்களை அகற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலைமாதம் 19ஆம் திகதி, குறித்த குருந்தூர்மலை தொடர்பான வழக்கின் மீது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்த சட்டத்தரணிகளால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு குறித்த வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த கட்டுமானங்களை அகற்ற முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருப்பதானது, இனங்களுக்கிடையில் சமாதானக்குலைவினை ஏற்படுத்துமென சட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்த சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தனர்.

சட்டமாஅதிபர் திணைக்கள சட்டத்தரணிகளின் கருத்துக்களைச் செவிமடுத்த நீதவான், அன்றைய தினமே உடனடியாக குருந்தூர்மலைக்குச் சென்று கள விஜயமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

அதனடிப்படையில் குருந்தூர்மலைக்கு களவிஜம் மேற்கொண்ட நீதவான் அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆய்வுசெய்து, குறிப்புக்களை எடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் கட்டளை வழங்கியநீதிபதி, கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதெனவும் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதியன்று கட்டளை பிறப்பித்திருந்தார்.

எனினும், நீதிமன்றம் இவ்வாறு கட்டளை வழங்கிய பிற்பாடும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர் மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறு நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் களவிஜயத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023 அன்றைய தினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து 02.03.2023 அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு மீண்டும் கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் அவ்வாறு குருந்தூர்மலையில் மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு கடந்த ஜூலை மாதம் (04) ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மீண்டும் குருந்தூர்மலைக்கு களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த களவிஜயத்தின்போது குருந்தூர்மலையில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்ற மேம்படுத்தல் வேலைகள் தொடர்பில் நீதிபதியால் ஆராயப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பொலிசார் மற்றும், தொல்லியல் திணைக்களம் இது தொடர்பிலான பதில் அறிக்கைகளை நீதிமன்றின் முன் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப் பட்டதையடுத்து, முல்லைத்தீவு பொலீசார் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்புக்கள் நீதிமன்றில் முன்னிலையாகி இதுதொடர்பிலான தமது விளங்கங்களை நீதிமன்றிற்கு வழங்கியிருந்தனர்.

இதையடுத்து குறித்த வழக்குடன் தொடர்புடைய அனைத்து தரப்புக்களினதும் விளங்கங்கள் பெற்றுக்கொள்ளப் பட்டதையடுத்து நீதிமன்றம் இந்த வழக்கில் கட்டளை வழங்குவதற்காக கடந்த ஆகஸ்ட் (31)ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்திருந்தது.

அதன்படி கட்டளையை வழங்குவதற்காக ஆகஸ்ட் (31) ஆம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்தவகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 19ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் குருந்தூர்மலைக்கு மேற்கொண்ட களவிஜயம் மற்றும், கடந்த ஜூலை மாதம் 04ஆம் திகதி நீதவானால் மேற்கொள்ளப்பட்ட களவிஜம் என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த வழக்கிற்கான கட்டளை வழங்கப்பட்டது. குறித்த கட்டளையில் ஏற்கனவே நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மீறப்பட்டிருப்பாதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்தோடு நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு விரோதமாக குருந்தூர்மலையில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.


மேலும் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி களவிஜயத்தின்போது நீதிமன்றம் அவதானித்த கல்லொன்று அங்கு இருக்கவில்லை எனவும், அதேவேளை அங்கு புதிதாக பெயர்ப்பலகை ஒன்று அவதானிக்கப்பட்டாதகவும், அதனைபோல இன்னும் பலவிடயங்களையும் இரண்டாவது களவிஜயத்தின் போது அவதானிக்க முடிந்ததாக நீதிமன்றம் இதன்போது சுட்டிக்காட்டியது.

குறித்த குருந்தூர்மலைப் பிரதேசத்தில் நீதிமன்றம் வழங்கிய கட்டளையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்திற்கு இருப்பதாகவும், எனினும் நீதிமன்றால் இதற்குமுன் வழங்கப்பட்ட கட்டளைகள் குறித்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் சரிவரப் பின்பற்றவில்லை எனவும், நீதிமன்றக்கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டிருப்தாகவும் நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா வடக்கில் இரு ஆண்டுகளில் இரண்டு கோடி மோசடிஅறவிட முடியாத கையறு நிலையில் நிர்வாகம்

- நடராசா லோகதயாளன்



வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர்களின் சம்பளம், கடன்கள், படிகள் என 2 கோடியே 20 லட்சம் ரூபா மோசடியில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஈடுபட்டுள்ளார். இருப்பினும் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத நிலைமையும் மோசடி நிதியை மீளப்பெறாத சூழலே நீடிக்கின்றது. இந்த மோசடியை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் இந்த செய்தியாளர் அம்பலப்படுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2021ஆம் ஆண்டு வரை இந்த மோசடி இடம்பெற்றிருப்பதாக மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் மேற்கொண்ட ஆரம்ப புலனாய்வு விசாரணை அறிக்கையில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

அந்த கல்வி வலயத்திலே 2013 ஏப்ரில் முதல் 2015 மார்ச் வரையான இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 57 ஆயிரத்து 970 ரூபா மோசடி செய்யப்பட்டு அவை அங்கே பணியாற்றும் ஒருவர் தனது 4 வங்கி கணக்கு இலக்கங்கள் ஊடாக அப்பணத்தை கையாடல் புரிந்துள்ளார். இந்த வழியை வலய மட்டம் கண்டுபிடிக்காத நிலையில் அதே வழியை பின்பற்றி அதன் பின்பு இப்பணிக்கு வந்த உத்தியோகத்தரும் 2018 யூன் முதல் 2020 ஒக்டோபர் வரையான 28 மாத காலப் பகுதியில் தனது 6 வங்கி கணக்குகள் ஊடாகவும் இந்த 2 கோடியே 4 லட்சத்து 27 ஆயிரத்து 459 ரூபா பண மோசடி செய்துள்ளார்.

இக்காலப் பகுதியில் 2019ஆம் ஆண்டு மே மாதம் வங்கியில் இருந்து திருப்பி அனுப்பிய 5 லட்சத்து 72 ஆயிரத்து 587 ரூபாவினையும் இதே உத்தியோகத்தர் தனது கணக்கிற்கும் வேறு இரு உத்தியோகத்தர்கள் கணக்கிற்கும் பங்கிட்டு வைப்புச் செய்து மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வாறு மோசடி செய்த உத்தியோகத்தர் தான் பணியாற்றிய 3 ஆண்டுகளில் பெற்ற அரச சம்பளம் 20 லட்சம் ரூபாவாகவும் மேற்கொண்ட மோசடியின் மூலம் ஈட்டிய தொகை 2 கோடி ரூபாவாகவும் காணப்படுகின்றது.

இரண்டு கோடி ரூபாவை மோசடி செய்தவர் வலய கல்வி அலுவலகத்தில் தான் பணியற்றும் அதே பொறுப்பில் முன்பு பணியில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் பெயரிலும் சுமார் 13 லடசம் ரூபா பணம் வைப்புச் செய்துள்ளார் என்பதும் ஆரம்ப புலன் விசாரணையில் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.



2013 ஆம் ஆண்டு முதல் இதே வகையான மோசடி ஆரம்பித்து கண்டு பிடிக்கும் வரையான காலத்தில் வவுனியா வடக்கு கல்வி அலுவலகத்தில் 5 கணக்காளர்கள் மாறியுள்ளதோடு 3 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், 3 விடய எழுதுநர்கள் என 11 பணியாளர்கள் மாற்றலாகியுள்ள போதும் மோசடி மட்டும் கண்டு பிடிக்கப்படவில்லை.

தற்போது இது 2021 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டிருப்பினும் அதிக தொகையை எடுத்த ஒரு உத்தியோகத்தர பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டு எஞ்சிய உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை அல்லது விசாரணைக்குள்ளும் உள்வாங்கப்பட்டாலும் பொறுப்பாக பணியாற்றிய மேலதிகாரிகள் எவரும் உள்ளடக்கப்படவில்லை.

இருந்தபோதும் மாகாண பிரதம செயலாளரினால் இது தொடர்பான ஆரம்ப புலனாய்வு விசாரணை ஒன்று இடம்பெற்றுள்ளது. அதில் இந்த வலயத்தில் பணியாற்றிய 8 கணக்காளர்கள், 3 வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட 35 பேரிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டு கோவையிடப்பட்டுள்ள போதும் எந்த சட்ட நடவடிக்கைக்கும் கொண்டு செல்லப்படவில்லை என மாகாண கல்வித் திணைக்களத்திடம் தகவல் அறியும் சட்டம் மூலம் கோரிய வினாவிற்கு வழங்கிய பதிலில் உறுதி செய்கின்றது.

இவ்வாறெல்லாம் மோசடியில் ஈடுபட்ட உத்தியோகத்தர் ஓர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும், 2013 ஏப்பிரல் முதல் 2015 மார்ச் வரையான இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 57 ஆயிரத்து 970 ரூபா மோசடி செய்த உத்தியோகத்தர் வழியை பின்பற்றி மோசடியில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு 2013 ஏப்பிரல் முதல் 2015 மார்ச் வரையான இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 57 ஆயிரத்து 970 ரூபா மோசடி செய்த உத்தியோகத்தர் இதே மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் தற்போது வரையில் ஆசிரியராக பணியாற்றுகின்றார்.

இந்த நிலையில் இரண்டு கோடியை தாண்டிய பணத்தை மோசடி செய்த உத்தியோகத்தரை தற்போது திணைக்களத்தினால் எங்கு இருக்கின்றார் எனக் கண்டுகொள்ளவும் முடியவில்லை. இவை தொடரபில் 35 பேரடம் ஆரம்ப புலனாய்வு விசாரணை மேறகொண்ட வடக்கு மகாண பிரதம செயலாளர் அலுவலகம் 9 உத்தியோகத்தர்கள் மீது வரைபுக் குற்றச் சாட்டுக்களை 2021-06-01 இல் சமர்ப்பித்துள்ளது.

இவ்வாறெல்லாம் மோசடி இடம்பெற்று ஆரம்ப புலன் விசாரணை, வரைபுக் குற்றச் சாட்டு என திணைக்கள நடவடிக்கை உள்ளக ரீதியில் இடம்பெற்றாலும் மோசடி அல்லது கையாடல் செய்த பணம் மட்டும் மீளச் செலுத்தப்படவில்லை.

பணத்தை மீளச் செலுத்த தவறிய உத்தியோகத்தரிற்கு எதிராக எந்த நீதிமன்றிலும் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கு தாக்கல் செய்யாதமை மட்டுமல்ல வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற இந்த நிதி மோசடி தொடர்பில் வவுனியா மாவட்டத்தின் எந்தப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடும் பதிவு செய்யப்படவும் இல்லை எனபது மேலும் பல ஐயங்களை ஏற்படுத்துகின்றது. இதற்கு ஒப்பிற்கு வெறுமனே கொழும்பில் உள்ள லஞ்ச, ஊழல் தடுப்பு பிரவில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யாதமை மட்டுமன்றி வவுனியா மாவட்டத்தில் இந்த நிதி மோசடி தொடர்பில் வவுனியா மாவட்டத்தின் எந்தப் பொலிசிலும் முறைப்பாடு செய்யாதமைக்கு ஓர் அதகாரம் மிக்க அரசியல்வாதியின் செல்வாக்கே காரணம் எனப் பேசப்படுகன்றது.

மாகாணத்தின் மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் ஓர் திணைக்களத்தில் மோசடி அல்லது களவு இடம்பெற்றால் அதற்கு திணைக்கள ரீதியில் ஓர் விசாரணையும் சட்ட ரீதியில் உடனடியாக பொலிசில் ஓர் முறைப்பாடும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதே பொதுவான ஏற்பாடு என்றார்.

இவ்வாறு அரச திணைக்கள மோசடிகளில் இழக்கும் நிதியை மீளப்பெறுவது என்பது மிக அரிதாகவே இருப்பதோடு இவற்றினை அறவிட சட்ட ஏறபாடுகள் போதிய அளவில் இல்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# அன்பின் தொனி - 703

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஒப்புகொடுத்தல் (அர்ப்பணிப்பு) - Commitment

2. தேவனுடைய இராட்சியத்திற்காக சேவிக்கின்ற வாழ்க்கை

அவனவன் பெற்றவரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பலகிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன், ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன், எல்லா வற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக, அவருக்கேமகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். - 1 பேதுரு 4: 10-11

3. கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ வேண்டுமென்ற வைராக்கியமுள்ள வாழ்க்கை

சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அதுஎன்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது, சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு, உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதே. ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப் பதே எனக்குப் பலன். நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். - 1 கொரிந் 9: 16-19

4. தயாளகுணமுள்ள உள்ளத்தோடு பொருளாதாரத்தை கட்டுப்படுத்திய வாழ்க்கை

பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுகவிதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருகவிதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிட த்தில் சகலவிதகிருபையையும் பெருகச் செய்யவல்லவராயிருக்கிறார். - 2 கொரிந். 9: 6-8

5. வாராவாரம் ஐக்கியமாக ஒன்றுகூடி ஆராதிப்பது

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகியதிரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்தமார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியானமகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சிநீங்கத் தெளிக் கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருத யத்தோடும் விசுவாசத்தின் பூரணநிச்சயத்தோடும் சேரக்கடவோம். - எபிரேயர் 10: 19-22

என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலைவிலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இ'டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன், கர்த்தருடையவாய் இதைச் சொல்லிற்று. - ஏசாயா 58: 13-14

தொடரும்...



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

# இவ்வார ராசிபலன்

**01-09-2023 வெள்ளி தொடக்கம் 07-09-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** தனவரவுகள் பெருகும் வாரம். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியம் ஜெயமாகும். முயற்சியில் வளர்ச்சி அடையும். ரகசியம் காப்பது நல்லது. உதவிகள் குவியும். புதிய சிந்தனை உதயமாகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பொருள்வரவு ஏற்படும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். நல்ல செய்திகள் நாடி வரும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். திடீர் பயணம் ஏற்படும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வீடு மனை யோகம் உண்டு. எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். பங்குச்சந்தை லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,P




**ரிஷபம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். விவாதம் வாக்கு வாதங்களாக மாறும். தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். உடல்நலம் சீராகும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கடன் தொல்லை தீரும். மன அமைதி அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். அலைச்சல் ஆதாயம் தரும். பால் தானம் பாவம் போக்கும். வெற்றி எட்டும் காலம். எதிர்பார்த்த வி‘யம் தாமதமாகும். பணதேவைகள் அதிகரிக்கும். பதவி உயர்வு ஏற்படும். நல்லச்செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். பிரார்த்தனை நன்மை தரும். கருத்து வேறுபாடுகள் விலகும். தொழில் வளர்ச்சி பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். பூமியால் நன்மை உண்டு. நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். சுபச்செலவு அதிகரிக்கும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். அவமானங்கள் அகலும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். கமி‘ன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**மிதுனம்:** குடும்ப பாசம் அதிகரிக்கும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. ஆனந்தம் குடிகொள்ளும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். பொருளாதார நிலை உயரும். வெகுமதி பெருகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். தொழில் லாபம் கூடும். நன்மைகள் தொடரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் தரும். எதிரிகள் பலம் குறையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மிகவும் சுதந்திரமாக செயல்படுவீர்கள். காதல் கசக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,I




**கடகம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமி‘ன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். பணிவான பேச்சுக்கள் மன நிம்மதியை தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும் தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பயணம் தவிர்ப்பது நல்லது. அரசு வகையில் ஆதாயம் சேரும். கடன் சுமை குறையும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். வீண் வம்புகள் விலகும். மெத்தனப் போக்கு மாறும். போட்டிகள் உருவாகி மறையும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஆதாயம் பெருகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம் குருபகவான், அதிர்ஷ்ட எண்: 2,5,9,4
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**சிம்மம்:** எண்ணிய காரியத்தில் வெற்றி கிட்டும் வாரம். வாழ்த்துக்கள் கிடைக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். உடல்நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நெருக்கடிகள் குறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்புகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். அற்புதமான காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 1,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**கன்னி:** பெருமைகள் கிடைக்கும் வாரம். பதற்றம் குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி தரும். வழக்குகள் சாதகமாகும். விவசாயம் பலன் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விரோதங்கள் அகலும். உத்தியோக மாற்றம் ஏற்படும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெருகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். கல்வியில் பெருமை சேரும். நன்மதிப்பு கூடும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். காரிய வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. பகை மாறும். கௌரவம் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**துலாம்:** அருமையான வாய்ப்புக்கள் அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். பணமும், பாராட்டுக்களும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனை அகலும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். செயல்பாட்டில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மனச்சுமை குறையும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். இலக்கிய ஆர்வம் கூடும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 8,6,5,4
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**விருச்சிகம்:** இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியை தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. வெகுமதி தேடி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பெற்றோரின் அன்பு கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தாய் தந்தை உதவி உண்டு. மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**தனுசு:** அசையா சொத்துக்கள் சேரும் வாரம். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சி பலன் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். பயணம் தவிர்ப்பது நல்லது. கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். பணப்புழக்கம் சரளமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய்கள் அகலும். செல்வாக்கு உயரும். பெயர், புகழ் கௌரவம் உயரும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிர்ப்புகள் அடங்கும். இடமாற்றம் நன்மை தரும். முன்கோபத்தை தவிர்க்கவும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். மனப்பாங்கு ஏற்படும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 1,9,7,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K

(தொடர்ச்சி 30 பக்கம்)

# இந்திய பாதுகாப்பு அமைச்சரின் வருகையை பயன்படுத்துங்கள் தமிழ் கட்சிகளிடம் அன்ன ராசா வேண்டுகோள்

இலங்கை வரவுள்ள இந்தியா பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம், கடலில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் பாதுகாப்பு அமைச்சரின் வருகையை சந்தர்ப்பமாக பயன்படுத்த வேண்டும் என முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட கடத்தொழிலாளர் சமாசத்தின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள் விடுத்தார்.

வியாழக்கிழமை யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திபின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் இருந்து இலங்கையின் வடக்கு கடல் ஊடாக தொடர்ச்சியாக அதிக-ளவிலான போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு வருகிறது.

வடக்கு கடலூடாகக் கடத்தப்படும் போதை பொருட்கள் தரை மார்க்கமாக தென்னிலங்கை நோக்கி கொண்டு செல்லப்படுவதுடன் குறித்த கடத்தல் செயல்பாட்டில் பண முதலைகள் மற்றும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரை இலக்கு வைத்து ஐஸ் போதைப்பொருள் வர்த்தகம் வேகமாக இடம்பெற்றுவருகிறது.

குறித்த வியாபாரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு சில பிரபல வர்த்தகர்கள் ஈடுபட்டு வருவதாக அறியக் கிடைக்கும் நிலையில் அவர்கள் தொடர்பில் பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் வடக்கு கடலூடாக இம்பெறும் போதை வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதற்கு இந்தியக் கடற்படையின் உதவி அவசியமாகக் கருதப்படும் நிலையில் இலங்கை வருகை தரும் இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சரிடம் தமிழ் கட்சிகள் பேசி எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்.

இந்தியாவிடம் வழக்கமாக 13வது திருத்தம் அரசியல் தீர்வு என தமிழ் கட்சிகள் பேசிக் கொண்டிருக்கும் நிலையில் இம்முறையாவது சட்டவிரோத போதை வியாபாரம் மற்றும் எல்லைதாண்டிய இந்தியப் படகுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரிடம் பேசுங்கள்.

ஏனெனில் வடக்கு மாகாணத்தை தளமாக கொண்டியங்கும் போதைப் பொருள் வியாபாரம் எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வை சீரழித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.




## இவ்வார ராசிபலன்

(29 பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** திருப்புமுனையைச் சந்திக்கும் வாரம். சச்சரவுகள் அகலும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். காதலில் வெற்றிக் காண்பீர்கள். உடல்நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளியூர் பயணம் உண்டு. இனிப்பான செய்திகள் வரும். வியாபாரம் வெற்றித் தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் தீரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். புதுமையை விரும்புவீர்கள். சகோதர வழியில் கவனம் தேவை. மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தந்திரமாக செயல்படுவீர்கள். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். வேலைப்பளு கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். தெய்வ நம்பிக்கைக் கூடும். முயற்சிகள் தாமதம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தா, அதிர்ஷ்ட எண்: 4,9,2,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உறவும், வரவும் கிடைக்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். பயணம் உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். பெருமிதம் நிறைந்த காலம். கலவரமான சூழ்நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். ஆரோக்கியம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். சாதனை படைக்கும் காலம். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு இனிக்கும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் ஆதிக்கம் உயரும். தீர்த்த யாத்திரை உண்டு. பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மன பயம் ஏற்படும். உடம்பில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**மீனம்:** ஆரோக்கியம் சீராகும் வாரம். திருமகள் கிருபைகள் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். வேலைப்பளு குறையும். பதவி உயர்வு கிட்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். திக்கற்ற நிலை மாறும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் கூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை நீங்கும். வீண் வம்பு அகலும். காதல் கை கூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. நலமே விளையும் வாரமாகும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Z

## கடந்தவையும் கடப்பவையும் (69)

*உள்நாட்டில் இருந்தாலும் சிலவிடத்துச் செய்திகளை - அங்கிள்
நல்லாவே உள் உறைக்கச் சொல்லுகிறார்*

*அடுத்ததாகப் போகுமிடம் அவருக்கு அத்துப்படி - 'இருவரும்
படுத்துகிறார்' எனச்சொல்லி பக்கத்தில் இருந்தவர்கள்*

*எட்டமாயப் போய் இருக்க எக்கச்சக்கமாய்
மாட்டிக்கொண்ட காரணத்தால் கேட்டுத்தான் ஆகவேண்டும்*

*போகுமிடம் பெரிய இடம் - தமிழர்களின்
பெரும் அறிவுக் கருவூலம் பெருமளவில்*

*சிந்தைக்கு விருந்தளித்த அறிவுக் களஞ்சியமது
அன்றொருநாள் சிதைந்து சூனியமாய்க் கிடந்தது - என்ன*

*நடந்தது என்பது தெரியுமா உமக்கு? - என
வருத்தமொடு கேட்டவரின் முகம் கறுத்தது*

*கிண்டலும் கேலியுமாய் கதைத்துவந்த மனிதனுக்குள்
அன்றைய அக்கொடூரம் வெந்தபுண்ணாய் இன்னும்*

*'அரசாங்கம் அமைத்ததல்ல புலமைசார் பெரியவர்கள்
பெரும் சிரம்ப்பட்டுக் கட்டிவைத்த தொல்பொருள் வைப்பகம்*

*யாராலும் மீளப் பெறமுடியா அரிய நூல்களொடு - பல
புராண வரலாற்றுத் தொல்லியற் சான்றுகளும்*

*நூற்றாண்டுக் கதைகள் சொன்ன ஏட்டுச்சுவடிகள் - காலாகாலமாய்
காக்கப்பட்ட தமிழ் மரபும் வரலாறும் - இன அழிப்பு*

*நோக்கம் கொண்ட சிலரால் தீக்கிரையாக்கப்பட - எஞ்சுவதைக்
காக்க என அங்கலாய்த சிலரையும் - உள்*

*நுழைய விடாக் கொடூரம் அங்கு - பாடசாலை
வளவிலுள்ள மாடியில் நின்றபடி நூலகம்*

*எரிவதைப் பார்த்ததிர்ந்து இடிந்துபோய் - மாரடைப்பால்
சரிந்து போனார் வண. பிதா தாவீதும் - இவையேதும்*

*தெரியுமா உமக்கு? - எனக் மீண்டும் கேட்ட
பெரியவரின் உளக்குமுறல் புரிந்தவளாய்*

*'ஆம்,*

*பெரியவர் செல்லப்பா என்பவரால் அவர் வீட்டில் - அவர்
தெரிந்தெடுத்த சில நூல்களோடு தொடக்கியதும் - பின்*

*முப்பத்தி நாலில் யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில்
எண்ணூற்றி நாற்பத்தி நான்கு நூல்களாகக் கூடியதும் - பின்*

*ஐம்பத்தி ஒன்பதில் இப்போ இருக்கும் இடத்தில்
தென்கிழக்கு ஆசியாவின் பெரிய நூலகங்களில்*

*தனக்கும் ஓர் தனியிடத்தைப் பெற்றதாய் விளங்கியதும் - அன்று
கனக்கப் பேருக்கு படிக்க உதவியதும்*

*எண்பத்தி ஒன்றில் முற்றாக எரிக்கப்பட
தொண்ணூற்று ஏழாயிரம் நூல்களும் தீக்கு*

*இரை ஆகியதும் கேட்டும் படித்தும் அறிந்ததுண்டு' என
நிரையாகச் சொன்னபோது' ம்... - என*

*பெரிதாக அவர் விட்ட பெருமூச்சோடு - ஒரு
சிறிய அமைதியுடன் வண்டியும் வந்தது*

*நூலகத்திற்குச் சற்று நெருக்கமாக...*

*( தொடரும்)*

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com



Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4



உதயம் 1430 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 1, 2023


# "இலங்கையில் வடக்கு கிழக்குத் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் கரங்கோர்த்து நின்றால் அவர்களின் பலம் இன்னும் ஓங்கி நிற்கும்"

## கனடியத் தமிழர் காங்கிரஸ் நடத்திய "தெருவிழாவில்" இலங்கைப் மனோ கணேசன் தெரிவிப்பு



இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் கொழும்புத் தலைநகரிலும் வாழும் தமிழர்களும் மலையகத் தமிழர்களும் தமிழர்களாக கரங்கள் கோர்த்து நின்றால் அவர்களின் பலம் இன்னும் ஓங்கி நிற்கும் என்று நான் நம்புகின்றேன். அப்போது தான் அங்கு தமிழ் மக்களை அடக்கியும் ஒடுக்கியும் அடிமைப்படுத்தியும் நடத்திவரும் பெரும்பான்மையினர் எம்மை நடுக்கத்தோடு திரும்பிப்பார்ப்பார்கள். அதற்கு மேலாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக அதிகளவில் கனடாவில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் இலங்கை வாழ் தமிழர்களை நோக்கி "நாங்கள் உங்களுக்காக இங்கே இருக்கின்றோம். நீங்கள் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை" என்று குரல் கொடுத்தால்தான் எம்மை அடக்கி ஒடுக்க நினைக்கும் எதிரிகள் அஞ்சுவார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நேர்மையான அரசியல் தலைவர் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும் — சரவணபவன் தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நேர்மையான அரசியல் தலைவர் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும்.
சிங்கள ஆட்சியாளர்கள் யாரும் எங்கள் குரல்களைச் செவிமடுக்கத் தயாரில்லை. என்றாலும் அவர்களில் நேர்மையான ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவரை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். போதாததற்கு தமிழ் வாக்குகள் ,ல்லாமலேயே வெல்லலாம் என்ற வெறி அவர்களுக்கு ஊட்டப்பட்டால் தமிழர்கள் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். ,ப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நேர்மையான ஒருவரை தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

# கடந்த சனி ஞாயிறு 26ம் 27ம் திகதிகளில் ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்ற "தமிழர் தெருவிழா"




கடந்த சனி ஞாயிறு 26ம் 27ம் திகதிகளில் ஸ்காபுறோவில் "தமிழர் தெருவிழாவை கனடிய தமிழர் பேரவை பெருமையுடன் நடத்தி முடித்தது.
மேற்படி இரண்டு நாட்களும் இரண்டு மேடைகளிலும் நான்கு இசைக்குழுக்கள் இசை ரசிகர்களின் ரசிப்புத் தன்மைக்கு தீனி போடும் வகையில் இசை நிகழ்ச்சிகளை மேடையேற்றின.
மேற்படி இசை நிகழ்ச்சிகளில் பிரபல தென்னிந்திய திரையிசைப் பாடகரும் பாடல் போட்டிகளின் நடுவர்களில் ஒருவருமான விஜேய் பிரகாஸ் இங்கிலாந்திலிருந்து அழைக்கப்பட்டிருந்த பாடகி மதுலானி பேர்னாண்டோ மற்றும் கனடியப் பாடகி தாமிரா சங்கர் நல்லதம்பி ஆகி-யோரோடு இணைந்து பாடல்களை வழங்குவகையும் இங்கு காணப்படுகின்ற படங்களில் காணலாம்.

# கனடா ஸ்காபுறோவில் கடந்த சனி ஞாயிறு தினங்களில் வெற்றிகரமாக நடைபெற்ற "தமிழர் தெருவிழா"



கனடிய தமிழர் பேரவையினரால் நடத்தப்பெற்ற இந்த இரண்டு நாள் தெருத் திருவிழா நிகழ்ச்சி இரண்டு நாட்களும் கலந்து சிறப்பித்த இலங்கையில் தற்கால அரசியல்வாதியும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவர்களும் வன்னி மண்ணின் புகழ்பெற்ற பாடகர் சாந்தன் அவர்களின் புதல்வர் சா. கோகுலன் அவர்களும் நேற்று வியாழக்கிழமை கலை மற்றும் வர்த்தகம் சார்ந்த நண்பர்கள் சிலரைச் சந்தித்து உரையாடினர்.
மேற்படிச் சந்திப்பின் போது. அப்போது அங்கு சந்தித்து உரையாடி மகிழ்ந்த நண்பர்களில் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நலத்தம்பி மற்றும் பிரின்ஸ் ஜெயரட்ணம் மற்றும் நண்பர்கள் அவர்களுக்கும் மனோ கணேசன் அவர்கள் நன்றி தெரிவித்தார்


# "ஸ்ரீவரசித்தி விநாயகருக்கும், என்குருநாதர் சிவாகம வித்வான் நா. சோமாஸ்கந்த குருக்கள் அவர்களுக்கும் , என் துணைவியாருக்கும் இவ்விருதினை சமர்ப்பிக்கின்றேன்"

## தமிழ்நாட்டில் விருது பெற்று கனடா திரும்பிய சிவஸ்ரீ விஜயகுமாரக்குருக்கள் உவகையுடன் தெரிவிப்பு




தமிழகம் திருவா-வடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களால் மயிலாடுதுறை சிவபுரம் வேதா-கம கல்லூரி முதல்வர் ஆகம்ப்பிரவீணர் சிவஸ்ரீ சுவாமிநாத ரவிசிவாச்சார்யார் அவர்களின் குருவருள் நல்லாசியுடன் மயிலாடுதுறை அபயாம்பிகா சமேத மயூரவநாத சுவாமி கும்பாபிசேக பெருவிழாவில் "சிவாகமகலாநிதி" எனும் கௌரவ விருது 30-08-2023 வழங்கப்பட்டது
மேற்படி விருது பெற்ற ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தான பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை நிகழ்வில் மேற் கண்டவாறு தெரிவித்தார்
அத்துடன் தனக்கு வழங்கப்பெற்ற விருது மற்றும் பாராட்டு மடல் ஆகியவற்றை அவரது குரவான சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களிடம் வழங்கினார்.
அத்துடன் தனக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற பொற்கிழியை தனது துணைவியாரிடம் வழங்கினார்.

# தமிழ்நாட்டிலிருந்து "இசைக் கவி" ரமணன் கனடா வருகின்றார



தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் பத்திரிகையாளரும் இசையோடு இணைந்த சிறந்த உரைகளை ஆற்றிய பெருமைக்குரியவருமான "இசைக் கவி" ரமணன் கனடாவிற்கு வருகை தரவுள்ளார்.
எதிர்வரும் செப்டம்பர் 9ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் இசையோடு இணைந்த உரையரங்கில் "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.
ஆரபி படைப்பகம் வழங்கும் இந்த நிகழ்வு தொடர்பான விபரங்களுக்கு
647 762 9512,
647 891 7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

(உள்ளே விபரமான விளம்பரம் 24ம் பக்கத்தில்)